கம்பன் மணி மலர்

ரௌத்திரி 1981



கம்பன் கழகம் - காரைக்குடி

கம்பன் மணி மலர்

1981

ரௌத்திரி பங்குனி ௫ முதல் ௮ வரை

1981 மார்ச் 18 முதல் 21 வரை நிகழ்ந்த

43 ஆவது கம்பன் திருநாள் வெளியீடு.

பன் கழகம், கம்பன் மணி மண்டபம், காரைக்குடி-2.

உள்ளுறை

முன்னுரை

கம்பன் ஓர் உலக மகாகவி : கவிச்சக்கரவர்த்தி. காப்பிய வானில் கதிரவனாய் நின்று ஒளிர்பவன். இவன் கல்லாத கலையும் வேதக்கடலும் உலகில் இல்லை எனலாம். ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவன் எந்தைபிரான் கம்பன்.

முத்தரையரிடமிருந்து தஞ்சைப் பகுதியை மீட்டுச் சோழப் பேரரசை நிறுவிய விஜயாலயன் காலத்தில் மிளிர்ந்தவன் கம்பன். விஜயாலயன் மகன், கோதண்டராமன் எனப் பெயர் சூடிக் கொண்ட ஆதித்தன் (கி.பி. 871-907) காலத்தில், அவனால் பெரிதும் மதிக்கப்பெற்றவனாய் விளங்கியவன் கவிச்சக்கரவர்த்தி.

கம்பனை, பெற்ற தந்தையினும் பேணிக் காத்து நின்றவர் சடையப்ப வள்ளல். இன்று கதிராமங்கலம் என விளங்கும் வெண்ணெய்நல்லூர்தான் சடையப்பர் வாழ்ந்த வளநகர். கம்பனின் பல்துறைப் புலமையும், எல்லையிலாக் கவிதா சன்னதமும் கற்றோரையெல்லாம் ஈர்த்து நின்றன. முடியுடைத் தார்வேந்தர்களும் ரசிகப் பெருமக்களும், கம்பனைப் பெரிதும் மதித்துப் போற்று வாராயினர்.

கம்பனின் பேராற்றற் பெரும்புலமைக்கு என்றும் கட்டியங் கூறிக்கொண்டு விளங்குவது அவன் அருளிய இராமாவதாரம் என்னும் இராம காதை ! தமிழ் மொழியின் வளத்திற்கும், தமிழர் தலை நிமிர்வுக்கும் ஒப்பற்ற உதவியாய் நின்று நிலவுவது கம்பராமாயணம். தமிழ்மொழியின் தனிப் பெரும் காப்பியத்தை, என்னப்பன் கம்பன், சடையன் பதியாம் வெண்ணெய்நல்லூரில் அரங்கேற்றி னான். மன்னர்களும், மறையோர்களும், ரசிகப் பெருமக்களும், அறம் பேணும் பொதுமக்களுமாக நிறைந்திருந்த கண்ணியம் நிறைந்த அவைக்களத்திலே அரங்கேற்றம் நடைபெற்றது. பவித்திரமான அக்காப்பியம் அரங்கேறிய புனித விழா ஒரு பெரும் திருவிழாவாக, "நாவலோ, நாவல் !" என்று நடந்திருக்க வேண்டும்.

சகாப்தம் 807 ; கலியாண்டு 3986-க்குச் சரியான விசுவாவசு-பங்குனி 4-ஆம் தேதி (கி.பி. 886 பெப்ருவரி—23) புதன்கிழமை அஸ்த நட்சத்திரமே இராமாவதாரம் அரங்கேறிய பெருநாள். அன்றுதான் என்னுடையன் கம்பனை, "கவிச்சக்கரவர்த்தி" என்று அறிவுடையுலகம் மனமாரப் பாராட்டி விருதளித்து மகிழ்ந்தது.

கம்பன் பிறந்த நாளை நாமறிய எவ்வகைச் சான்றுகளும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், "கவிச்சக்கரவர்த்தி" பிறந்த நாளை நாம் நன்கறிவோம். பங்குனி-அத்த நாளில்தானே "கவிச் சக்கரவர்த்தி" பிறந்தான் ! எனவே, இராமாவதாரம் அரங்கேறியதும் "கவிச்சக்கரவர்த்தி" என்ற விருதுப்பெயரைக் கம்பன் ஏற்றருளியதுமான அந்தப் பங்குனி அத்த நாளையே கம்பன் திருநாளாக— ஜன்ம நட்சத்திரமாக ஏற்று விழா எடுத்துவருகிறோம். மகம், பூரம், உத்தரம் ஆகிய முதல் மூன்று நாட்களில் காரைக்குடியில் உள்ள கம்பன் மணிமண்டபத்திலும், பங்குனி அத்த நாளில் நாட்டரசன் கோட்டையில் கவிச்சக்கரவர்த்தி சமாதிகொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் கம்பன் பள்ளிபடைத் திருக்கோயிலிலும், தூய இலக்கியப் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது கம்பன் கழகம்.

இவ்விழா, எவ்விதமான, சாதி, சமய, மொழி, கட்சி, பால் வேறுபாடின்றி யாவரும் கலந்து மகிழும் அருமையுடையதாகும். புலவர்களும், கலைஞர்களும், கவிஞர்களும், திறனாய்வாளர்களும், ரசிகர்களுமாக ஆயிரக்கணக்கானவர்கள் ஆண்டுதோறும் வந்து கலந்து கம்பன் புகழ் பாடியும், கம்பன் புகழ் பருகியும் பெருமை செய்கின்றனர்.

கம்பன் திருநாட்செலவு ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வருகிறது. நாற்பத்திரண்டு ஆண்டுகட்கு முன் முந்நூற்றைம்பது ரூபாய் அளவில் தொடங்கிய கம்பன் திருநாளின் செலவு ஆண்டுதோறும் வளர்ந்து, எத்துணைச் சிக்கனமாக நடத்தினும், ரூபாய் பதினெண்ணாயிரத்திற்கு மேல் உயர்ந்துவிட்டது. விழாச்செலவுக்காக இதுவரை யாரையும் நன்கொடை கேட்டு அணுகிய தில்லை. நிலையறியும் உடனுறை நல்லன்பர்கள் தாங்களாகவே முன்வந்து உவந்தளிக்கும் நன்கொடை, செலவின் ஒரு சிறு பகுதியையே ஈடு செய்கிறது.

இந்நிலையில் கம்பன் பற்றிய கட்டுரைகளைத் தொகுத்துப் பயனுள்ள மலர் வெளியிடுவ தென்றும், அதில் விளம்பரங்கள் வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பெற்றது. அதற்குக் கம்பன்பால் அன்பும் அடியேன் பணியின்பால் பரிவும் உள்ள அன்பர்கள் பலர் விளம்பரங்கள் உதவி, இப்புனிதப் பணிக்கு ஆக்கம் தர முன்வந்தனர்.

இவர்கட்கெல்லாம் எளியேன் என்ன கைம்மாறு இயற்றவல்லேன்? என்னப்பன் கம்ப னும், அவன் பரவிடும் முழுமுதற் பரம்பொருளும் இவ் அறவோர்கட்கும், இவர்களின் முயற்சி கட்கும், தொழில்துறை வாணிபங்கட்கும் எல்லா நலன்களையும் வளங்களையும் அருளிக் காத்தருள வேண்டுமென்று மன மொழி மெய்களால் வணங்கி வாழ்த்துகிறேன்.

எல்லா வகையாலும், முன்னரும், பின்னரும், கம்பன் திருநாளுக்கும், கம்பன் திருப்பணி கட்கும் உதவிய—உதவி வருகிற—அறவுள்ளம் படைத்த பெரியோர்கள் அன்பர்கள் யாவர்க்கும் என்றும் மறவா நன்றியுடன் பணிவார்ந்த வணக்கம் செலுத்தி மகிழ்கிறேன்.

இம்மலர் அச்சாகும் காலை உடனிருந்து பலவகையிலும் உதவிய அன்பர் திரு. 'சோமலெ' அவர்கட்கு எங்கள் நன்றி உரியதாகும்.

கம்பன் மணிமண்டபம்,
காரைக்குடி - 623 002.
18, மார்ச், 1981.

அன்பும் பணிவுமுள்ள,
கம்பன் அடிப்பொடி
செயலாளன், கம்பன் கழகம்.

அடுத்த ஆண்டில் கம்பன் திருநாள்

		மகம்	பூரம்	உத்தரம்	அஸ்தம்
துன்மதி	பங்குனி	22	2௩	உச	உரு
1982	எப்ரில்	4	5	6	7
		ஞாயிறு	திங்கள்	செவ்வாய்	புதன்

கம்பன் கழகங்கள் - முகவரியுடன்

1. கம்பன் கழகம்,
கம்பன் மணிமண்டபம்,
காரைக்குடி - 623 002.
[தொலைபேசி : 600]

2. கம்பன் கழகம்,
கம்பன் அருட்கோயில்,
நாட்டரசன்கோட்டை - 623 556.

3. கம்பன் கழகம்,
ஆமருவியப்பன் கோயில்,
தேரழுந்தூர் - 609 808
மாயூரம் வழி.

4. கம்பன் கழகம்,
சிராம விண்ணகரம்,
கள்ளிப்பட்டி-638 505,
Via Erode R. M. S.
[தொலைபேசி : 44]

5. கம்பன் கழகம்,
நாமக்கல் - 637 001.
சேலம் மாவட்டம்.

6. கம்பன் கழகம்,
சீதா கல்யாண மண்டபம்,
கோபிச்செட்டிப்பாளையம் - 638 452.
[தொலைபேசி : 84]

7. கம்பன் கழகம்,
116, முத்துமாரியம்மன் கோயில் தெரு,
புதுச்சேரி - 605 001.
[தொலைபேசி : 509]

8. கம்பன் கழகம்,
10, பெரிய அக்ரகாரம்,
ராசிபுரம் - 637 408,
சேலம் மாவட்டம்.

9. கம்பன் கழகம்,
மணி பீடர் பள்ளி,
கோயமுத்தூர் - 641 037,
[தொலைபேசி ; 35851]

10. கம்பன் கழகம்,
4, பி. சாலை ரோடு,
சேலம் - 636 001.
[தொலைபேசி : 3501]

11. கம்பன் கழகம்,
கற்பகச் சோலை
1, வெள்ளையன் செட்டியார் வீதி
கோட்டூர்புரம்
சென்னை - 600 085.
[தொலைபேசி : 411110]

12. கம்பன் கழகம்,
சித்ரா ஜுவுளி ஸ்டோர்ஸ்,
புதுக்கோட்டை - 622 001.
[தொலைபேசி : 650]

13. நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்,
கம்பராமாயண மண்டபம்,
1, பெருமாள் தெற்கு மாட வீதி,
பாளையங்கோட்டை - 627 002.

14. மலேசியக் கம்பன் கழகம்,
61, Jalan Hang Jebat,
MALACCA, (Malaysia)
(Phone : 3206)

15. கம்பன் கழகம்,
K. T. R. Perfumers,
திருவாரூர் - 610 108.

16. கம்பன் கழகம்,
"அன்பு நிலையம்",
55, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை - 614 601.
[தொலைபேசி : 75]

17. கம்பன் கழகம்,
62, கச்சேரித் தெரு,
திருப்பத்தூர் - 635 601.
வட ஆர்க்காடு மாவட்டம்.

18. கம்பன் கழகம்,
1, மாணிக்கம் பிள்ளை தெரு,
சிவகங்கை - 623 560.

19. கம்பன் கழகம்,
அநுமார் கோயில்,
பரமக்குடி - 623 707.

20. கம்பன் கழகம்,
13, E. B. காலனி,
காந்தி நகர், வேலூர் - 632 006.
வட ஆர்க்காடு மாவட்டம்

21. கம்பன் கழகம்,
8, சிங்கார முதலி தெரு,
நல்லியக்கோடன் நகர்,
திண்டிவனம் - 604 002.

22. கம்பன் கழகம்,
22, ஞானுதிக்கம் பிள்ளை தெரு,
கல்லுக்குழி,
திருச்சி - 620 020.

23. கம்பன் கழகம்,
8, இராஜ வீதி,
காஞ்சிபுரம் - 631 502.

24. கம்பன் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

25. கம்பன் கழகம்,
மதுரை.

26. கம்பன் கழகம்,
அவிநாசி - 638 654.

27. கம்பன் கழகம்,
37, மெயின் ரோடு,
கவுந்தப்பாடி - 638 455.
Via—Erode, R. M. S.

28. கம்பன் கழகம்,
23, காமராஜர் ரோடு,
பொள்ளாச்சி - 642 002.

29. கம்பன் கழகம்,
23-24, அன்னதானவிநாயகர் கோயில் தெரு,
பேட்டை,
திருநெல்வேலி - 627 004.

30. கம்பன் கழகம்,
தென் திருப்பேரை - 628 623
திருநெல்வேலி மாவட்டம்.

31. கம்பன் கழகம்,
வாழியூர் - 632 315,
வட ஆர்க்காடு மாவட்டம்.

32. கம்பன் கழகம்,
7-B, வாங்கப்பாளையம்,
சேலம் சாலை,
கரூர் - 639 006,
திருச்சி மாவட்டம்.

33. கம்பன் கழகம்,
4-A, டாக்டர் சரத் பானர்ஜி ரோடு,
கல்கத்தா - 25,
மே. வங்காளம்.

34. கம்பன் கழகம்,
34-P. 4, ஜவஹர் நகர்,
திருமங்கலம் - 626 706.

35. கம்பன் கழகம்,
பேராசிரியர் குடியிருப்பு,
கிழக்குத் தாம்பரம்,
600 059.

36. கம்பன் கழகம்,
57, பஜார் தெரு
பெரம்பலூர் - 621 212.

37. கம்பன் கழகம்,
மேலரத வீதி,
நாட்டரசன் கோட்டை - 623 556.

38. கம்பன் கழகம்,
2, பேட்டை பாக்யநாதம் தெரு,
கும்பகோணம் - 612 001.

39. கம்பன் கழகம்,
ஆலடிப்பட்டி-நல்லூர் 627 853
தென்காசி வட்டம்,
நெல்லை மாவட்டம்.

40. கம்பன் கழகம்,
9, வர்த்தகர் தெரு,
ராமேச்வரம் - 623 526,
[தொலைபேசி-24]

41. கம்பன் கழகம்,
"சோலை", 6 தாண்டல் கந்தசாமி தெரு,
ராஜபாளையம் - 626 117.

42. கம்பன் கழகம்,
கலா தனிப்பயிற்சிக் கல்லூரி,
கமர்ஷியல் சாலை,
உதகமண்டலம் - 643 001.

43. அகில இலங்கைக் கம்பன் கழகம்,
135, வாசிகசாலை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம், Srilanka.

கவிமணி
தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின்
வாழ்த்துப் பாக்கள்

**வையத்து நல்வாழ்வு வாழும் வழிகளெலாம்
ஐயமறக் காட்டும்!அரும்புலவன்—செய்யதமிழ்ப்
பாக்கடலில் இன்னமுதம் பாலித்த கம்பன்சீர்
நாக்கமழப் பாடுவோம் நாம்.**

கங்கை பெருகி அலைமோதிக்
கரைபு ரண்டு வருவதெனத்
தங்கு தடையில் லாதொழுகும்
தமிழின் அமுதம் ததும்பியெழப்
பொங்கு புகழ்சேர் இராமகதை
புகன்ற கம்ப நாடன்சீர்
எங்கும் பரவி இவ்வுலகில்
என்றும் வளர்க வளர்கவே.

ஆரி யத்தோ டரியதமிழ்
ஆழம் கண்ட பேரறிஞன்
தேரும் பிரமன் படைப்பெல்லாம்
திருத்தி அழகு செயவல்லோன்
யாரும் புகழக் கவியுலகில்
இராஜ ராஜன் எனத்திகழ்வோன்
பாரில் எங்கள் கம்பனெனப்
பாடிப் பாடி மகிழ்வோமே.

இனிய தமிழில் செந்தமிழில்
என்றும் தழைத்து வளர்தமிழில்
கனியும் பாலும் தேனும்கற்
கண்டும் அனைய கவிபுனைந்து
புனித ராமன் கதைசொன்ன
புலவர் பெருமான் புகழ்போற்றி
நனியிக் காரைத் திருநகரெம்
நாளும் வாழ்க வாழ்கவே.

வாழி தமிழ்மொழி வாழி தமிழ்நாடு
வாழிதமிழ்த் தொண்டர் மகிழ்ந்து.

ஆஸ்தான கவிஞர்
திரு. வே. ராமலிங்கம் பிள்ளை அவர்களின்
வாழ்த்துப் பாக்கள்

கம்பன் பெரும்புகழ் பாடிடுவோம்
கன்னித் தமிழ்க்கடல் ஆடிடுவோம்.

கவிதையின் உச்சம் அவன்பாட்டே
கலைகளின் சிகரம் அதன்மாட்டே
புவிதனில் கம்பனுக் கீடாகும்
புலவனைக் காண்பது பாடாகும் (கம்)

நம்பெரும் தமிழை உயர்வாக்கும்
நாயகன் கம்பன் பெயராக்கும்
ஐம்பெரும் பூதம் உள்ளளவும்
அவன்புகழ் குறையா தெள்ளளவும் (கம்)

உள்ளம் களித்திட ஒருபுலவன்
உணர்ச்சியை வளர்த்திட வெகுவலவன்
வெள்ளம் வருகிற வேகத்தில்
வீரம் புகுத்திடும் தேகத்தில் (கம்)

எத்தனை தரம் அதைப் படித்தாலும்
எப்படிப் பொருள்கொள ஒடித்தாலும்
நித்தமும் புதுப்புது நினைவுதரும்
நிரந்தர இலக்கியக் கனிஅதுவாம் (கம்)

புகழ்ந்திட வார்த்தைகள் போதாது
புனையினும் இகழுரை மோதாது
இகழ்ந்தவர் மனத்திலும் இனிப்பூட்டும்
இலக்கியச் சுவைகளை நினைப்பூட்டும் (கம்)

அன்பின் நலங்களை எடுத்தோதி
அறிவைத் துலக்கிடும் பெரும்ஜோதி
கம்பன் கவிதையைத் துறந்துவிடில்
கலையறி தமிழொலி மறைந்துவிடும் (கம்)

கலைவளர் காரைக் குடிகண்ட
கம்பன் கழகம் தடையின்றி
நிலையுள கலைத்தமிழ்க் கீர்த்திகளை
நீடுறச் செய்திடும் சீர்த்தியுடன் (கம்)

வாழிய கம்பன் கவியழகை
வாழ்த்திடு கம்பன் கலைக்கழகம்
ஊழியம் என்றுஇத் திருநாளை
உகந்திடும் அனைவரும் வாழ்ந்திடுவோம்.
(கம்)

எல்லிஸ் பாதிரியார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த

கம்பன் கவிகளில் சில

(அமரர் வி. ஜி. ஸ்ரீநிவாசன் உதவியது)

நீற ணிந்த கடவுணிறத்த வான்
ஆற ணிந்துசென் முர்கலி மேய்ந்தகிற்
சேற ணிந்தமு லைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டவே

(ஆற்றுப்)

The clouds which were of.the colour of the god who is covered by grey ashes while proceeding on their way, having arrived and grazed on the waters of the ocean, return like the young Goddess of felicity on whose breast is rubbed the yellow paste of the sweet smelling agil and like the dark body of him who is adorned by her splendor.

பம்பி மேகம் பரந்தன பானுவான்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்
அம்பி னாட்டுது மென்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரி யெழுவது போன்றவே

(ஆற்றுப்)

The clouds collecting spread abroad, and it seemed as if Mount Imeiyam, the father-in-law of Siven. being over-heated by the sun, the ocean had raised itself to this region to bathe the broad mountain in its waters.

புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்வன தாரைகள்
உள்ளி யுள்ள வெலாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே

(ஆற்றுப்)

Beholding the renowned and mighty mountain shining like gold, the clouds poured down their streams like pensilc threads of silver, bounteous as the generous, who, from the impulse of their own minds, dispense their gifts with delight.

தலையு மாகமுந் தாளுந் தழீஇயதன்
விலைநி லாதிறை நின்றது போலவே
மலையி னுள்ளவெ லாங்கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்ததவ் வெள்ளமே
(ஆற்றுப்)

Embracing at once the head, the breast and the feet, and stopping for an instant only, the flood, having collected together everything buoyant within the mountain, swept it away, as a woman who sells her favors for a price sweeps away the wealth of her paramours.

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்த
மெல்லையின் மறைக ளாலு மியம்பரும் பொருளி தென்னத்
தொல்லையி னொன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே
(ஆற்றுப்)

The flood having it's birth in the mountains went forward to mix with the ocean; even as the meaning so difficult to be obtained from the illimitable scriptures, which in ancient times received but one interpretation, but having spread through various paths, are now by every sect variously interpreted, thus spread the flood.

ஆறுதன் னுடன்வரு மஞ்சொன் மாதரை
யூறுகொண் டலைக்கத்தன் னுயிர்கொண் டேகினான்
சோறுதன் னயலுளோர் பசிக்கத் துய்த்துளோன்
ஏறிய கதியிடை யானு மேறவே
(பள்ளிபடை.)

May that station in Hell be mine which is merited by the cravens who abandon to distress and affliction women, of delightful converse, the companions of their way, or by the gluttons who eat by themselves while others hunger around them.

உருளு நேமியு மொண்கவ ரெஃகமு
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்குந்
தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
அருளு நீத்தபின் னுவதுண் டாகுமோ?
(மந்தரை சூழ்)

He who bears the whirling disk, (Vishnu,) he who is distinguished by the forked weapon (Siven,) and the husband of the intelligent vani (Brahma); if these three were divested of wisdom, virtue, equity, and mercy, what else would remain to them ?

இனிய சொல்லின னீகை:: னெண்ணினன்
வினையிற் றூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வானெனின்
அனைய மன்னற் கழிவுமுண் டாங்கொலோ
(மந்தரை சூழ்)

If a prince be courteous in words, liberal in gifts, worthy of esteem, pure in all his actions, revered, victorious, and strictly adhere to the path of equity, can he ever be ruined ?

சீல மல்லன நீக்கிச்செம் பொற்றுலைத்
தால மன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
கால மல்லது கண்ணுமுண் டாகுமோ
(மந்தரை சூழ்)

Is there any time in which the good expect protection, except when princes, forsaking all that is contrary to right, and as steady as the tongue of a gold weighing balance, support the world ?

ஸ்வய மன்னுயி ராகவும் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னருக்
கைய மின்றி யறங்கட வாதருண்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ
(மந்தரை சூழ்)

Kings who are as the souls of the world and as bodies supporting all other souls, without doubt are not deficient in virtue ; for when confirmed in true benevolence, are sacrifices necessary ?

என்பு தோலுடை யார்க்குமி லார்க்குந்தம்
வன்ப கைப்புலன் மாசற வாய்ப்பதேன்
முன்பு பின்பின்றி மூவுல கத்தினும்
அன்பி னல்லதோ ராக்கமுண் டாகுமோ
(மந்தரை சூழ்)

To corporeal beings of bone and skin, or to incorporeal beings, divested all sensual taint, the cause of burning enmity, is there anything in the three worlds, either first or last, superior to affection?

ஒருத்தலைப் பரத் தொருத்தலை பங்குவி னூர்தி
யெருத்தி னிங்குநின் றியல்வரக் குழைந்திட ருழைக்கும்
வருத்த நீங்கியவ் வரம்பறு திருவினை மருவும்
அருத்தி யுண்டெனக் கையளி தருளிட வேண்டும்.
(அயோ. மந்திரப்)

Having passed my days here like the centre of a beam whose scales are equally poised with weights and goods, I anxiously desire to be relieved from the grievous afflictions with which humanity is troubled and to attain endless happiness; deign to grant this.

982

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினர்
நலமுத னலியினு நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினர்
(அயோ— மந்திரப்)

Those who enjoy the advantages of descent from ancient greatness, knowledge of sciences, and various learning, should regard justice, although their prosperity and condition suffer by it ; they who have divested thsmselves of fraud have truly maintained devotion.

ஓவிய மமைந்தநகர் தீயுண வுளைந்தாய்
கோவியல் பழிந்ததென வேறொரு குலத்தோன்
றேவியை நயந்துசிறை வைத்தசெய லன்றே
பாவிய ருறும்பழி யிதிற்பழியு முண்டோ
(யுத். ராவ. யந்திரப்)

Thou hast caused a beautiful city to be devoured by the flames ; is it right to desire the wife of one of another race and to detain her in captivity as if thou hadst lost every kingly quality ? Is any sin the wicked commit a greater sin than this ?

என்னொருவ னில்லுறை தவத்தியை யிரங்க
வன்றொழிலி னுய்மறை துறந்து சிறைவைத்தா
யன்றொழிவ தாயின் வரக்கர்புக ழய்யா
புன்றொழிலி னுமிசை பொருந்தல் புலமைத்தோ
(யுத். ராவ. மந்திரப்)

Contrary to the precepts of religion, thou hast detained in captivity and overwhelmed with sorrow, a woman who was engaged in devotion, belonging to the house of another, O perpetator of violent acts! and if in that day the glory of the Araccer was obscured, would it be wise in us to sanction so disgraceful an act ?

தூயவர் முறைமையே தொடங்குந் தொன்மையோ
ராயவர் நிற்கமற் றவுண ராதியாந்
தீயவ ரறத்தினுற் றேவ ராயது
மாயமோ வஞ்சமோ வன்மை யேகொலோ
(யுத்.ராவ. பந்திரப்)

The ancients followed the path of the virtuous, but besides these all the other Auner (Giants) are evil doers ; the station of Gods is obtained by virtue, but is it obtained by delusion, deceit and violence ?

அறந்துறந் தமரரை வென்ற வாண்டொழிற்
றிறந்தெரிந் திடிலது தானுஞ் செய்தவ
றிறந்திறம் பாவகை யியற்று நீர்மையன்
மறந்துறந் தவர்தரும் வரத்தின் மாட்சியால்
(யுத். ராவ. மந்திரப்)

If we consider the mighty deeds by which, even after we had forsaken virtue. we conquered the Gods, we shall find that they were not an effect proceeding, from any acts of devotion performed by ourselves, but from the power conferred on us by those who had forsaken evil (i.e. by the Sages and the Gods by whom we were endowed with power).

மூவரை வென்றுமூ வுலகு முற்றுறக்
காவலி னின்றுதங் களிப்புங் கைம்மிக
வீவது முடிவென விந்த தல்லது
தேவரை வென்றவர் யாவர் சிரியோர்!
(யுத்-ராவ. மந்.)

Having conquered the divine, Triad, and having received under their protection the whole world, while exulting in prosperity they are dead and have tection the whole world, while exulting in prosperity, they are dead and have toiled in vain; who then among the conquerors of the Gods are truly great ?

வினைகளை வென்றுமேல் வீடு கண்டவ
ரெனையரென் றியம்புது மிவரதந் தீமையான்
முனைவரு மமரரு முன்னும் பின்னரு
மனையவர் திறத்தினை யாவ ராற்றினர்?
(ராவ. மந்திரப்)

Who shall described thouse, who having overcome both good and bad works, have obtained eternal felicity ? but who among these, the giants, have, from their innate wickedness at any time performed virtuous acts like the Sages and the Gods ?

கோநகர் முழுவது நினது கொற்றமுஞ்
சானகி யெனும்பெய ருலகின் தம்வினை
யானவள் கற்பினு லழிந்த வல்லது
வானரம் சுட்டதென் றுணர்தல் மாட்சியோ
(ராவ. மந்திரப்)

This royal city and thy former victories have been eonsumed by the chas.ity of Janici, the mistress of the world, if not, what glory is there in the thought that they were burned by an ape ?

மீனுடை நெடுங்கட லிலங்கை வேந்தன்முன்
முனுடை நெடுந்தவந் தளர்ந்து சாய்வதோர்
மானிட மடந்தையா லென்ற வாய்மொழி
தேனுடை யலங்கலா யின்று தேர்தியால்
(ராவ. மந்திரப்)

It was foretold that the power of the King of Ilangei surrounded by the ocean, obtained by long penance, should decline by means of a female of the human race ; know this to be now accomplished, O thou who art adorned with a wreath of sweet flowers !

முன்னி னுரெலாம் பின்னுறக் காலினின் முடுகி
நின்மி லியானது விலக்குவ னெனஃவுரை நேரா
மின்னும் வேலினை விண்ணவர் கண்புதைத் திரங்கப்
பொன்னின் மார்பிடை யேற்றனன் முதுகிடைப் போக
(வேலேற்ற)

Swift as the wind he left those who were in front behind him and ; saying "I will ward it from thee," while the gods beholding that spear of lightning covered their eyes from pity, he received the weapon in his golden breast, so that it passed out at his back.

இளவலை நோக்கி யைய விராகவ குலத்துக் கேற்ற
வளவித மடைந்தோர்த் தாங்கி மன்னுயிர் கொடுக்கும்
வண்மை
துளவிய ஞெங்க லாய்நீ யன்னது துணிந்தா யென்று
லளவிய தன்று செய்தற் கடுப்பதே யாகு மன்றே
(வேலேற்ற)

Beholding his brother, "O, Lord," said Ramen, the courage which gives up life to protect those who rely on them is a distinguishing trait of the Ragava race, O thou adorned by a garland of Tulasi ! thou hast dared to do this, but, thought it be an act worthy of thee, it is not peculiar to thee.

புறவொன்றின் பொருட்டின் யாக்கைப் புண்ணுற வரிந்த புத்தே
ளறவனு மைய நின்னை நிகர்க்கில னப்பா லின்ற
பிறவினை யுரைப்ப தென்னே பேரரு ளாள ரென்பார்
கறவையுங் கன்று மொப்பார் தமக்கிடர் காணி னென்றான்.
(வேலேற்ற).

Even he, the divinely virtuous, who for the sake of a dove slashed his body until it became one wound, was not equal to thee ; what other thing remains there then to be spoken of (in the way of comparison) ? those who are justly called benevolent, when they behold the affliction of their friends, are like the cow and her calf.

மங்கை மன்னனும் கம்ப நாடனும்

கம்பராமன்

'அருள்மாரி' என்றும், 'அரட்டமுக்கி' என்றும், 'அடையா சீயம்' என்றும், பெருமக்களால் புகழப்படுபவர் திருமங்கை ஆழ்வார். திருமங்கையாழ்வாரின் பனுவலை வேதாந்த தேசிகர் அறிவு தரும் திருமொழி என்பார்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் வட மொழியையும் முறையாகப் பயின்றவர் திருமங்கையாழ்வார். இவருடைய இலக்கியம் பயில்பவர்கள் ஆன்ம இயலையும் இறை இயலையும் நன்கு உணர்வார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமங்கை மன்னனிடம் கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கு ஆராத பெருங்காதல் உண்டு.

கம்பன் திருமங்கை மன்னனின் திரு எழு கூற்றிருக்கையில் ஈடுபட்டு

இடங்கொண்ட நெஞ்சத்து இணங்கிக்
கிடப்பன-என்றும் பொன்னித்
தடங்கொண்ட தாமரை சூழும் மலர்ந்த
தண் பூங் குடந்தை
விடங்கொண்ட வெண்பல் கருந்துத்தி
செங்கண் தழல் உமிழ் வாய்
படங்கொண்ட பாம்பு அணைப் பள்ளி
கொண்டான் திருப்பாதங்களே.

என்று அற்புதமாகப் பாடினன்.

கம்பன், திருமங்கை மன்னனின் அருஞ் சொற்களையும் இனிய தொடர்களையும் கையாண்டு தன் காவியத்தைப் பயனும் பொலிவும் பெறச் செய்திருக்கிறான். கம்பனுக்குப் பெருமை தந்த ஒரு பாடல் 'வெய்யோனொளி'' என்பது உலகம் அறிந்த உண்மை. அப்பாடலில் வருகிற

மையோ மரகதமோ மறிகடலோ மழை
முகிலோ
ஐயோ! இவன் வடிவென்பதோர் அழியா
அழகுடையான்

என்னும் பகுதி காவியத்திற்கே ஒளியைத் தருகிறது. இத்தொடரை இங்ஙனம் கையாள்வதற்கு வழிகாட்டியாக இருந்தவர் திருமங்கையாழ்வாரே.

திருக்கண்ணபுரப் பதிகம் மிகமிகச் சுவை வாய்ந்தது. அதில்

மைவளர்க்கும் மணிஉருவம் மரகதமோ?
மழைமுகிலோ? என்கின் றாளால்
கைவளர்க்கும் அழலாளர் கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ

என்ற பகுதி கம்பன் இதயத்தில் பசுமரத்தாணியாய்ப் பதிந்து ''மரகதமோ மழை முகிலோ'' என்று கம்பன் வாக்கில் மறுமலர்ச்சி பெறுகிறது.

அதே பதிகத்தில் திருமங்கை யாழ்வார்

கொற்றப்புள் ஒன்று ஏறி மன்றூடே
வருகின்றான் என்கின்றாளால்;
வெற்றிப்போர் இந்திரற்கும் இந்திரனே
ஒக்குமால் என்கின்றாளால்

என்று நயம்படப் பாடுகின்றார். கவிச்சக்கரவர்த்தி இந்திரற்கும் இந்திரனே ஒக்குமால் என்ற தொடரில் ஆழங்கால் படுகிறான். இராவணன், பிராட்டியிடம் தன் பெருமையைப் பேசும்போது

இந்திரற்கு இந்திரன் எழுதல் ஆகுலாச்
சுந்தரன்; நான்முகன் மரபில் தோன்றினன்

என்று பேசுகிறான். இவ்வாறு இராவணன் தன் பெருமையைப் பேசும்படியாகச் செய்தது திருமங்கையாழ்வார் பாசுரமே!

திருமங்கை மன்னன் இராமாயண காவியத்தில் சேர்க்கத்தக்க இரண்டு பதிகங்கள் பாடி.

யுள்ளார். தோல்வியுற்ற அரக்கர்கள் அபயம் வேண்டிப் பாடியதாக இரண்டு பதிகங்கள் வழங்கியுள்ளார். அவற்றைக் கம்பன் நன்கு பயின்று உரிய இடங்களில் அமைத்துள்ளான். திருமங்கை மன்னன் (அரக்கர்கள் கூறுவதாக)

எஞ்சல்இல் இலங்கைக்குஇறை எம்கோன்
தன்னை முன்பணிந்து எங்கள்கண்முகப்பே
நஞ்சுதான் அரக்கர் குடிக்கு என்று
நங்கையை அவன் தம்பியே சொன்னான்

என்று பாடுகின்றார். இப்பாடலைப் பயின்ற கவிச்சக்ரவர்த்தி

துஞ்சுகின்றவர்களால் இரவும் நண்
பகலும், நிற்சொல்ல ஒல்கி
நெஞ்சு நின்று அயரும் இந் நிருதர்;
பேர்சனகி ஆம் நெடியது ஆய
நஞ்சு தின்றனர்கள் தாம் நண்ணுவார்
நரகம்' என்று எண்ணி நம்மை
அஞ்சுகின்றிவர்கள் நின் அருள்அலால்
சரண் இலா அமரர் அம்மா!

என்று வீடணன் வாயிலாகப் பேச வைக்கிறான். பிராட்டியை மண்டோதரியும் ''அஞ்சினேன் அஞ்சினேன் இச்சீதை என்று அமுதால் செய்த நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகையன்'' என்றாள்.

பிராட்டியைக் கண்டு வந்த அனுமன் இராமபிரானிடம்

''என் பெருந்தெய்வம் ஐய, இன்னமும்
கேட்டி''

என்று கூறுகிறான். அனுமன், பிராட்டியைத் தெய்வம் என்று கூறச் செய்தவை.

செம்பொன் நீள்முடி எங்கள் இராவணன்
சீதை என்பதோர் தெய்வம் கொணர்ந்து
வம்பு உலாம் கடி காவில் சிறையா
வைத்ததே குற்றம் ஆயிற்றுக் காணீர்!

என்ற வரிகளே ஆகும். திருமங்கை மன்னன் ஓர் தெய்வம் என்றார். கம்பன் பெருந்தெய்வம் என்று அதற்கு விளக்கம் தருகிறான்.

திருமங்கை மன்னன்

''உருகிஎன் கொங்கையின் தீம்பால் ஓட்டந்து பாய்கின்ற'' என்றும் ''உள்ளம் உருகி என் கொங்கை ஓட்டந்து பாய்ந்திடுகின்ற'' என்றும் பாடுகின்றார். இப்பிரயோகம் வேறு இலக்கியங்களில் காணப்பெறவில்லை. இத்தொடரைக் கவிச் சக்ரவர்த்தி இலக்குவன் வாய்மொழியாக அமைக்கின்றான். இராமபிரான் சூர்ப்பணகை என்ன பிழை செய்தாள் என்றபோது,

''நாட்டந்தான் எரிஉமிழ நல்லாள்மேல்
பொல்லாதாள்
ஓட்டந்தாள்; அரிதின் இவள் உடன்றெழுந்
தாள்.''

என்று இலக்குவன் கூறுகிறான்.

கவிச்சக்ரவர்த்தி கம்பனுக்கு நைவளம் என்ற பண்ணில் மிக விருப்பம் உண்டு. பிராட்டியை 'நைவளம் நவிற்றுமொழி நங்கை' என்றே குறிப்பிடுவான். திருமங்கை மன்னன் திருநெடுந்தாண்டகத்தில் பெருமான் நைவளம் என்ற பண்ணை ஆலாபனம் செய்ததாகக் குறிப்பிடுகிறார். திருநந்திபுர விண்ணகரப் பதிகத்தில் திருமங்கை மன்னன்

மையவரி வண்டுமது உண்டுகிளை
யோடு மலர்கிண்டி அதன்மேல்
நைவளம் நவிற்று பொழில் நந்திபுர
விண்ணகரம் நண்ணு மனமே!

என்றார். நைவளம் நவிற்று பொழிலைக் கம்பன் நைவளம் நவிற்று மொழி நங்கையாக மாற்றி இருக்கிறான்.

இராவணன் முதல்நாள் போரில் அனைத்தும் தோற்று வெறுங் கையனாய் நின்றபோது இராமபிரான்

''ஆள் ஐயா! உனக்கு அமைந்தன மாருதம்
அறைந்த
பூளை ஆயின கண்டனை,''

என்று பேசுகிற பேச்சுக்கு மூலம்

காற்றிடைப் பூளை கரந்தென அரந்தை
உற, கடல் அரக்கர் தம் சேனை
கூற்றிடைச் செல்ல கொடுங்கணை துரந்த
கோலவில் இராமன் தன் சோயில்

என்ற திருமங்கை மன்னன் பாசுரம் அல்லவா?

திருமால் அன்ன வடிவத்தோடு தோன்றி வேதங்கள் பகர்ந்தான் என்பதனைத் திருமங்கை ஆழ்வார் பல இடங்களிலும் குறிப்பிடுகின்றார். மற்றைய ஆழ்வார்கள் இந்த அவதாரத்தில் ஈடுபாடு கொண்டதாகத் தெரியவில்லை.

'' துன்னி, மண்ணும் விண் நாடும்
தோன்றாது இருளாய் மூடியநாள்
அன்னம்ஆகி அரு மறைகள்
அருளிச் செய்த அமலன்''

என்று பாடிய திருமங்கை மன்னன், கம்பன் இதயத்தில் இருந்து விராதன் வாயிலாக

'அன்னமாய் அருமறைகள் அறைந்தாய் நீ, அவை உன்னை
முன்னம் ஆர் ஓதுவித்தார் எல்லாரும் முடிந்தாரோ?''

என்று பாடுகிறார்.

தசரதன் கைகேசியின் மனமாற்றத்திற்குக் காரணம் யார்? நீ மனம் திசைத்தாயா? என்கிறான். கைகேசி அதற்கு 'திசைத்ததும் இல்லை; எனக்கு வந்து தீயோர் இசைத்ததும் இல்லை' என்கிறாள். இந்தப் பிரயோகம் தமிழ் இலக்கியங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. திருமங்கை மன்னன் 'இமையோர் திசைப்ப எழில் வேதம் இன்றி மறைய' என்று பாடுகிறார். திருமங்கை மன்னனின் தாக்கமே கம்பனை இங்ஙனம் பேசச் செய்தது.

திருமால் தேவர்களுக்குக் காட்சி நல்கியதை

கருமுகில் தாமரைக் காடு பூத்து நீடு
இருசுடர் இருபுறத்து ஏந்தி, ஏந்து அலர்த்
திருவொடும் பொலிய ஓர்செம்பொன் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினன்

என்று கம்பன் பாடுகின்றான். திருமங்கை மன்னன் திருநாகைப் பதிகத்தில்

மஞ்சு உயர் பொன்மலைமேல் எழுந்த
மாமுகில் போன்றுளர் வந்து காணீர்
அஞ்சிறைப் புள்ளும் ஒன்று ஏறி வந்தார்
அச்சோ ஒருவர் அழகியவா !

என்று இசைத்த குரல் கம்பன் காவியத்தில் எதிரொலிக்கிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?

வண்டுகள் தேனில் மொய்க்குமே அன்றி நீரில் மொய்ப்பதில்லை. ஆனால், திருமங்கை மன்னன் முதல் பதிகத்தில்

மஞ்சு உலாம் சோலை வண்டு அறை மாநீர்
மங்கையார் வாள்கலிகன்றி
செஞ்சொலால் எடுத்த தெய்வ நல் மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்!

என்று பாடுகின்றார். இதற்கு விரிவுரை செய்த பெரியவாச்சான் பிள்ளை 'வண்டறை என்கிறது சோலைக்கு அடைமொழியாகவுமாம்; மாநீர்க்கு அடைமொழியாகவுமாம். ஜலத்தினுடைய ரஸ்யதையாலே ஈக்கள் வண்டொடு மொய்ப்பது என்று ஆற்று வரவுகளிலே சொல்லுவர்களாய்த்துத் தமிழர்கள்'' என்று விவரித்தார். இங்கே ஆற்றுவரவு என்றது ஆற்றுப்படலத்தையே ஆகும். பெரியவாச்சான் பிள்ளை

ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பு இகந்து
ஊக்கமே மிகுந்து உள்தெளிவு இன்றியே
தேக்கு எறிந்து வருதலின் தீம்புனல்
வாக்கு தேன்நுகர் மாக்களை மானுமே

என்ற கம்பன் பாடலையே மறவாமல் மேற்கோள் காட்டி திருமங்கை ஆழ்வார் கவிதைக்கு ஆக்கம் தருகிறார்.

வான்மீகத்தில் குகனும் இராமபிரானும் சந்திக்கின்ற சந்திப்பு பேரரசனும் சிற்றரசனும் சந்திப்பதுபோல் உள்ளது. ஆனால் கம்பன் இருவர் சந்திப்பையும் உணர்ச்சி வெள்ளம் ஆக்கி இருக்கிறான். பெரியாழ்வார்

கூர் அணிந்த வேல்வலவன் குகனோடும் கங்கை தன்னில்
சீர் அணிந்த தோழமை கொண்டதும் ஓர் அடையாளம்

என்று தொகுத்துக் கூறுகிறார். இதனைத் திருமங்கை மன்னன் வகையாக்கி

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்று அவற்கு இன்னருள் சுரந்து
மாழை மான்மடநோக்கி உன்தோழி
உம்பிஎம்பி என்று ஒழிந்திலை; உகந்து

தோழன் நீ எனக்கு இங்குஒழி என்ற
சொற்கள் வந்து அடியேன் மனத்து
இருந்திட
ஆழிவண்ண! நின்அடி இணை அடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே!

என்று பாடுகின்றார். பெரியாழ்வாரின் தொகையும், திருமங்கை மன்னனின் வகையும் கம்பன் காவியத்தில் விரியாகி (குகப்படலம்) உள்ளது. ஏழை ஏதலன் என்ற பாடலின் ஒவ்வொரு சொல்லும் கம்பன் உணர்வு வெள்ளத்துக்கு வித்தாக இருக்கிறது. திருமங்கை மன்னனின் இப்பாசுரம்,

ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு 'எம்பி நின் தம்பி; நீ
தோழன்; மங்கை கொழுந்தி' எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி, மயங்குவாள்

என்ற பாடலாக மலர்ந்திருக்கிறது.

திருமங்கை ஆழ்வாரும் ஆண்டாள் அம்மையாரும் எடுத்தாண்ட அருஞ்சொல் 'பரக்கழி' என்பது. 'கொந்தளமாக்கிப் பரக்கழிந்து குறும்பு செய்வான்' என்று ஆண்டாளும், 'நின்மலன் என்று ஏதிப் பரக்கழிந்தாள்' என்று திருமங்கை மன்னனும், இச்சொல்லை எடுத்தாண்டு உள்ளனர். கவிச்சக்ரவர்த்தி கம்பன், வாலியின் மூலமாக

இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால்
எப்பிழைகண்டாய் அப்பா?
பரக்கழி இதுநீ பூண்டால், புகழையார்
பரிக்கற் பாலார்?

என்று பாடுகின்றார். பரக்கழி என்றால் பெரும் பழி என்பது பொருள்.

கம்பனுக்குப் பெருமை தந்தது, இரணியவதைப் படலமாகும். திருமங்கை மன்னன் திருவல்லிக்கேணிப் பதிகத்தில் நரசிம்ம அவதாரத்தை

பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன்
வாயில் ஓர் ஆயிரம் நாமம்
ஒள்ளிய ஆகிப் போத ஆங்கு அதனுக்கு
ஒன்றும் ஓர் பொறுப்பு இலன் ஆகி
பிள்ளையைச் சீறிவெகுண்டு தூண் புடைப்ப
பிறை எயிற்று அனல் விழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவை
திருவல்லிக் கேணிக் கண்டேனே

என்று சுவைபடப் பாடுகின்றார். இப்பாசுரமே இரணியவதைப் படலமாக விரிந்துள்ளது. இதன் ஒவ்வொரு சொல்லையும் கம்பன் காவியத்துடன் இணைத்துக் காண்பது அறிஞர் கடமை.

கம்பன் தான் வணங்குகின்ற கடவுள் எல்லாச் சமயங்கட்கும் பொதுவான கடவுள் என்று கருதினான். கவந்தன் மூலமாக

நீ ஆதி பரம்பரமும் நின்னவே உலகங்கள்
ஆயாத சமயமும் நின் அடியவே; அயல்
இல்லை;
தீயாரின் ஒளித்தியால் வெளி நின்றால்
தீங்கு உண்டோ?
வீயாதே பெருமாய விளையாட்டும்
வேண்டுமோ?

என்று கம்பன் பாடியதற்கு மூலம்

''பார்உருவிநீர் எரிகால் விசும்பும் ஆகி
பல்வேறு சமயமு மாய்ப் பரந்துநின்ற
ஏர்உருவில் மூவருமே என்னநின்ற
இமையவர்''
என்ற திருமங்கை மன்னன் பாசுரம் அல்லவா?

'திருவின் முகத்துத் திரு அன்னாள்' என்ற தொடர் பிராட்டியின் பெருமையையும் மங்கலத்தையும் குறிப்பிடுகின்றது. தேரழுந்தூர்ப் பதிகத்தில் 'திருவுக்கும் திருவாகிய செல்வா!' என்று திருமங்கை மன்னன் பாடியது கம்பனுக்குப் பேருணர்வையூட்டி இருக்க வேண்டும்.

நந்திணம் முத்து எறி நம்பூர் வரதர்தம்
மாளிகையில்
சிந்தின சொற்கள் கொண்டே சிலநாடு
திரைக்கொள்வர்

என்று நம்பிள்ளையை ஒருவர் புகழ்ந்தார். நம் கம்பன் கவிச்சக்ரவர்த்தியாக இருப்பதற்கு திருமங்கை மன்னனும் கைகொடுத்துள்ளான் என்று கூறலாம்தானே?

நாயகற்கு ஓர் உதவியை நல்குவான்

அருட்கவி அரங்க சீனிவாசன்

கம்பர் காவியம் ஒப்பற்ற ஒரு கலைப்பெருங் கோவில். அங்கு அளவற்ற அழகுச் சிற்பங்கள் உண்டு. சில சிற்பங்கள், தம் எழில் காட்டி நம் கருத்தைக் கவர்ந்து 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்ற நிலைக்கு நம்மை ஆட்படுத்துவன. அந்தச் சிற்பங்களை அரிதிற்கடந்து அப்பாற் சென்றால், சில சிறிய சிற்பங்களும் அங்கங்கே சிரித்து நம்மை எதிர்கொள்ளும். கூர்ந்து நோக்கினல், அந்தச் சிறிய சிற்பங்களும் சீரிய சிற்பங்களாகத் தோன்றும்; முழுமையான-செழுமையான—கலைநலம் பெற்று விளங்கும். கம்ப சிற்பியின் கைபட்ட சிற்பங்கள் சிறியன வாயினும் பெரியனவாயினும் கலையழகிற் சிறந்தேயிருக்கும். சில சிற்பங்களை மட்டும் கவினுறச் செதுக்கிவிட்டு, சில சிற்பங்களை அலட்சியமாக விடும் போக்கு அவனிடம் காணுத ஒன்று.

கம்ப காவியக் கலைக்கோயிலில் எளிதில் கண்ணுக்குப் படாபல் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் மிகச்சிறிய சிற்பந்தான், வன்னி.

இந்திரசித்தனை இழந்து இராவணன் சோகத்துடன் இருக்கையில், படைத்துணை வந்து சேர்கின்றது. அப்படைகளின் தலைவர்களை அழைத்து, 'நினையும் நல்வரவு ஆக நும் வரவு' என நிரம்பி, 'மனையும் மக்களும் வலியரே?' என நலம் உசாவுகின்றன், இராவணன்.

'இலங்கையில் மாதரும் மைந்தரும் பேதுருதவர் இல்லையே! நீயும் பெரிதும் வருந்தினை! யாது காரணம்?' என்று படைத்தலைவர் இராவணனிடம் வினவுகின்றனர். இராவணனும், சீதைபால் வைத்த காதலினல் நேர்ந்த பரிசெல்லாம் விளம்பினன்.

'கும்பன், இந்திரசித்து முதலிய அரக்கரையெல்லாம் சிறு மனிதர் அம்பினல் கொன்றனரேல், நம் அரக்கர்குல ஆற்றல் நன்று நன்று' என்று படைத் தலைவர் நகையாடினர். 'உலகை எடுக்கவோ, மலைகளைப் பிடுங்கவோ, கடலைக் குடிக்கவோ எம்மை அழைத்துள்ளாய் என எண்ணினேம். மலரோடு இலைகள் கோதும் அக் குரங்கின்மேல் ஏவவோ எம்மை அழைத்தாய்!' என்று இறுமாப்பை ஒழுக விட்டனர்.

படைத்தலைவருள் ஒருவன் ஆகிய வன்னி, அந்த இறுமாப்புப் பேச்சில் கலந்துகொள்ள வில்லை. அவனும் அரக்கனே ஆயினும், வருவது உணரும் அறிவு அவன்பால் இருந்தது. அவன் பேச்சு அதை உறுதிப்படுத்துகின்றது.

'அன்ன மானுடர் யார்? அவர் வலிமை யாது?' என்பது வன்னி எழுப்பிய வினு. மற்றைய படைத்தலைவர் அனைவரும் குரங்கு, மனிதர் என்றவுடன் அலட்சியமாகப் பேசுகையில் வன்னி ஒருவன் மட்டும் அவ்வாறு பேச வில்லை. வினை வலியும் தன் வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல் வேண்டும் என்ற தெளிவு அவன் வினவில் வெளிப் படுவதைக் காணலாம்.

வன்னியின் வினவிற்கு இராவணன் விடையிறுக்கவில்லை. மாலியவான் முந்திக்கொள்கின்றன். இராமனைப்பற்றி— அவன் ஆற்றலைப் பற்றிப் பேசுவதெனில் மாலியவானுக்குப் பெரு விருப்பம். அப்படிப்பட்டவன் இந்த நல்ல சமயத்தை நழுவவிடுவானே? 'உற்ற தன்மையும் மனிதரது ஊற்றமும் கேட்டிரால்' என்று இராமன் பெருமையைப் பலபடப் பேசி முடிக்கின்றன். 'சீதையை விட்டுவிடுவதே நலம். போரில் மாள்வதால் பயன் இல்லை' என்ற குறிப்பு அவன் பேச்சின் உள்ளுறையாக அமைகின்றது.

மாலியவான் சொல்லியது கேட்ட வன்னி, இராவணனிடம் ஒரு வினவை வீசுகின்றன். 'கும்பன் முதலியோர் மடிந்தது கண்டும் நீ போர் செய்யாமல் இருந்தது ஏன்?' என்பதே இந்த வினு.

இந்த வினவை இராவணன் எதிர்பார்க்க வில்லை. 'மனிதருடன் போரிடுவது இழிவு எனக் கருதியே போர் செய்திலேன்' என்று போக்

குரை கூறுகின்றான். இராவணன் ஏதோ கூறிச் சமாளிக்கிறான் என்பதை வன்னி அறிந்து கொள்கின்றான். 'அன்னதேல், இனி அமையும். என்பது வன்னியின் சுருக்கமான பேச்சு. 'மானிடருடன் போரிடுவது இழிவு எனக் கருதினுயாகில் அது பொருத்தமே' என்பது அத் தொடரின் வெளிப்படைப் பொருள். 'நீ போரிடவில்லை என்று கூறுவது இனித்தான் பொருந்தும். இதற்கு முன் பொருந்தாது. நீ முதல் நாளே போர் செய்துள்ளாயே!' என்ற குறிப்பும் 'அன்னதேல், இனி அமையும்' என்னும் தொடரில் உள்ளது. இது வன்னியின் கூர்த்த மதியைக் காட்டுகின்ற இடம்.

இவ்வாறு காவியத்தில் அறிமுகமாகும் போதே,வன்னி தனித் தன்மை பெற்று விளங்குவதைக் காண்கின்றோம்.

'மாலியவான் மூதுணர்ந்தவன்தான். சீதையைவிட்டு மனிதரைச் சேர்தல் நலம் என்று இவன் கூறுவதும் தக்கதே! ஆனால், காலம் கடந்துவிட்டது. இந்திரசித்தை இழந்த பின்னர், அப்படிச் செய்வது அழிவுக்கே இடமாகும். சீதையை விட்டு விடுவதால் இறந்தவரைப் பெறமுடியுமா? பழிதான் பெற முடியும். ஆதலால், முட்டி அவர் குலத்தோடு முடிப்பதே இனிச் செயும் கடமை என்பது வன்னியின் ஆய்வுரை.

வன்னியின் அறிவாற்றலும் குலமானமும் இங்கு முழுமையாக வெளிப்படுகின்றன. சீதையைச்சிறைவைத்தது தவறு. அவளை முன்பே விட்டிருத்தல் வேண்டும் என்று கூறுவதால் அவன்பால் உள்ள நியாய உணர்வு புலனாகின்றது. இந்த இடம், கும்பகர்ணன் இராவணனுக்குக் கூறிய அறிவுரையை நினைவூட்டுகின்றது. சாதாரண அரக்கருக்கு உள்ள இரக்கமற்ற இறுமாப்பு வன்னியினிடம் இல்லை.

வன்னியின் வாக்கில் இங்கும் ஒரு நுட்பத்தைக் காண்கின்றோம். 'மற்று அவர் குலத்தொடு முடிக்குவது அல்லால் கட்டம் அத் தொழில்' என்பது வன்னி யின் கூற்று. அவர்களது (மனிதரது) குலத்தோடு அவர்களைக் கொல்வது அல்லாமல், சீதையை விட்டுவிடுவது கஷ்டம்' என்பது வெளிப்படைப் பொருள்.

'கும்பன், இந்திரசித்தன் போன பிறகு, மனிதர்களை வெல்ல இயலுமா? அவர்கள் (நம்மைக் குலத்தோடு கொல்வது) அல்லாமல், நாம் அவர்களை வெல்வது கஷ்டம்' என்பது குறிப்பாகக் காணும் பொருள். இருபொருளுக்கும் பொதுவாக அந்தத் தொடர் உள்ளது. இராவணன் மனத்துக்கு உகப்பாகவும் வருவது உணர்த்தவும் ஒரே சொற்றொடரைச் சுருக்கமாகப் பயன்படுத்தும் ஆற்றல் பெற்றவன் வன்னி என்பதை அறிந்து வியக்காமல் இருக்க இயலாது.

அடுத்து, வன்னி தோன்றும் இடம் போர்க்களம். இராமன் கணைகளால் அழிவுண்டு அரக்கர் அஞ்சிச் செயலற்று நிற்பதைக் காண்கின்றான், வன்னி. அழிவு கண்டும் அஞ்சாத மனத்திட்பம் உடையவன் அவன்: அரக்கரைப் பார்த்து வெகுண்டு வீர உரை பகர்கின்றான்:

'இந்த இராமன் ஒருவனே நம்படை முழுவதும் கொல்வதோ! குன்றுபோல் உடல் பருத்த யாம், வெல்லாமல் வெண்பல்லை மெல்வதோ! நாம் போர் செய்யக்கூட வேண்டுமோ? அம்புகள் நம்மேல் படுமுன்பு, நாம் எல்லோரும் ஒன்றுகூடி இராமன்மேல் விழுந்தால் போதுமே! இராமன் நசுங்கிப் போவானே!இது செய்யக் கூட உங்களால் முடியாதா? நாம் என்ன சிறு தொகையினரா? ஆயிரம் வெள்ளமன்றோ நம் தொகை. நாம் அரைபட்டுத் தேயச் செயலற்று நிற்பதோ? உடனே பாய்ந்து முன்னேறுங்கள்' என்பது வன்னியின் வாக்கு. இதில் அவனது கடமையுணர்வும், தறுகண்மையும், இராவணன்பால் அவன் கொண்ட நன்றியறிவும் நன்கு விளங்குகின்றன.

இப்பண்புகளைக் கண்டே கம்பன் அவனுக்கு 'நாயகனுக்கு ஓர் உதவியை நல்குவான்' என்று தனிப்பட்டம் ஒன்று சூட்டுகின்றான். வேறு எந்தப் படைத்தலைவரும் பெறாத சிறப்பு இது.

வன்னியின் தூண்டுதலால் உருத்தெழுந்த சேனைகள்—இராமன் கணைகளால் அழிந்தன போக எஞ்சியவை-அப்பால் ஓட அரியதாம் வகை அம்புகளால் நெடுமதில் அமைத்து விடுகின்றான் இராமன்.

அப்போது வன்னி, இராமனது வில்லாற்றலைப் பலவாறு புகழ்ந்து பேசுகின்றான். இறுதியாக,

'பண்டுஉலகு அளித்தவ னோடும், பண்அமை குண்டையின் பாகனும், பிறரும், கூடினர் அண்டர்கள் விசும்பினின்று ஆர்க்கின்
றார்உழைக்
கண்டிலம்; இவன்நெடு மாயக் கள்வனால்'

என்கின்றான்.

அரக்கர் படை பெரும்பகுதி அழிந்தது. எஞ்சிய படை சரவேலிக்குள் அடங்கிச் செய லற்றது. இராமன் சாதாரண மனிதன் அல்லன், நெடுமாயக் கள்வனே என்று நன்கு தெளிந்துகொள்கின்றான் வன்னி. ஆயினும் தன்மானம் குறைந்திலன்.

'இராமன் கொன்ற நம்படைகள் ஒரு கோடி கோடிக்கு மேல் இருக்கலாம். அல்லது கோடியே கோடியான பதுமம் என்று எண்ணினதாகவும் இருக்கலாம். அல்லது பதுமத்தைப் போல 512 மடங்கு கொண்ட வெள்ளமாகவும் இருக்கலாம். ஆயினும், நாம் நின்று யோசிப்பதால் பயன் யாது? ஒன்றாகத் திரளுங்கள்' என்று அரக்கரை மீண்டும் போர்க்கு ஊக்குகின்றான்.

'வென்று மீளுதும், வெள்குதுமேல் மிடல் இல்லாப் புன்தொழிற் குலம் ஆகுதும், என்று இராவணன் எதிரில் வீரம் பேசிப் போர்க்கு வந்தோம். இப்போது போரில் தோற்று உயிர் பிழைத்துச் சென்று அவன் முகத்து விழிப்பது எப்படி? இனிப் பிறவாத வீர சுவர்க்கம் அடைவதற்காக நம்மை அழித்துக்கொள் வோம். புகழைக் காண்பதற்காக இவ்வுடலைக் கழிப்போம். போர் செய்யாமல் தப்பி ஓடலாம் எனில், சரமதில நாம் கடப்பது எப்படி? நாம் ஒருமுகமாகச் சென்று உயிர் தருவதே தக்கது' என்று முடிவாகக் கூறினான் வன்னி. 'புகழுக்காக உயிரைத் தருவோம்' என்ற உரை அவனது தூய வீரத்தைக் காட்டுகின்றது.

ஐயிரு கோடியர் அரக்க வேந்தர்களும் வீரர்களும் தவிர, அனைவரும் இராமன் கணை களால் அழிந்து போயினர். அப்போதும் வன்னி நிலை தளர்ந்திலன்.

'எல்லோம் எல்லோம் ஒன்றி வளைந்து இந் நெடியோனை வல்லே வல்ல போர்வலி முற்றி மலையோமேல் வெல்லோம் வெல்லோம்' என்று மீண்டும் வீரவுரை பகர்கின்றான். மற்றைய படைத்தலைவரும் தொல்லோன் (வன்னி) சொல்லே நன்று என்று அச்சொற்களைத் தலை மேல் கொள்கின்றனர். அவன் காட்டிய வழியை மேற்கொள்கின்றனர். 'விண்ணவர் படைகள் வீசி முடுதும் இவனை' என்று இராமனை மொய்த்து, அடுகளத்து அவன் வாளிக்கு இரை யாகின்றனர்.

இராவணனுக்குப் படைத்துணையாக வந்த பற்பல படைத் தலைவருள் ஒருவனாக—புட்கரத் தீவுக்கு மன்னனாக—முதன் முதலில் அறிமுகம் ஆகின்றான் வன்னி. அறிமுகம் ஆகும் போதே உற்றது உணர்ந்து உறுவது நோக்கி இராவணனுக்கு ஆறுதல் கூறிப் போர்க்குப் புறப்படுகின்ற பெருமிதத்தை அவன்பால் காண்கின்றோம். பின்னர் போரில் அரக்கப்படை களின் அழிவு கண்டு படைத்தலைவர்கள் செய லற்று நிற்கையில், வன்னி ஒருவனே அவர் களுக்குக் கடமையை உணர்த்தி, இராமனுடன் போரிடத் தூண்டும் தனிப்பெருந் தலைவனாக அவன் உயர்கின்றான்.

அரக்கப் படைத்தலைவர் அனைவரும் 'ஈது போல் செவ்வுரை வேறுஇலை' என்று வன்னி யின் சொல்லைத் தலைமேல் தாங்கிச் செயல்படு கின்றனர். அஞ்சாமையும் சொல்வன்மையும் நேரிய நன்றியும் சீரிய வீரமுமே அவனுக்குப் படிப்படியாகத் தலைமையைத் தருகின்றன.

மூலபலச் சேனையில் ஒருவர்கூடத் தப்பி விடாதபடி தன் சொல்வலைப்படுத்து, அனை வரையும் இராமன் கணைகளுக்கு இரையாக்கி, இராமாவதாரத்தின் நோக்கம் நிறைவேறு வதற்கு உறுதுணையாகின்றான் வன்னி என் றும் கூறலாம்.

படைத்தலைவருள் வன்னியின் தனித் தன்மையைக் கூறிய கம்பன், அவனது முடிவைத் தனியாகக் கூறவில்லை. 'ஆயிர வெள்ளத் தோரும் அடுகளத்து அவிந்து வீழ்ந்தார்' என்றும், 'முடிந்தது மூலத் தானை மூவுலகு இருண்ட தீமை விடிந்தது' என்றும் பொது வாகவே வன்னியின் முடிவைக் கூறி முடிக் கின்றான் கம்பன். ஆக்கையைக் கழித்துப் புகழைக் கண்ணுற்றுப் பிறப்புஉறு வீரருலகம் அடைந்த அவனுக்கு இறுதி உண்டோ?' என்று கம்பன் கருதினான் போலும்!

வாழ்க வன்னியின் வீரம்! வளர்க கம்பன் புகழ்!

கம்பனும் கவிதா சங்கதமும்

பி. ஸ்ரீ.

புதுவைச் சடையன் திரிகர்த்தராயன் கோடிக்கணக்காய் கப்பல் வியாபாரத்தில் பொருள் ஈட்டினன். பரம ரசிகனும்கூட. வாணிபத்துறையிலிருந்து ஒய்வு பெற்றதும் இவன் சடையன் என்ற சடையப்ப வள்ளலாகப் பேரும், புகழும் பெற்றுக் கம்பனை ஆதரித்தான். கம்பன் திருவழுந்தூரில் பிறந்தான். வெண்ணெய் நல்லூருக்கும், திருவழுந்தூருக்கும் குறுக்கு வழியில் மூன்று மைல்தான். கம்பன் ''இராமாவதாரம்'', பாட வசதியளித்தது சடையப்பரது வெண்ணெய் நல்லூர்.

கம்பனுடைய தந்தை குணதித்தன். இவன் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தான் எனத் தெரிகிறது. இவன் இறந்து போன பின் கம்பன் தாயையும் இழந்த நிலையில் சடையப்ப வள்ளல் குழந்தைக் கம்பனை நாளொருமேனியும், பொழுதொருவண்ணமுமாய் வளர்த்து வந்தான்.

வள்ளல் மாளிகை யாத்திரிகர்களுக்கு எல்லாம் தங்குமிடமாயிற்று. வால்மீகி இராமாயண காலட்சேபங்கள் நடக்கும். காலட்சேபக்காரர்கள்பெரும்பாலும்வட நாட்டுவேதியர்கள். இந்தக் காலட்சேபங்களால் உருவாகி வந்த அடிப்படையில், கம்பன் ''இராமாவதாரத்தை' இயற்றினன். சடையப்ப வள்ளல் கம்பனைப் பெற்ற பிள்ளைபோல் வளர்த்து வந்தான். வித்தையைத் தானே சொல்லிக் கொடுத்தான். கிராமக் கணக்காயன் சொல்லிக் கொடுத்ததோடு சடையப்பன் திருப்தியடையவில்லை.

குழந்தைக் கம்பன் வளர்ந்து, தமிழில் இராமாவதாரம் பாடத் தொடங்கினன். இராமாயண பாத்திரங்களே அவனுக்கு நிஜமாக இருந்தன. தன் காலத்து மனிதர் நிழல்களாகத் தோன்றினர். பசியை மறந்து இராமாவதாரத்திலேயே லயித்துப் போவான். அப்பொழுது சடையப்பன் பக்குவமாகக் காய்ச்சிய பாலை வட்டிலில் வைத்துக்கொண்டு காத்திருப்பான். சடையப்பன் சொல்லுவான்:—

''இந்த அருமையான உயிர் உடலில் தங்கினால் தானே இராமாயணம் இனிது முற்றுப்பெறும்'' என்று வள்ளலே கம்பனுக்கு அந்தப் பாலை ஊட்டுவதும் உண்டு.

"Chill penury represses the noble-rage" (inspiration) என்னும் அந்த வறுமை கவிஞனுக்கு ஏற்படாதபடி கண்ணினைக் காக்கின்ற இமை போலக் காத்தான். கைப்பணமும் கொடுத்து உதவுவான்.

நாளடைவில் கம்பன், ''இராகவ அபிநவ கவிநாதன்,'' ஆகிவிட்டான். தமிழிலும், வடமொழியிலும் தக்க புலமை பெற்றான் என்பதற்கு இராமாவதாரமே சாட்சி. ''நிராயுதன்'' போன்ற வடமொழித் தொடர்களையும் பயன்படுத்திக்கொள்கிறான் அல்லவா? வடமொழியைத் தற்சமமாகவும், தற்பவமாகவும் ஒருங்கே பயன்படுத்திக் கொள்வதைக் காண்கிறோம். உதாரணமாக பாலப் பருவம் என்பதை ''பாலமை'' என்கிறான்.

பால காண்டம் மந்த நடை போடுகிறது, ''மந்த, மந்த நடந்தது வாடையே,'' என்பது போல.

(குருடர்.) ''அந்தர் வந்தென அந்தி தன் கைதர மந்த மந்த நடந்தது வாடையே.'' காளிதாச மகா கவியை வடமொழியிலேயே படித்துப் புலமைப் பேரின்பம் துய்த்திருக்கிறான் என்பது புலனாகிறது. இப்படிப் பல உதாரணங் காட்டலாம். இவனுடைய வடமொழிப் பற்றுக்கு, இராமபிரானை ''தென் சொற் கடந்தான்,'' என்று சொன்னவன், ''வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான்'' என்கிறான். தமிழைக் காட்டிலும் வடமொழி விரிவானது என்பது கருத்து.

கம்பன் முதன் முதல் கொடுக்க விரும்பிய பெயர் இராமன் கதை அல்லது இராம காதை. பிறகு இராமாவதாரம் எனப் பெயர் கொடுத்திருக்க வேண்டும்.

இராமாவதாரத்தைப் பாடி முடிப்பதற்குப் பல ஆண்டுகள் சென்றிருக்குமே. கம்பன் பாடி முடித்ததும், பாண்டிய நாட்டாரும், சோழ, சேர நாட்டினரும் பிரதிகள் செய்து கொண்டு போனுர்கள். அந்த அசல் பிரதிகள் இப்பொழுது கிடைப்பதற்கில்லை. நம் தட்ப வெப்ப நிலை இடங்கொடுக்கவில்லை.

கம்பன் வட இந்தியாவைப் பார்த்து இருக்கலாம். அயோத்தியையும் பார்த்திருக்க லாம். ஆனல் காவேரியே இவனுக்குச் சரயு ஆக மாறுகிறது. தான் பாடிய இராமாவதாரத் தைச் சீரங்கத்தில் அரங்கேற்ற விரும்புகிறது, இவன் உள்ளம். அங்கு ஸ்ரீவைஷ்ணவ மகா வித்துவான்கள் சேர்ந்து கம்ப ராமாயணத்தைச் செவிமடுத்தார்கள் எனலாம். கவிச் சக்ர வர்த்திப் பட்டமும் சூட்டினர்.

ஆராய்ச்சிப் பேரறிஞர் வையாபுரிப் பிள்ளை பரிமளரங்கன் சந்நிதி, வெண்ணெய் நல்லூரில் இருந்ததாகவும், அங்கேதான் கம்ப ராமா யணம் அரங்கேறியதாகவும் கூறுகிறர். எனி னும் கம்பன் திருவரங்கத்தை, ''பணி அரங்கப் பெரும்பாயல் பரஞ்சுடரை யாம் காண, அணிஅரங்கம் தந்தானை அறியாதார் அறியா தார்'' என்று கூறுவதைப் பாருங்கள். அரங்கு என்ருல் ஆற்றிடைக்குறை. ஆற்றிடைக் குறைக்கு அதிதெய்வம் அரங்கன். சீரங்கம் என்னும் பெயராக வடமொழிப் புலவர்கள் மாற்றிக்கொண்டார்கள்.

வால்மீகி மகரிஷியே இந்த அபிநவகவி நாதனைக் கவிச் சக்ரவர்த்தியாய் முடிசூட்டிய தாக வையாபுரிப் பிள்ளை கற்பனை செய்திருக் கிருர்.

கம்பன் தமிழுக்காகவும் இராமாவதாரத்துக் காகவும், தன்னை முழுக்க முழுக்க அர்ப் பணித்து விட்டான். இதற்குச் சான்று :

''அம்பிலே சிலையை நாட்டி அமரர்க்கு
அன்று அமுதம் ஈந்த
தம்பிரான் என்னத் தானுந் தமிழிலே தன்னை
நாட்டிக்
கம்பநாடுடைய வள்ளல் கவிச்சக்ரவர்த்தி
பார்மேல்
நம்பு பாமாலையாலே நரர்க்கும் இன்று
அமுதம் ஈந்தான்''

என்ற பாயிரச் செய்யுள்.

கம்பனை உவச்சன் என்று குறிப்பிடுவதும் உண்டு. இது பாயிரச் செய்யுள் ஒன்றிலிருந்து தெரிய வருகிறது. அந்த நாளில் உவச்சர் என்ற வகுப்பினரே இல்லை. ''உவச்சன்'', உபாத்தி யாயன் என்ற சொல்லின் சிதைவுதான். இது தற்பவமாக இங்கே வழங்கக் காண்கிருேம்.

''பூமாலை வாடும், பாமாலைக்கில்லை மணம்.'' என்பர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, இவர் இதனையடுத்து விளக்கம் தந்துள்ளார்.

கவிதை என்ருல் என்ன ?

''உள்ளத்துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்
உண்மை தெரிந்துரைப்பது கவிதை''

என்பதாக.

கம்பன் கவிதை இயற்கையாய் வருகிறது. ''பல்வகைத் தாதுவின், உயிர்க்கு உடல்போல் பல சொல்லால் பொருட்கு இடனாக, உணர் வினின் வல்லார் அணிபெறச் செய்வன செய் யுள்,'' என்று இலக்கணம் கூறும் ரகத்தைச் சேர்ந்தது அல்ல கம்பன் கவிதை. செய்யுள் வேறு, கவிதை வேறு. செய்யுள் என்ருல் செய் யப்படுவது. கவிதை அப்படியாக்கப்படுவது அன்று. கவிஞனுக்குச் சொற்கள் பிறப்புரிமை யால் அமைவன. ஒரு கவிஞன், கம்பனைப் போல் கல்வியில் பெரியவனுய் இருக்கலாம். அந்தக் கல்வி கவிதையைக் கெடுத்துவிடவும் கூடும். கம்பனிலோ இத்தகைய கேடு நேர வில்லை. இது கம்பனுடைய ஒரு சிறப்பு இயல்பு. ''கம்பனுரிடைப் பெருமை உளது'' என்று ஒரு சிலாசாஸனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது கர்நாடகச் சீமையிலே! கம்ப இராமாயணம் பொருள் தெரியாத கர்நாடக வாசிகளையும் மோகிக்கச் செய்திருக்கிறது :—

''பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து, கம்பன்
பாரில் பொழிந்த தீம்பாற் கடலை,
நாவின் இனிக்கப் பருகுவமே—அதன்
நன்னயம் முற்றும் உணர்குவமே.''

எம்பெருமான் கம்பன் இன்னருளே துணை யாக இன்னும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கம்பன் தனது நிகரற்ற உள்ளொளியைத் தாராளமாகப்பயன்படுத்திக் கொண்டுள்ளான். கையால் விதைப்பவருண்டு, இவனே சாக்குச் சாக்காகக் கருத்து விதைகளைக் கொட்டுகிறான்.

''கற்றோர் கவியில்பெரிதாம் தமிழ்க்கம்பநாடன்'' என்கிறார் ஈழத்தைச் சேர்ந்த பெரும்புலவர் அரச கேசரியார்.

கவிதைக்குப் பொருள் இன்றியமையாத தல்ல; இசையே உயிர்—poetry and its music என்பர்!

ஆங்கிலம் தெரிந்த தமிழர்கள் கம்பனையும் ஷேக்ஸ்பியரையும் ஒருங்கே அனுபவிக்கலாம்.

கவிதையைக் கற்பது என்பது சாத்தியமன்று. கவிதையைத் துய்ப்பதே (அனுபவிப்பதே) பொருத்தமாகும்.

கம்பனும், ஷேக்ஸ்பியரும் மேதா விலாசத் தில் ஒத்துப் போவார்கள். இருவரும், ''Fancy's child,'' என்று சொல்லும்படி, கற் பனாதேவியின் குழந்தைகளாவர்.

இச்சந்தர்ப்பத்தை வாய்ப்பாகக் கொண்டு ''கற்பனை'' குறித்து ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்.

மயிலைக் கபாலீசுவரர் கோவிலில் அறங்காவ லர் எனது நண்பராக இருந்ததால் கற்பகாம் பாளைத் தரிசிக்க அழைத்திருந்தார். ''தீபா ராதனையை வந்து பாருங்கள். திகைத்துப் போவீர்கள். தங்கள் ஐயப்பாடுகள் எல்லாம் அகன்றுவிடும். அத்தகைய கண் கொள்ளாக் காட்சி அது,'' என்றார்.

உடன்பட்டேன். அப்படியே நின்று பார்த் துக்கொண்டிருந்தேன். பிறகு கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் அமர்ந்தேன்.

என்ன ஆச்சர்யமான கனவு அது. அந்த வசீகரமான கனவை இன்றும் நான் மறப்பதற் கில்லை :—எப்படியோ கற்பகாம்பாளின் நிஜ சொரூபமான— மூல வடிவையே —கண்டு கொண்டேன்.

தேவியும் கண்களை மூடிக்கொண்டவளாய் கையால் என்னவோ செய்துகொண்டிருந்தாள்.

உற்று நோக்கினேன். ஏதோ ஒரு சிருஷ்டி யில் ஈடுபட்டிருந்தாள், தன்னை முழுக்க இழந்த வளாகி.

கூர்ந்து கவனிக்கலானேன். கணம் யுகமாய்க் கழிந்தது. தேவி திடீரென்று கண்களை மலர விழித்துக்கொண்டு இளநகை அரும்பினாள். ''தேவியே! நீ என்ன சிருஷ்டி செய்துகொண் டிருந்தாய்; ஒரு வேளை ஒரு பெரு வீரனுடைய மூளைத் திறனை, உருவாக்கிக்கொண்டிருந்தனை போலும்'' என்றேன். அவள் கையைத் தூக்கிக் காட்டினாள்; இதுதான் என்று. பிரமித்துப் போனேன், வண்ணாத்திப்பூச்சியின் இறகுகள் தான். தேவி மறைந்துவிட்டாள்.

அறங்காவலரின் முசமும், கும்பிட வந்தவர் களின்கூச்சலும், கும்பிடுகளும், என் உள்ளத்தை பக்தி உலகிலிருந்து—பகுத்தறிவு உலகத்திற்கு — மீண்டும் திருப்பிவிட்டன.

''வைத்த பகி ரண்டமெனும் மணற்சிற்றில்
இழைத்து இழைத்து ஓர்
பித்தனுடன் விளையாடும் பெய்வளையைப்
பாடுவனே''

தேவி வளையல்களைக் கையில் அணிந்த வண் ணம், காதலனுடன் சிற்றில் இழைத்து விளை யாடிக்கொண்டிருக்கிறாள். அந்தச் சிற்றிலை, ஒரு நிபுணனான கொத்தன் எப்படி அமைக் கிறானோ அப்படி அமைக்கிறாள். எனினும் காதலனாகிய பித்தன் தயை தாட்சண்யமின் றியே கடல் அலைகளை ஏவி அச்சிறு வீடுகளை அழித்துவிடுகிறான்.

எம்பெருமான் கம்பன் இணையடி வாழ்க.

கம்பன் குறிப்புக்கள்

1. 'செஞ்சொல்'

'செம்மை' என்ற சொல் நேர்மை; தெளிவு, பெருமை, திரிபு இன்மை எனப் பல பொருள் களை உடையது. செம்மையான சொல் 'செஞ் சொல்'. 'சொல்லின் தொகை அறிந்த தூய்மை யவர்' என்ற குறளுக்கு (711) உரைகாணும் பரிமேலழகர் ''சொல் மூவகைப்படும். செஞ் சொல், இலக்கணைச் சொல், குறிப்புச் சொல். அவற்றுள், 'செஞ்சொல்' வெளிப்படைச் சொல்'' என்கிருர். 'செஞ்சொல்': புகழ் என்று நச்சினர்க்கினியர் சிந்தாமணி 691-ல் பொருள் கொள்கிருர்.

'செஞ்சொல் கவிகாள்' (திருவாய்மொழி 10-7-1) என்ற இடத்து உரை ஆசிரியர்கள் ''கவிக்குச் செவ்வை ஆகிறது அநந்ய ப்ரயோஜ நமாய் இருக்கை. ப்ரயோஜநத்தைக் கணி சிக்கை கவிக்குக் குடிலம் ஆகை ஆவது'' (அநந்ய ப்ரயோஜநம்: ஏற்றுக்கொண்ட பயன் அன்றி, வேறு பயன் இன்மை. குடிலம்: ஒழுங் கின்மை, வக்கணை) சிந்தையும் சொல்லும் செயலும் ஒருப்பட்டிருக்கை செஞ்சொல். அவ்வாறே 'செந்தமிழ்' (6.5.11) செவ்விய தமிழ், பசுந்தமிழ், பொருளைத் தெளிவாகக் காட்டுவது.

கம்பன் காவியத்தில் 'செஞ்சொல்' கையா ளப்பட்டுள்ள இடங்கள் மூன்றினைக் காண் போம்.

அயோத்தி மாநகரம்:

அயோத்தி மாநகரம் ''செவ்விய, மதுரம் சேர்ந்தன, பொருளின் சீரிய, கூரிய, தீஞ் சொல் வவ்விய, கவிஞர் அனைவரும் வடநூல் முனிவரும் புகழ்ந்தது.'' கவிஞரையும் வடநூல் முனிவரையும் பிரித்துக் காட்டி உள்ளார். சொல்லுக்குச் செம்மை, மதுரம், பொருளின் சீர்மை, கூர்மை, இனிமை ஆகிய ஐந்து அடை மொழிகளைத் தந்து அத்தகைய சொல்லைக் கையாளும் கவிஞரைக் கூறி உள்ளார்; வடநூல் முனிவருக்கு அப்பண்புகளை ஏற்ருதது அவருக்கு அப்பண்புகள் இல என்ற கருத்தால் அன்று. அடைமொழி இன்றியே பெருமையைச் சுட்டுவ தும் உண்டு: ''அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன்'' என இராமனையும், ''அவள்'' எனச் சீதையையும், சுட்டியது போலே. இவ் ஐந்து பண்புகளையும் உடைய சொல் தமிழ்ச்சொல். அக்காலத்தில் இந்திய மொழிகளில் தமிழும், வடமொழியுமே (ஸம்ஸ்க்ருதம்) காவிய வழக் கில் இருந்தன; பிற மொழிகள் இத்துணை வளர்ச்சி பெறவில்லை.

தமிழில் அயோத்தியைப் புகழ்ந்த கவிஞர் கம்பன் காலத்தில் ஆழ்வார்கள் மட்டுமே. ஆத லின், இவ் அடைமொழிகள் அவரைச் சாரும் என பி. ஸ்ரீ. சொல்லுவார்.

காவிய நாயகியின் தோற்றுவாய்:

மற்ருேர் இடம் பிராட்டியின் தோற்றுவாய்.

தமிழ்ச்சொற் கலை தேர்ந்த அகத்திய முனிவன் உண்ட சுடர்மணிக் கடல் போல அகன்ற மிதிலைத் தெருவில் இராம லக்ஷ்மணர் முனிவனுடன் பல காட்சிகளைக் கண்டு செல் கின்றனர். கன்னி மாடத்தில், சதகோடி மின் சேவிக்க மின் அரசு என்னும்படி 'பெண்கனி' நின்ருள். அவள் உடல் ஒளி 'பொன்னின் சோதி'; அதனின்று எழும் வெறி 'போதினின் (தாமரைப்பூவின்) நாற்றம்'; குரல் இனிமை 'தேனின் தீஞ்சுவை'. அவை கண்டு, கேட்டு, உயிர்த்து அறியும் புலன்களுக்கு விருந்தாக அமைந்தன. புலன் நுகர்வு அன்றி, அறிவால் நுகரும் அழகு (Intellectual Beauty) ஆகிய 'செஞ்சொல் கவி இன்பம்' அங்கு உள் ளோர் சிந்தை நிறையப் புகுந்தது. 'மாயக் கவியாய் வந்து என் நெஞ்சும் உயிரும் உள் கலந்து, அவை உண்டு, நிறைந்தனனே' என்று ஆழ்வார் அநுபவித்த (10.7.1) இன்பம் அது.

கம்பன் பாட்டு கவிக்கூற்ருக அமைந்தது. கவியே சீதா பிராட்டியின் அழகை மாந்துகிருர். அவ் அழகு ஆசிரியனுக்குச் 'செஞ்சொல் கவி இன்ப'மாக வெளிப்படுகிறது. அவ் இன்பம் புலன்களுக்கு அப்பால் பட்டு நெஞ்சாலே மட் டும் அறியத்தக்கது.

செஞ்சொல் அறிவாளர் :

மூன்றுவது இடம் நாகபாசப் படலத்தில்.

இந்திர சித்தன் விட்ட நாகபாசத்தால் யாவ ரும் கட்டுண்டனர். 'சிறையால் வேதங்கள் பாட, சுடரோனின் மும்மை சுடர, முடிமேல் நிமிர்த்த முகிழ் ஏறுகையன், படிமேல் எழுந்து வருவான், விரைந்து பணிவான், பன்னி அழி வான்' கருடன். நாகம் மெலிந்தது. அம் மெலிவுக்கு உபமானமாக, கம்பன்.

''சடையன் தன் வெண்ணெய் அணுகும் தேசம் கலந்த கவிவாணர், **செஞ்சொல் அறி வாளர்**, என்று இம் முதலோர் பாசம் கலந்த பசிபோல் அகன்ற பதகன் துரந்த, உரகம்'' வெண்ணெய் நல்லூர்ச் சடையனிடம் பல நாடுகளினின்றும் கவிவாணர் வருவர். கம்பன் காலத்திலேயே ஸம்ஸ்க்ருதத்தினின்று தோன் றிய மொழிகள் முற்றிலும் செப்பவிடப்படாத நிலையில் நாட்டின் பல பாகங்களில் தோன்றி இருந்தன. அவை வளர்ச்சியுற்று இந்தி, வங் காளி, குஜராதி, மராடி போன்ற மொழிகளாக இன்று மிளிர்கின்றன. காவியம் வடிவு பெறு விடினும், 'தேசம் கலந்த' மொழிகளிலும் கவி வாணர் இருந்தனர்; அவர்களும், 'செஞ்சொல்' தமிழ்ச்சொல், அறிவாளரும் சடையனுடைய வெண்ணெயை அணுகினர். அவருடைய பசி எவ்வாறு உடனே அகலுமோ, அவ்வாறு அகன் றது நாகபாசம்.

'தேசம் கலந்த மறைவாணர்' என ஒரு பாட பேதம் உண்டு. இருக்கு முதலான வேதங்கள் நாடு முழுவதும் பரவி இருந்தன. அவற்றை அறிந்த ஸம்ஸ்க்ருதப் புலவர் என்று பொருள் கொள்ள வேண்டும்.

இம்மூன்று இடங்களிலும், 'செஞ்சொல்' என்ற தொடரால் கம்பன் 'தமிழ்ச் சொல்'லைக் குறிப்பிட்டுள்ளான்.

2. 'கருங்கடல் பள்ளி'

'கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப் பிரிந்தவர் கூடினல் பேசலும் வேண் டுமோ?' என்பது கவிக்கூற்று (மிதிலைக் காட்சி, 38). பெருமாளும் பிராட்டியும் கூடி இருந்தது பாற்கடலில்; பால், வெண் நிறத்தது; கம்பரோ 'கருங்கடல் பள்ளி' என்று கூறுகிறர். 'கருங் கடலில் கண் வளர்ந்தோய்' என இராமனை இந்திரன் துதிக்கிறுன் (சரபங்கர் பிறப்பு நீங்கு, 28).

இதற்கு அமைதிகாண, திருவாய்மொழி உரைகளுக்குப் போக வேண்டும்.

''முடிச்சோதியாய் உனது முகச்சோதி
மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற தாமரையாய்
அலர்ந்ததுவோ?''
(3.1.1)

'உன் திருமுகத்தின் காந்தி மேலே பரவி கிரீட மாக ஆயிற்றே? உன் திருவடிகளின் காந்தி கீழே பரவி நீ நிற்கிற பீடமான தாமரையாக ஆயிற்றே?' என்பது பிள்ளான் உரை. 'ஒத்த பண்பு உடையன ஆதலின் ஒன்றன் விரிவு, பரப்பு, மற்றென்றே என இரு கோடிகளிலும் செல்லாநின்றது' என்று பட்டர் சொன்ன தாகப் பெரியவாச்சான் பிள்ளை உரையில் காண்கிறேம். 'கடலுக்குள் பட்டதொரு துரும்பு ஒரு திரை ஒரு திரையிலே தள்ளக் கிடந்து அலையுமாப் போலே, ஓர் அழகு, ஓர் அழகிலே தள்ளக் கிடந்து அவற்றை அநுபவிக் கிறர்' என்பார் நம்பிள்ளை.

உன்னுடன் சேர்ந்தவை அனைத்தும் உன் ஞல் ஒளியும் நிறமும் பெற்றன. பாற்கடலும் உன் சரிய திருமேனி அழகால் 'கருங்கடல்' ஆயிற்று.

3. 'மேவும் மெய்'

தசரதன் சொன்னதாகக் கைகேயி இராம னிடம் கூறியது, ''நீ போய், தாழ் இரும் சடைகள் தாங்கி, தாங்கரும் தவம் மேற் கொண்டு, பூழி வெங்கானம் நண்ணி, புண் ணியத் துறைகள் ஆடி, ஏழ்-இரண்டு ஆண்டின் வா'' என்பது. இராமன் 'இப்பணி தலைமேல் கொண்டு', 'விடையும் கொண்டு' கைகேயி யின் 'அடியிணை இறைஞ்சி', 'தாதை பாதம் திசைநோக்கித் தொழுது,' அரண்மனையினின்று புறப்பட்டான்.

சடை, புறக்கோலம், தவம், அகக் கோலம்; கானம் நண்ணுவதும் துறைகள் ஆடுவதும் ஏழ் இரண்டு ஆண்டில் செய்ய வேண்டுவன.

வால்மீகத்தில் 'சடையும் மரஉரியும் தரித்துப் பதினன்கு ஆண்டுகள் வனத்துக்குப் போ' என்றே உளது (2.18.35-7) தவம் மேற்கொள்ளுதல் இல்லை.

தவத்தின் ஒரு பகுதி புலன்களை வெல்லுதல்; பிரமசர்யம். இது, பின்னர்ச் சீதை வாக்கில் வருகிறது. 'வீர, உனக்கு நாள்தோறும் பணி செய்து, புலன்களை அடக்கி, பிரமசரியம் பூண்டு உன்னேடு வனத்தில் **இன்புறுவேன்'** (சுஸ்ருஷமாணு, தே, நித்யம் நியதா, ப்ரஹ்ம சாரிணீ, ஸஹ **ரம்ஸ்யே** த்வயா, வீர, வனேஷு மது கந்திஷு 2.23.17) அவள் கூறும் இன்பம் அவனுக்குப் பணி புரியும் இன்பம்.

கம்பன் அவர்கள் வனம் புகும்போது 'விளையாடினர் போனர்' (கங்கை 6) என்கிறர். சீதையைப் பிரிந்த இராமன் புலம்பும் **'மெய் உறல் ஆசையால்** ஒருங்குறத் தழுவுவென், ஒன்றும் காண்கிலென்' 'தேன் பொதி தொண்டை அஞ் சேயொளித் துவர்த்த வாயமுது உண்டனென்' (அயோமுகி 96, 97) போன்ற பகுதிகள் உருவெளியில் நிகழ்வன; அன்றிப் பண்டை நினைவுகள் ஆகலாம்.

இராமனும் சீதையும் காட்டில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதற்குச் சான்று பகருபவள் சூர்ப்பணகை. அவள் முதலில் இராமனை மட்டும் கண்டதாக முதனூலினின்று மாறுபட்டு, கம்பன் கதையைச் செலுத்துகிறர். கண்டதும், அவன் 'தவத்தன்' என்பதை அறிகிறள் (சூர்ப்பணகை 11). 'தேயும் கற்பினள், புலர்ந்தனள், நின்றனள்' (19, 20). 'வஞ்சி என', 'மயில் வந்தது என', 'வந்தாள்' (24-26) இராமனும் சூர்ப்பணகையும் உரையாடும்போது, 'பெண்ணிடை அரசி..மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போல்வாள்,' (50) சீதை, வந்தாள். சூர்ப்பணகை சீதையைக் 'கண்ணில் **கண்டாள்'**; பண்பு உற 'நெடிது **நோக்கி'னள்**. பிறகு 'பொரு திறத்தானை நோக்கி, பூவையை நோக்கி, **நின்றுள்'** (53). சேர்த்தி அழகை முற்றிலும் அநுபவித்த சூர்ப்பணகை, 'உலகம் மூன்றின், (ஆண்-பெண்) இருதிறத்தார்க்கும் உருவினுக்கு செய்த வரம்பு இவர் இருவர்' என்றுள். ஆனல், இப் 'பூவைப்பூ வண்ணத்தான், மின்னைப் போல் இடையாளோடும், **மேவும் மெய்** (உடல் உறு புணர்ச்சி) உடையன் அல்லன்' (54) என்ற முடிவுக்கு வந்தாள். இருவரும் ஒத்த உருவும், வயதும், திருவும் உடையவர்; உடன் வாழ்பவர் ஆயினும், எவ்வாறு 'மேவும் மெய்' உடையர் ஆகாமல் இருத்தல் கூடும்? ஆதலின், அவள் 'என்னைப் போல் இடையே வந்தாள்' என்ற முடிவுக்குச் சூர்ப்பணகை குதித்துவிட்டாள். இத்தவறுன முடிவுக்குக் குதித்ததால், 'இகழ்விப்பேன் இவளை' என்னு, இராமனை நோக்கி, 'இவள் மாயம் வல்லள், வஞ்சனை அரக்கி' என்றெல்லாம் பேசல் உற்றுள்.

'மேவும் மெய் உடையன் அல்லன்' என்ற உடன்பாட்டு-எதிர்மறைச் சொல் தொடருக்கு, முன்பு ஒரு காலத்தில் 'மேவும் மெய் உடையன்' ஆகி, இப்போது 'அல்லன்' என்பது பொருள். பொதுவாக உளது; சிறப்பாக, இப்போது இலது. இத்தகைய பிரயோகங்கள் பல கம்பனில் உள : 'துயில்வார் உளர் அல்லர்' (ஊர் தேடு - 222) 'கண்டேன் அல்லேன்' (திருவடி தொழுத-29); 'பெற்றிலம், பிறந்திலம்' (இராவணன் மந்திர-14); 'பிறந்திலன் ஆக்க வந்தீர்' (மாயாசனக-15) போல்வன.

வால்மீகி இவ் ஐயத்திற்கு இடமே வைக்கவில்லை. இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் முற்றிலும் அநுபவித்ததைப் பல இடங்களில் கூறுகிறர். கரனை வென்ற இராமனைச் சீதை தானே வலிய காடாலிங்கனம் செய்துகொண்டது (3.30.39). கோதாவரியில் பாறைமீது, பிராட்டி 'தன்னை முற்றூட்டாக'த் தனி அடக்கமறைப்பு இன்றி இராமனுக்குத் தந்தது; அதை நினைத்து, இராமன் தன் உடம்பைக் கொடுப்பதிலே உதாரத் தன்மை உடையவள் என்றது; மாறி மாறி உட்கார்ந்தது; அவளுடைய புன்சிரிப்பும் பெருஞ்சிரிப்பும்; காதல் விளையாட்டில் இராமனை அப்ரதாநன் (சிறப்பில்லாதவன்) ஆக்கி, பிராட்டி ஸமர்த்தையாய், ப்ரதாநை (சிறப்புள்ளவள்) யாய்ப் பரிமாறியது (3.63.12) இவை அனைத்தும் வ்யாக்யாநங்களோடு படித்து, கேட்டு, இன்புறத்தக்கன.

சூர்ப்பணகை வாயால் கம்பன் புகழும் அழகு சேர்த்தியால் மட்டுமே ஒளிரும். ஆணும் பெண்ணும் ஒருவர்பால் ஒருவர் கொண்ட காதல் நிறைந்து வழியக் காண்பது காண்போர் பாக்கியம். காளிதாசன்,

பரஸ்பரேண ஸ்ப்ருஹணீய சோபாம்
நசேத் இதம் த்வந்த்வம் அயோஜயிஷ்யத் ||

அஸ்மின் த்வயே ரூப விதாந யத்ந:
பத்யு: ப்ரஜாநாம் விபலோ பவிஷ்யத் ॥
ரகுவம்சம் 7.14

''ஒருவர் காதலில் மற்றவர் திளைக்கும் இச் சேர்த்தி அழகு பிரமன் எடுத்த முயற்சிக்குப் பலன் அளித்தது. வெறும் உடல் அழகை மட்டும் அவர்க்குத் தந்து, அவருடைய சேர்த்தியையும் அளித்திராவிடின், பிரமன் அவர்க்கு அழகை அளித்த முயற்சி வீணாகி இருக்கும்'' என்ற தமிழாக்கம் மிகப்புல்லிது.

இருகருத்தை பவபூதி, ''சேர்த்தியில் ஒருவருடைய பண்புகள் மற்றவர் உடன் இருப்பதால் பொலிகின்றன. அப்பொலிவு பிரமனுடைய கைவன்மைக்குப் பலன் அளிப்பதுடன் அவரைக் காணும் பேறு வாய்த்த மக்களையும் மகிழ்விப்பது ஆகுக.''

வரீயான் அந்யோந்ய ப்ரகுண குண
நிர்மாண நிபுணோ
விதாது: வ்யாபார; பல து ச மனோ ஞ்: ச பவது
மாலதீ மாதவம் 1.16

என்று நாடகத்தின் தொடக்கத்தில் 'வரு பொருள்' கூறுகிறார்.

''வண்கமுகும் மதுமல்லிகை கமழும்'' என்ற திருவாய்மொழி (5.9.1.) உரையில் இராமாநுசர் சொன்னதாகப் பிள்ளான் கூறுவது: ''மல்லிகைக் கொடிகள் தங்களைச் சுற்றிக் கொண்டிருக்கும்படி தங்கள் உடம்புகளை அவைகளுக்குக் கொடுத்துக்கொண்டிருப்பதால் 'வண் கமுகு' என்றார்; கமுகுடன் சேர்ந்த மல்லிகை ஸந்தோஷத்தால் தேனைப் பெருக்குவதால் 'மதுமல்லிகை' என்றார்,'' சேர்த்தியால் இரண்டும் பொலிவுறும்.

'மேவும் மெய்' கருத்தியலான, சொல் அளவான, செயல் சாராத (Platonic) சேர்த்தியா என்பது வீண் வாதம். இக்காட்சிகளைச் சொல் ஓவியமாக வரைந்து நமக்குத் தந்துள்ள கவிச் சக்கரவர்த்தி கடவுள் அல்ல, மனிதனே! மனித உணர்வுகளையே, தான் ஆக்கிய பாத்திரங்கள் வழியாக நமக்குத் தந்துள்ளான்.

4. 'எங்ஙனம் வைத்து வாழ்தி?'

இது சூர்ப்பணகையின் கூற்று. ''சிவபெருமான் உமையைப் பாகத்தில் வைத்தான்; திருமால் திருமகளை மார்பில் வைத்தான்; பிரமன் கலைமகளை நாவில் வைத்தான்; சீதையை நீ பெற்றால் ''எங்ஙனம் வைத்து வாழ்தி?'' எனக் கேட்கிறாள்.

கேட்கும் பொழுதே 'நீ வாழ மாட்டாய்' என்ற பொருள் சுட்டப்படுகிறது. 'ஙனம்' என்ற சொல் இன்மைப் பொருளையே உணர்த்தும் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் பல உள. 'தன் ஊன் பெருக்கற்குப் பிறிதூன் உண்பான் **எங்ஙனம்** ஆளும் அருள்' (குறள் 252) என்ற பாட்டுக்கு உரைகாணும் பரிமேலழகர் 'ஆளான் என்பது பயப்ப நின்ற இகழ்ச்சிக் குறிப்பு' என்பர். '**எங்ஙனே** தரிக்கேன் உன்னை விட்டு (திருவாய்மொழி 7.2.1.) '**எங்ஙனம்** மறந்து வாழ்கேன்' (திருமாலை 23) போன்ற பிறர் பிரயோகங்களும், '**எங்ஙனம்** காட்டுகேன்?' (சூடாமணிப் படலம் 17), '**எங்ஙனம்** எய்தும் (37) போன்ற கம்பன் பிரயோகங்களும் இதனை உறுதி செய்கின்றன.

மேலும், இந்தப் பாட்டில், சீதைக்கு அடைமொழியாக வரும் சொற்கள் 'மேகத்தில் பிறந்த மின்னை வென்ற நுண் இடையினாள்' என்பன. இராமன் 'மழை முகில்' போன்றவன்; முகிலிலிருந்து மின்னலைப் பிரிக்க முடியாதது போல, இராமனிடமிருந்து சீதையைப் பிரிக்க முடியாது; பிரிக்க முயன்றால் மின்னலால் தாக்குண்டு மாள்வாய் என்பது, 'த்வநி' என வட நூலார் கூறும், பொருள் ஆக்க அணி.

5. 'துயில் துறந்தான்'

நூலாசிரியன் தான் படைக்கும் பாத்திரங்களுக்கு உரிய பண்புகளைத் தருகிறான்; தருகைக்கு ஏற்ற சூழ்நிலைகளை அமைத்துக்கொள்கிறான்; அவற்றிற்காக, முந்தையோர் மொழியினின்று மாறுபடுகிறான். இவற்றிற்கான முழு உரிமையும் அவனுக்கு உண்டு.

இளையபெருமாள் வனத்தில் இராமனுடன் இருந்த பதினான்கு ஆண்டுகளும் உறங்கவில்லை எனக் கம்பன் கூறுவது வால்மீகத்துக்கு முரண்பாடு; ஆழ்வார்களும் கூறாதது.

1. கங்கைக் கரையில்:

இக்கருத்து முகிழ்த்தது கங்கைக் கரையில். ''அழுது அன்னாளும் வீரனும் விரித்த நாணல், மாலைவாய் பாரின் பாயல் வைகினர்; வரிவில் ஏந்திக் காலை வாய் அளவும் தம்பி **இமைப்பிலன் காத்து நின்றான்**'' (குகப்படலம் 21) என்பது

இலக்குவன் துயிலாது நின்றதற்கு முதல் சுட்டுக் குறிப்பு. அவனுடன் குகன் ''விழித்த கண்ணன் தம்பி நின்றானை நோக்கி, தலைமகன் தன்மை நோக்கி, கண்ணீர் அருவிசோர் குன்றின் நின்றான்'' (22) (குன்றின் - குன்றைப் போல)

இவ் இருவர் நிலையும் இவ்வாறே வால்மீகத்திலும் கூறப்பட்டுள்ளது. (II. 51-26, 27, 50). விளக்கம் கூறும் பிள்ளை லோகாசாரியார் ''இளையபெருமாளை ஸ்ரீ குகப்பெருமாள் ஐயப்பட்டார் இருவரையும் ஐயப்பட்டு ஸ்ரீகுகப் பெருமாளுடைய சேனை ஸ்ரீராமபிரானைப் பாது காத்தது. ஏனெனில், ஒருநாள் பெருமாளுடைய திருமுகத்தைப் பார்த்தவர்களை அவ் அழகு படுத்தும் பாடாயிற்று இது.'' (ஸ்ரீவசன பூஷணம் 251-52) என்கிறார்.

புது இடம் ; புது பரிசனங்கள்-அவரும் வேடர். அன்றிரவு இளையபெருமாள் 'நடமாடும் மதிள் போலே வளைய வருதல்' வியப்பன்று. அவரைக் குகன் ஐயுறுதலும், குகனை அவர் சேனை ஐயுறுதலும், அவர்கள் இடையில் உள்ள ஒரு பொக்கிஷத்தின்மீதுள்ள ஆசையால். இலக்குவனும் குகனும் ஒருங்கே நிற்கவில்லை; வெவ்வேறு இடங்களில் நின்றனர்.

இக்காட்சி மீண்டும் பரதனிடம் குகன் பேச்சாக ''அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச, வில்லை ஊன்றிய கையொடும் வெய்துயிர்ப் போடும் வீரன்..... கங்குல் எல்லை காண்பளவும் நின்றான், இமைப்பிலன் நயனம்'' என வருகிறது. 'அவன் அவ்வாறு நின்றது உனக்கு எப்படித் தெரியும்?' எனப் பரதன் கேட்கவில்லை. கேட்டிருந்தால், குகன் இலக்குவனைக் கண்காணித்து நின்றது வெளிப்பட்டிருக்கும்.

வால்மீகியும் இதே கருத்தைக் குகன் பரதனிடம் தெரிவிப்பதாக இருமுறை அமைத்திருக்கிறார் (II 86: 2-7; 87:20, 24)

2. தண்டக வனத்தில்:

சீதையைப் பிரிந்த இராமனுடைய நலிவைக் கூறும் கம்பன் ''இமைத்தில இராமன் கண்ணும் வன்தோள் தம்பிகண் போன்ற அன்றே'' (அயோமுகி 5). இது கவிக்கூற்று.

3. கடற்கரையில் :

வீடணனை ஏற்ற இராமன் தம்பியை, ''துஞ்சலில் நயனத்து ஐய, சூட்டுதி மகுடம்'' எனப் பணிக்கிறான் (வீடணன் அடைக்கல.141). இது பதினான்கு ஆண்டு வனவாசத்தின் இறுதிக் காலத்தில் நிகழ்வது; ஆதலின், இத்துணைக் காலமும் தம்பியின் உறங்காத் தன்மையை வள்ளல் அறிந்திருக்கிறான். அதைத் தடுக்க ஏதும் செய்யவில்லை, எனத் தெரிகிறது.

இராமன் ஆணை இட்டபடி மகுடச்சூட்டு அப்போது நடைபெறவில்லை. வீடணனே 'இளையவற் கவித்த மோலி'யை (பாதுகையை)த் தானே சூட்டிக்கொண்டான். எனினும், இனி மேலே கும்பகருணன் கையடை செய்யப் போகும் 'உம்பியைத்தான், உன்னைத்தான், அனுமனைத்தான் ஒருபொழுதும் எம்பி பிரியானாக அருளுதி' ('கும்பகருண 352) என்ற வேண்டுகோளுக்கும், அதை நிறைவேற்ற இலக்குவன் விழிப்புடன் ''முன் நின்றார் எலாம் பின்உற, காலினும் முடுகி 'நின்மின், யான் இது விலக்குவென், என்று உரை நேரா மின்னும்வேலினை...பொன்னின் மார்பிடை ஏற்ற'' (வேலேற்ற 32) செயலுக்கும் 'துஞ்சலில் நயனத்தைய' என்ற இராமன் வாக்கு தோற்றுவாயாக அமைகிறது.

4. ஒற்றர் கூற்று

இராவணனுடைய ஒற்றர் இராமனுடைய படைவலியைத் தலைவனுக்குக் கூறும் பொழுது, ''துறக்கம் எய்தியவரும் துறவாத, உறக்கம் என்பதை ஒட முனிந்தான்'' (தானை காண் 12) என இலக்குவனை அறிமுகப்படுத்துகின்றனர். எதிரியின் பழக்கவழக்கங்கள், நோன்மை-நொய்ம்மைகளை அரசனுக்கு அறிவிப்பது ஒற்றர் கடமை.

5. கவிக் கூற்றுக்கள்

''துயில் பிரிந்தான்'' (முதல் போர்-158) ''மனையும், வாழ்வும் உறக்கமும் மாற்றினான்'' (நாகபாச-153), ''துயில் துறந்தான்'' (நிகும்பலை-103) என்பனவும் குறிப்பிடற்குரியன.

வால்மீகி :

வால்மீகி இவற்றில் ஒன்றையும் கூறாதது தவிர, இலக்குவன் உறங்கியதாகவே கூறுகிறார். பரத்வாஜ ஆசிரமத்திலிருந்து சித்திரகூடம் செல்லும் வழியில், ஒரு நாள் காலை,

''அத: ராத்ர யாம் வ்யதிதாயாம் அவஸுப்தம் அநந்தரம் |
ப்ரபோத யாமாஸ சனைர் லக்ஷ்மணம் ரகு புங்கவ:'' ||

'ஸௌமித்ரே ச்ருணு வந்யாநாம் வல்கு வ்யாஹரதாம் ஸ்வநம் |
ஸம் ப்ரதிஷ்டாமஹே கால: ப்ரஸ்தாநஸ்ய பரந்தப'' ||
ப்ரஸுப்தஸ்து ததோ ப்ராத்ரா ஸமயே ப்ரதிபோதித: |
ஜஹௌ நித்ராம் ச தந்த்ராம் ச ப்ரஸக்தம்ச பரிச்ரமம்'' ||
II 56: 1-3

(பின்னர், இரவு கழிந்த பின், ராகவன் எழுந்து லக்ஷ்மணனை மெல்ல எழுப்பினர். ''எதிரிகளை வாட்டுபவனே, ஸுமித்ரா குமாரனே, வனத்தில் எழும் இனிய (புள்) ஒலிகளைக் கேள்; இங்கிருந்து புறப்படுவதற்கு ஏற்ற காலம் இது; புறப்படுவோம்'' என்றார். உறங்கிக்கொண்டிருந்தவன் இவ்வாறு உரிய காலத்தில் எழுப்பப்பட்டுத் தன் உறக்கத்தையும், சோம்பரையும், தன்னைப் பிடித்திருந்த தளர்ச்சியையும் விட்டான்.)

இலக்குவன் துயில் துறந்ததை ஆழ்வார்களும் கூறவில்லை.

பின், இக்கருத்து எங்கு உதித்தது? வேறு யாராவது கூறி உள்ளனரா?

பிற நூல்கள் :

அத்யாத்ம ராமாயணம் யுத்த காண்டம் 8: 64-66லும், ஆநந்த ராமாயணம் ஸார காண்டம் 11: 176-177லும், இந்திரசித்து பன்னிராண்டு **உணவும் உறக்கமும்** துறந்தவனாலே வெலற்கு உரியன் என வீடணன் இராமனுக்கு உரைத்ததாகக் கூறப்படுகிறது. அப்போது இராமன், இலக்குவன் ஒருவனே இந்திரசித்தைக் கொல்லத் தகுதி உடையவன் என்பதை அறிந்து, இலக்குவனை நிகும்பலைக்கு ஏவுகிறான்.

கம்பனோ, வால்மீகியோ, இந்திரசித்து இவ்வரத்தைப் பெற்றதாகக் கூறவில்லை. அவன் உறக்கத்தை விட்டதாகக் கூறும் கம்பனும் உணவை விட்டதாகக் கூறவில்லை. வால்மீகியோ, இராமலக்குவர் தண்டக முனிவர் அளித்த உணவை ஏற்றுக்கொண்டதாக இருமுறை கூறுகிறார் (III 1.22; 12.27). கங்கையைக் கடந்ததும், அவர்கள் பல விலங்குகளை வேட்டையாடிக் கொன்று, தசையைத் தீயில் வாட்டி உண்டதாகவும் இருமுறை கூறுகிறார். (II 52.102; 56. 22-27)

முடிவுரை :

பொதுவாக, இயல்பு எளிமை உள்ள ஆதி காவியங்களில் இயற்கைக்குப் புறம்பான நிகழ்ச்சிகள் மிகக் குறைவு; இடைக்கால நூல்களில் அவை காவிய பாத்திரங்களுக்குத் தெய்விகத்தன்மை ஊட்டுவதற்கென ஆசிரியரால் புகுத்தப்பட்டன; நாளடைவில், விஞ்ஞான அறிவு ஒருபால் வளர்ந்திருந்தும், அதற்கு எதிர்த்தட்டான கற்பனைகளும் வளர்ந்தன.

6. 'திருக்கு'

'சத்துருக்கன்' என்ற சொல்லுக்கு எதுகையாகக் கம்பன் 'எத்திருக்கும் கெடும்' (திரு அவதாரம் 118), 'அத்திருக்கும் கெடும்' (மீட்சி 66) என இரு இடங்களில் 'திருக்கு' என்னும் சொல்லைப் பெய்து, அது 'கெடும்' எனவும் கூறியுள்ளார்.

'திருக்கு': மாறுபாடு, முரண்பாடு பொது வாழ்க்கை நெறியிலிருந்து விலகியது.

சத்துருக்கன் வெண் மேனியனைப் பிறந்தான்: அவனுடைய மேனி ஒளியால், 'எத்திருக்கும் கெடும்' என வதிட்டன் எண்ணி, அவனுக்குச் 'சத்துருக்கன் என நாமம் சாற்றினன்' என்பது இராமாவதாரம். ஸம்ஸ்க்ருதத்தில், 'ஸத்ருக்நன்' என்பதற்குப் 'பகைவரை அழிப்பவன்' என்று பொருள். வால்மீகத்தில், அவன் 'நித்ய ஸத்ருக் ந:' (எப்போதும் உடன் வாழும் ஐம்புலன்களாகிய பகைவரை வென்றவன்) எனப் புகழப்படுகிறான் (2.1.1).

கம்பன் சத்துருக்கனை மீண்டும் குறிப்பிடும் இடம் பள்ளிபடைப் படலத்தில், பரதன் வினவை உறுதிப்படுத்த, 'ஊழிவாழ் திருநகர்த் திருதீர்ந்தனள் ஆம்' [ஊழிக்காலம் வரை வாழ வேண்டிய அயோத்தியின் திரு நீங்கியது போலும்] எனக் கூறுவது (37). தசரதனுக்கு ஈமக்கடன் செய்வதும் (130) மந்தரையைச் சினந்து பற்றுதலும் (ஆறு செல். 54) அவன் செயல்கள். இங்கு கவி அவனைக் குறிப்பிடும் சொற்கள் 'இளைய தோன்றல்,' 'இளவல்' என்பன.

காவியத்தின் இறுதியில், சொன்ன நாளில் இராகவன் தோன்றாததால், பரதன் 'மின்னு

தியிடை யான் இனி விடுவென்; (நீ) மன்னன் ஆதி' எனச் சத்துருக்கன் 'கானுளப் போன இராமனை ஒரு தம்பி பின்தொடர்ந்தான்; குறித்த நாளில், இராமன் வராததால் ஒரு தம்பி உயிர்விடத் துணிந்தான்; நானே அரசாள உரியவன்?' என்றான். தொடர்ந்து, இராமன் வனம் சென்ற பின், அயோத்தியில் நுழையாமல் நந்தியம் பதி இடை, நாதன் பாதுகம் செந்தனிக் கோல் செலுத்த, தவம் புரிந்தான் பரதன்; அவனுக்குப் பின் அவனுடைய அடிமை (சத்துருக்கன்) இருப்பதும் அரசாள்வதும் ஒன்றே' என்றான்.

[சில பதிப்புகளில் இப்பாட்டின் (மீட்சி 65) மூன்றும் அடியில் 'உன் அடிமை உனக்கு இருந்ததேனும்' என்ற தொடர் 'என் அடிமை உனக்கு இருந்ததேனும்' என்று இருத்தல் வேண்டும். சத்துருக்கனுடைய அடிமை பரதனுக்கு இருந்தது; 'உன் அடிமை உனக்கு' என்பதில் பொருள் இல்லை.]

கேட்ட பரதன், சத்துருக்கன் அரசாள உடன்படாமை ஆகிய 'திருக்கு'ம் கெட 'எரி அமைக்க' என்றான்.

'திருக்கு' என்ன?

அடிமைத்தனத்தை மூவகைப்படுத்துகிறார் நம்மாழ்வார்.

எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும், எல்லாத் தொண்டுகளையும் செய்து உடன் இருப்பது. 'ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி, வழுஇலா அடிமை செய்ய வேண்டும் நாம்' (திருவாய்மொழி 3.4.1) என, 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' (வால்மீகி 2.31.25) என 'நான் எல்லாப்பணிகளையும்செய்யக் கடவேன்' என்ற இளைய பெருமாளைப் போலே, **'நீக்கம் இல்லா அடியார்'** (8.10.10). கம்பன் வாக்கில் இவ் அடிமை 'சிற்றம் துறந்தான்; எதிர் நின்று தெரிந்து செப்பும் மாற்றம் துறந்தான்..தணிவு எய்தி நின்றான் (நகர் நீங்கு 137) அவனுடைய தனிச் சிறப்பியல்பு (Individual personality) அன்றேடுமாய்ந்தது. வாலியைப் பற்றி ஏதோ சொல்ல வந்தான். இராமன் ஒரு மொட்டை அடியால் குலைத்துவிட்டான். வீடணனை ஏற்பது பற்றி அவனைக் கேட்கவே இல்லை.

இரண்டாவது, **'சயமே தலை நின்றார்'** (8-10-2) என்ற பரதாழ்வான் நிலை. 'சயம்' என்பது 'ஸ்வயம்' என்ற ஸம்ஸ்க்ருதச் சொல்லின் தமிழ் வடிவம். தானாகவே, இராமனுடைய ஏவல் இன்றி, அடிமைத்தனத்தைப்பற்றியவர் பரதன். 'திருவடிகளை ஸ்வயம் ப்ரயோஜநமாக (அவையே பயனாக) வணங்கி, இந்தச் சரீரத்திலேயே ஆநந்தத்தை அடைவது; புலன்களால் பெறக்கூடிய இன்பங்களில் பற்றை விட்டு, தன்னையே அநுபவிக்கும் கைவல்யம் எனப்படும் இன்பத்தையும் விட்டு, இராமனுடைய திருவடி நிலைக்கு அன்பு பூணும் இன்பத்தை அநுபவித்தார் பரதன்' என்பது வியாக்யாநம்.

இதை விளக்க கம்பனுக்குப் போவோம்.

இராமன் சித்ர கூடத்தில் பரதனிடம், உன் தந்தை சொல் மரபினால், அவன் தரணி உன்னுடையது என்று இசைந்த செயலால், உனக்கு உரிமையும் உண்டு ஆகையால்',— இம்மூன்று காரணங்களால்—'அரசு நின்னதே' (திருவடி சூட்டு 109) என, பரதன் 'பார் என்னது ஆகில், யான் இன்று தந்தனென், மன்ன, மகுடம் சூடு' என்றான். இங்கு, பரதனுடைய 'என்னது, யான் தந்தனென்' என்ற மமகார, அகங்கார உணர்ச்சி தோன்றும் சொற்கள் அடியாருக்கு அடுக்காதவை. பின்னர் பரதன் 'செம்மையின் திருவடித்தலம் தந்தீக' எனப் பாதுகைகளைக் கேட்டுப் பெற்று, 'நான் செய்கிறேன்' என்ற எண்ணத்துடன் அடிமை பூண்டு அவ் இன்பத்தை அநுபவித்தான்.

இது 'கோது': தவறு; குற்றம்; பரதனுடைய அடிமைத்தனத்திற்குக் களங்கம்.

மூன்றாவது **'கோது இல் அடியார்'** (8.10.9) இராமபக்தி ஆகிய 'கோது'ம் இன்றி சத்துருக்கனைப் போலே 'அடியாரே எம்கோக்கள்; அவர்க்கே (நாம்) குடிகள்' என்னும் 'நல்ல கோட்பாடு', (8.10.10) பெருமாளுக்கு அடிமையாக, பரதன் தீயிடை வீடியபின்; பாதுகையைத் தாங்கி நிற்கும் தன்மையை வேண்டாது, அத் 'திருக்கு'ம் கெட, அடியானுக்கு அடியானாக இருக்கும் நிலையையே வேண்டுவது.

இத்திருவாய் மொழியின் உரைப் பாயிரத்தில், நம்பிள்ளை 'ஆத்மாவின் அடிமைத்தனம் இறைவனுக்கு அன்று; அடியாருக்கே,

ஒருவன் இம்மையில் பெற வேண்டுவன (புருஷார்த்தம்), செல்வம் அன்று, தன்னில் திளைக்கும் கைவல்யம் அன்று, இறைவனுக்குத் தொண்டு புரிவது அன்று, இன்பமயனாய் என்றும் இருப்பதும் அன்று; இவை யாவும் ஒன்று சேர்ந்தாலும், அடியாருக்கு (மக்களுக்கு)த் தொண்டு செய்வதோடு ஒவ்வாது. அதுவே பெற வேண்டிய இன்பம்' என்று எழுதுகிறார். அந்நிலைக்கு எடுத்துக் காட்டு 'எத்திருக்கும்' **கெட்ட சத்துருக்கன்.**

7. நீக்கப்படவேண்டிய பாட்டுக்கள்

கம்பராமாயணத்தில் இடைச்செருகல் பாடல்கள் உள என்பது அனைவரும் அறிந்ததே. இடைச்செருகலை உறுதியாக்குவதற்குப் புறக்கணிக்க முடியாத காரணங்களுள் ஒன்று 'உள்முரண்பாடு'. எல்லாப் பதிப்புக்களிலும் காணப்படும் இரு பாடல்களைக் கொண்டு இக்காரணத்தை விளக்குவேன்.

'அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்'; 'இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்'; 'மைந்தனும் முனியொடு மறையப் போயினான்'; சீதை 'அமளியில் குழைந்து சாய்ந்தனள்'.

'கதிரவன் வரையில் மூழ்கினான்' (மிதிலைக் காட்சி—61.)

'ஆலம் உலகில் பரந்ததுவோ?...என விளைக்கும் இருளாய் விளைந்தது' (மிதிலைக் காட்சி—67) சனகன் கோயிலில் 'தூண்டல் செய்யா மணி விளக்கின் சுடரால் இருளைப் பகல் செய்தார்' (69). அப்போது, 'இருளின் பிழம்பை நக்கி நிமிரும் நிலாக்கற்றை வெள்ளிக் கும்பத்து இளங்கமுகின் பாளை போன்று விரிந்தது' (72) சீதைக்குக் 'கரு நெருப்பிடையே வெண் நெருப்பு எழுந்தது (76).

இது, பேரிருள் பக்கத்து மூன்று, நான்கு நாட்கள் கழிந்த நிகழ்ச்சி ஆகலாம்.

எழுந்த திங்கள், 'கங்குல் அரசன் கதிர்க் குடை விழுந்தது என்னவும், மேல் திசையாள்... சுட்டி போய் அழிந்தது என்னவும் ஆழ்ந்தது, (கைக்கிளை 11) புதை இருள் சூழ்ந்தது. 'புதை இருளின் எழுகின்ற...உதையகிரி எனும் கடவுள் நுதல் கிழித்த விழியேபோல் (வெய்யோன் உதயம் செய்தான்' (13)

திங்கள் ஆழ்ந்து, இருள் சூழ்ந்தபின் கதிரவன் எழுவது வளர்பிறையில் மட்டுமே நிகழ உரியது.

ஒரே இரவில் முன் இருளும் பின் இருளும் இருக்க முடியாது.

பாடல்கள் அனைத்துமே மிக அழகியன. ஆனால், முரண்பாடு காரணமாக, முன் இருளோ அன்றிப் பின் இருளோ, திங்கள் உதயமோ அன்றி ஆழ்கையோ, நீக்க வேண்டுவன.

கம்பனும் ஆழ்வார்களும்

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

தமிழ்நாட்டில் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் தோன்றிப் பக்தியைப் பெருக்கெடுத்துப் பரந்தோடும்படியாகச் செய்ததன் விளைவுதான் கம்பனது இராமகாதையாகும். இந்தப் பக்திப் பெருக்கு இராமாநுசர் காலத்தில் இராமாயணம் என்னும் பெருவாய்க்காலின் வழியே சென்று தமிழ்நாட்டில் பாய்ந்துகொண்டிருந்தது. இது,

> படிகொண்ட கீர்த்தி இராமாயணம்
> என்னும் பக்திவெள்ளம்
> குடிகொண்ட கோயில் இராமாநுசன்[1]
> (படி - உலகம்)

என்ற அமுதனுர் வாக்கால் தெளிவாகின்றது. கம்பனும்,

> முன்னோர் மொழிபொருளே
> யன்றி அவர்மொழியும்
> பொன்னேபோற் போற்றுவம் [2]

என்ற தமிழ் இலக்கிய மரபினையொட்டித் தனக்கு முன்னிருந்த புலவர்களின் கருத்துக்களைத் தாராளமாக எடுத்துக் கொண்டுள்ளான் என்பதைக் கம்பராமாயணத்தை ஊன்றிப் படிப்பார் தெளிவாகக் காண்பர். இக்கட்டுரையில் கம்பனில் ஆழ்வார்களின் தாக்கம் பற்றிய சில இடங்களைக் காண்போம். கம்பனது இராம பக்தி அவனைப் பிற்காலத்தார் 'கம்ப நாட்டாழ்வார்' என்று வழங்கும்படியாகவும் செய்துவிட்டது என்பதனையும் நாம் அறியலாம்.

1. தத்துவக் கருத்துகள் :

இறைவன் அநந்த கல்யாண குணங்களையுடையவன்; அவன் பெருமைகள் பேசி முடியா. இவற்றை அடக்கிக்கொண்டு அவன் ஆயிரத்திற்கு மேற்பட்ட (எண்ணற்ற) பெயர்களைத் தாங்கி நிற்கின்றான், கம்ப நாடன்,

> நினையும் தேவர்க்கும் நமக்கும் தத்
> தொருநெறி நின்ற
> அனகன் அங்கணன் ஆயிரம்
> பெயருடை அமலன் [3]

என்று இராமனைக் குறிப்பிடுவன். மன்னுலகில் பிறந்து சிறப்பான அறிவைப் பெறாத நம்மைப் போலவே, அறிவு ஆற்றல்களில் மிக்கவரென்று நம்மால் மதிக்கப்பெறும் தேவர்களாலும் அவன் பெருமையை அறியவொண்ணாது என்பது கவிஞனின் குறிப்பு. ஆண்டவன் ஆயிரம் பெயருடைய அமலன் என்பதையே சடகோபன் வாய்மொழியாக,

> பேரா யிரங்கள் உடையாய் பிறந்த
> பொருள்தோறும் நிற்றி [4]

என்று பேசுவன், ''நாமங்கள் ஆயிரம் உடைய நம்பெருமான்'' [5], ''பேரும் ஓர் ஆயிரம் பிறபல உடைய எம்பெருமான்'' [6], ''பேராயிரம் உடைய பேராளன்'' [7] என்ற ஆழ்வார்களின் வாக்குகளை நினைவிற்கொண்டே இங்ஙனம் கவிஞன் பேசுவதாகக் கொள்ளலாம்.

சித்தும் அசித்தும் ஈசுவரனின் உடலாக அமைந்துள்ளன என்பது வைணவ சமயக் கொள்கை. இஃது உடல் உயிர் உறவு (சரீர-சரீரி பாவனை) என்று வழங்கப்பெறும். இக் கருத்து,

> வானின்று இழிந்து வரம்பிகந்த
> மாபூ தத்தின் வைப்புஎங்கும்
> ஊனும் உயிரும் உடலும்போல்
> உள்ளும் புறனும் உளன் என்ப. [8]

1. இராமாநுச நூற்றந்தாதி — 37
2. நன்னூல் — 9
3. அயோத். சித்திரகூட — 1
4. யுத்த. நாகபாசப் — 261
5. திருவாய் — 5 : 9 : 11
6. ஷை — 1 : 3 : 4
7. பெரி. திரு. — 8 : 1 : 6
8. அயோத். காப்பு

என்ற பாடற்பகுதியில் அமைந்திருப்பதைக் காணலாம். இங்கு 'வான்' என்பது மூலப் பிரகிருதி (அசித்து). மூலப்பகுதியிலிருந்து தோன்றிய ஐந்து பூதங்களின் விகாரமே இந்த அகிலம்.

வானும் நிலனும் முதலீறில்
வரம்பில் பூதம் [9]

என்று பூதங்களின் வரம்பின்மையைப்பற்றிப் பின்னும் விளக்குவன். இங்கு ''உணர்வு' என்பது தர்மபூத ஞானம். பிரகிருதியின் உள்ளே இருப்பதற்கு ஊனுக்குள் உயிர் இருப்பது உவமை; அங்ஙனமே அவன் அதன் வெளியில் இருப்பதற்கு உயிரில் உணர்வு இருப்பது உவமை. 'ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறனும் உளன் என்ப' என்னுமிடத்து,

திடவிசும்பு எரிவளி
நீர்நிலம் இவைமிசைப்
படர்பொருள் முழுவதும்
ஆய்அவை அவைதொறும்
உடல்மிசை உயிர்எனக்
கரந்துஎங்கும் பரந்துளன். [10]

என்ற ஆழ்வார் பாசுரத்தின் கருத்தினை அடக்கிக் கொண்டிருப்பது ஈண்டு கண்டு மகிழத் தக்கது. உயிர் உடம்பினுள் இருந்து அதனைத் தரிக்கச் செய்து அதற்குத் தலைவனாக நின்று அதனை நடத்துவதுபோலவே, இறைவனும் எல்லாப் பொருள்களுள்ளும் இருந்து அவற்றைத் தரிக்கச் செய்து அவற்றிற்குத் தலைவனாக நின்று அவற்றைத் தன் விருப்பம்போல் நடத்துகின்றனன் என்பது இதன் கருத்தாகும்.

பிறிதோரிடத்தில் இந்த உடல்-உயிர் உறவு பற்றிய கருத்து மிகத் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளது.

மூன்றுரு எனக்குணம்
மும்மையாம் முதல்
தோன்றுரு எவையும்அம்
முதலைச் சொல்லுதற்கு
என்றுரு அமைந்தவும்
இடையின் நின்றவும்
சான்றுரு உணர்வினுக்கு
உவந்த தாயினன் [11]

[முதல்-மூலப் பிரகிருதி; தோன்றுரு—மூலப் பகுதியில் தோன்றும் எல்லாத் தத்துவங்கள்; ஏன்றுரு-வடிவமைந்த அகிலம்; இடையில் நின்றவும்-சீவர்கள்; சான்றுரு-சிறந்த சரீரம்]

என்ற பாடலில் இந்த விளக்கத்தைக் காணலாம். மூலப்பிரகிருதியும் அதில் தோன்றும் சேதநா சேதனங்களின் வடிவமான எல்லாப் பிரபஞ்சமும் இறைவனுக்குத் திருமேனியாகும் என்பது இதன் கருத்தாகும். மூலப் பிரகிருதியினின்று தோன்றும் தத்துவங்கள் 24 என்பதை,

பொங்கு ஐம்புலனும் பொறிஐந்தும்
கருமேந்திரியம் ஐம்பூதம்
இங்குஇவ் உயிர்ஏய் பிரகிருதி
மான்ஆங் காரம் மனங்களே [12]

என்ற ஆழ்வார் பாசுரம் விளக்கும். அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய புலன் ஐந்தும்; மெய், வாய், கண், செவி, மூக்கு ஆகிய பொறி ஐந்தும்; வாக்கு, கால், கை, பாயு, உபத்தம் ஆகிய கருமேந்திரியங்கள் ஐந்தும்; மண், நீர், எரி, கால், வான் என்னும் பூதங்கள் ஐந்தும்; இங்குள்ள இந்த ஆன்மாக்கள் பொருந்தியுள்ள மூலப் பிரகிருதி ஒன்றும்; மகத் தத்துவம் ஒன்றும்; அகங்காரத் தத்துவம் ஒன்றும் மனம் ஒன்றும் ஆக 24. இவற்றுடன் புருடன் (ஆன்மா), இறைவன் (ஈசுவரன்) ஆகிய இரண்டும் சேர விசிட்டாத்வைத தத்துவங்கள் 26 ஆகின்றன.

படைப்புக் காலத்திற்கு முன்னர் சேதநா சேதநங்களெல்லாம் தன் திருமேனிக்குள் பரவி நிற்கப் பரம்பொருள் ஒன்றே தனித்து நிற்கும். அந்தப் பரம்பொருள் 'பலவாகக் கடவேன்' என்று சங்கற்பித்துக் கொண்டு இவ்வுலகத்தையெல்லாம் தன் திருமேனியினின்று விரியச் செய்யும். இங்ஙனம் தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் என்ற நால்வகைப் பிறவியாகத் தோன்றிய பொருள்தோறும் இறைவன் மறைந்து அந்தர்யாமியாகப் பரந்துள்ளான். இதனைக் கம்பநாடன் இந்திரன் வாய்மொழியாக,

ஒன்றாகி மூலத்(து) உருவம் பலவாகி
உணர்வும் உயிரும் பிறிதாகி ஊழி

9. ஷை நகர் நீங்கு. — 120
10. திருவாய் — 1 : 1 : 7
11. கிட்கிந். காப்பு.
12. திருவாய் 10 : 7 : 10

சென்ருச ருங்காலத்து அந்நிலைய தாகித்
திறந்துலகம் தாளுகிச் செஞ்செவே நின்ற
நன்ருய ஞானத் தனிக்கொழுந்தே [13]
[ஆசறுதல்—முடிதல்]

என்று கூறுவன். இங்கு 'ஒன்ருகி......ஞானக் கொழுந்தே' என்றது,

கரந்தசில் இடந்தொறும்
இடந்திகழ் பொருள்தொறும்
கரந்தெங்கும் பரந்துளன்
இவைஉண்ட கரனே. [14]

என்ற ஆழ்வார் பாசுரப் பகுதியை நினைவிற் கொண்டு என்று கொள்ளலாம். மேலும் இந்திரன் வாய்மொழியாகவே இறைவனின் அந்தர் யாமித்துவத்தை,

தோய்ந்தும் பொருளனைத்தும்
தோயாது நின்றசுடரே. [15]

என்று வற்புறுத்துவன்.

ஈசுவரன் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் தனது சங்கற்பத் தாலேயே வருத்தமின்றி நிறைவேற்றுவான், இதனைக் கம்பநாடன்,

உலகம் யாவையும்
தாம்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும்
நீங்கலும் நீங்கலா
அலகி லாவிளை
யாட்டுடை யாரவர்
தலைவர்; அன்னவர்க்
கேசரண் நாங்களே. [16]

என்று கூறுவன். இங்கு 'உளவாக்கல்' என்பது சூக்கும வடிவினவாக உள்ளவற்றைத் தூல வடிவினவாகச் செய்தல்; இல்லா தவற்றை உண் டாக்குதல் அல்ல. இஃது 'உள்ளது போகாது; இல்லது வாராது' என்னும் சத்காரிய வாதம் [17] சூனிய வாதத்திற்கு மறுதலை. இத்தொழில் களைச் சிருர் மணல் வீடு கட்டி அழிக்குமாப் போலே கேவல விளையாட்டாகவே நிறை வேற்றுவான் இறைவன். இதனையே பிறிதோர் இடத்தில் கம்ப நாடன்,

உலகம் யாவையும்
படைத்து அளித்து
உண்டு உமிழொருவன் [18]

என்றும், மற்ருேர் இடத்தில்,

காட்டுவாய் உலகம் காட்டிக்
காத்தவை கடையிற் செந்தீ
ஊட்டுவாய் உண்பாய் நீயே. [19]

என்றும் வற்புறுத்துவன். இத்தகைய கூற்று களுக்கு,

தானே உலகெல்லாம்
தானே படைத்திடந்து
தானே உண்டுமிழ்ந்து
தானே ஆள்வானே. [20]

மண்கொண்டு மண்உண்டு
மண்உமிழ்ந்த மாயன் என்று
எண்கொண்டு என்நெஞ்சே
இரு [21]

என்பன போன்ற ஆழ்வார்கள் பாசுரங்களே அடிநிலமாகும்.

நாராயணனே உலகத் தோற்றத்திற்கு முதற்காரணன் என்ற வைணவ சமயக் கருத்தை ஒப்புக்கொண்டவன் கம்ப நாடன். உபநிடதங்கள் கூறும் 'பரம்பொருள்' திரு மாலையே குறிக்கும் என்பதை ஏற்றுக்கொண்ட வன், இதனைப் பல இடங்களில் கதை மாந்தர் களின் கூற்ருகவும், தன் கூற்ருகவும் பெற வைப் பான். சீதை தூயவள் என்று அங்கியங் கடவுள் மெய்ப்பித்த பிறகு தேவர்களின் வேண்டுகோட்

13. ஆரணி. சரபங்கர் பிறப்பு நீங்கு. — 30
14. திருவாய் — 1. 1 : 10
15. ஆரணி. சரபங்கர் பிறப்பு நீங்கு. — 27
16. கம்பரா. தற்சிறப்புப்பாயிரம் — 1
17. முன்பில்லாதது இடையே தோன்ருது என்றும், காரியம் அழிந்த காலத்தும் காரிய வடிவம் காரணத்தில் அழியாது சூக்குமமாய் நிலைத்திருக்கும் என்றும் வாதித்து நிலை நாட்டுவது.
18. பால காண். அகலிகை. —7
19. யுத்தகாண். வருணனை வழிவேண்டு. —69
20. திருவாய். —10 : 5 : 3
21. இரண். திருவந். —36

கிணங்க நான்முகன் இராமனது உண்மைச் சொருபத்தை விளக்குகின்றுன்.

'.....மறைகளின் தலைகள்
மன்பெ ரும்பர மார்த்தமென்(று)
உரைக்கின்ற மாற்றம்
அன்ப நின்னையல் லால்மற்றிங்(கு)
யாரையும் அறையா [22]
[மறைகளின் தலைகள்—உபநிடதங்கள்]

என்ற பாடற்பகுதியில் 'பரம்பொருள்' திருமாலையே குறிக்குமேயன்றித் தன்னையோ சிவனையோ அல்லது இந்திரனையோ குறிக்கவில்லை என்று உணர்த்துவதை அறியலாம். அடுத்து சிவபெருமான்,

முன்னை ஆதியாம் மூர்த்திநீ
மூவகை உலகின்
அன்னை சீதையாம் மாதுநின்
மார்பின்வந் தமைந்தாள். [23]

என்று திருமாலே முதற்கடவுள் என்றும், சீதாப்பிராட்டியே உலக அன்னை என்றும் உறுதி செய்வன். சேதுவை அமைக்க வருணனை வழிவேண்டியபொழுது, வருணன் வரத் தாமதித்ததனுல், இராமன் சினங்கொள்ளுகின்றுன். இதனைக் கவிஞன்,

உற்றொரு தனியே தானே
தன்கணே உலகம் எல்லாம்
பெற்றவன் முனியப் புக்கான் [24]

என்று குறிப்பிடும் இடத்தில் 'இராமனே பரம்பொருள்' என்று தன் கூற்றுகக் கூறுவதைக் காணலாம். இங்ஙனம் கூறுவதற்கு,

கற்பார் இராமனை அல்லால்
மற்றும் கற்பரோ [25]

என்ற நம்மாழ்வாரின் வாக்கும்,

தாமரைமேல் அயனவனைப்
படைத்தவே! தயரதன்தன்
மாமதலாய்! மைதிலிதன்
மணவாளா! [26]

என்ற குலசேகரப்பெருமாளின் வாக்கும், இவை போன்ற பிற ஆழ்வார்களின் வாக்குகளும் அடிப்படையாக அமைந்தன என்று கருதலாம்.

நாராயணனே இராமனுக அவதரித்துள்ளான் என்பதைக் கவந்தன் வாய்மொழியாக,

நிற்கு நெடுநீத்த
நீரின் முளைத்தெழுந்த
மொக்குளே போல
முளைத்தெழுந்த அண்டங்கள்
ஒக்க உயர்ந்துளுளே
தோன்றி ஒளிக்கின்ற
பக்கம் அறிதற்கு
எளிதோ பரம்பரனே. [27]

[நீர்—ஆவண நீர்; மொக்குள்—நீர்க் குமிழிகள்; பக்கம்-தன்மை; பரம் பரன்-மிகச்சிறந்தவன்]

என்று கூறுவன். மெய்யறிவு தோன்றப்பெற்ற விராதன் புகழ்மொழியாக,

ஓயாத மலரயனே
முதலாக உளராகி
மாயாத வானவர்க்கும்
மற்றெழிந்த மன்னுயிர்க்கும்
நீயாகின் முதல்தாதை
நெறிமுறையால் [28]

என்று பின்னும் வற்புறுத்துவன். இக்கருத்துக்கள்,

'தான்ஓர் உருவே தனிவித்தாய்
தன்னின் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும்
மற்றும் மற்றும் முற்றுமாய் [29]

என்ற ஆழ்வார் பாசுரக் கருத்தினை அடிப்படையாகக்கொண்டு வந்திருப்பது கண்டு மகிழத்தக்கது.

இறைவன் பிறப்பில்லாதவன்; ஆனல் பல பிறப்புகளை யுடையவன்.

---

22. யுத்த. மீட்சி —101
23. யுத்த. மீட்சி —103
24. யுத்த. வருணனை வழி வேண்டு.—63
25. திருவாய் —7·5 : 1
26. பெருமாள் திருமொழி —8 : 4
27. ஆரணி. கவந்தன் வதை. — 48
28. ஷை. விராதன்வதை — 53
29. திருவாய் —1·5 ; 4

பிறப்பில் பல்பிறவிப்
பெருமான் [30]

என்பது ஆழ்வார் வாக்கு. பிறப்பில்லாதவன் என்றது ஏனையோரைப் போல் வினைகாரண மாகப் பிறக்கும் தன்மையில்லாதவன் என்ற வாறு. பல பிறவிகளையுடையவன் என்றது அடியார்கள் பொருட்டுப் பல பிறப்புகளை (அவ தாரங்களை) மேற்கொள்பவன் என்றபடி. கம்ப நாடன் இதனை நான்முகன் வாக்காக,

தோற்றம் என்பதொன்று
உனக்கில்லை. [31]

என்று கூறுவன். இராமனது பிறப்பினைக் கூறும் பகுதியில் இதனை மிக விளக்கமாகக் காணலாம். பிறிதோர் இடத்தில் இராமனைக் குறிப்பிடு மிடத்துக் கம்பன்,

மெய்யே பிறந்தேயும்
பிறந்தி லாதான், [32]

என்று இக்கருத்தினை மேலும் வற்புறுத்துவன்.

யுகமுடிவில் பிரளயம் வரும் என்பதும், அப்பொழுது திருமால் பாலனுகத் தோன்றி எல்லா உலகங்களையும் விழுங்கிக் காப்பான் என்பதும் வைணவக் கொள்கை. இக்கொள்கை ஆழ்வார் பாசுரங்களில் பல்வேறு விதமாகப் பேசப்பெறுகின்றது.

அண்டமும்இவ் அலைகடலும்
அவனிகளும் குலவரையும்
உண்டபிரான் [33]

என்றும்,

ஞாலம் எல்லாம் அமுதுசெய்து
நான்மறையும் தொடராத
பாலகன்ஆய் ஆல்இலையில்
பள்ளிகொள்ளும் பரமன் [34]

என்றும் கூறுவர் திருமங்கை மன்னன்.

பாலகனுய் ஆல்இலைமேல்
பைய உலகெல்லாம்
மேல்ஒருநாள் உண்டவனே! [35]

என்று பேசுவர் பேயாழ்வார்.

பாலகனுய் ஏழ்உலகு
உண்டு பரிவு இன்றி
ஆல்இலை அன்னவசம்
செய்யும் அண்ணலார். [36]

என்று இயம்புவர் நம்மாழ்வார். இவற்றை யெல்லாம் நினைவிற்கொண்டு மூலபலத்தை யெல்லாம் அழித்துத் தனித்து நின்றுள்ள இராமன் நிலையை,

அண்டமாக் களமும் வீந்த
அரக்கரே உயிரும் ஆகக்
கொண்டதோர் உருவம் தன்னுல்
இறுதிநாள் வந்து கூட
மண்டுநாள் மறித்துக் காட்ட
மன்னுயிர் அனைத்தும் வாரி
உண்டவன் தானே ஆன
தன்னெரு மூர்த்தி ஒத்தான். [37]

[மாகளம் - பெரிய போர்க்களம்; இறுதி நாள் - யுக முடிவு நாள்].

நுன்று காட்டுவன் கம்ப நாடன். அரக்கரை யெல்லாம் மடியச்செய்து, தான் அங்குத் தனித்து நின்ற இராமன், யுகமுடிவில் எல்லா உயிர்களையும் வாயுட்கொண்டு நிற்கும் திரு மாலையொத்து நின்முன் என்ற கருத்தினை இப் பாடல் விளக்கி நிற்கின்றது.

மேலும், திருமால் அன்னமாய் இருந்து அருமறைகள் உரைத்ததை ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் குறிப்பிடுவர். திருமங்கையாழ் வார்,

முன்உல கங்கள்எழும் இருள்மண்டி உண்ண
முதலோடு வீடும் அறியாது

30. திருவாய். —2·9 : 5
31. யுத்த. மீட்சி. —107
32. யுத்த. நாகபாசப் — 222
33. பெரி. திரு. 4·1 : 5
34. பெரி. திரு. 4·1 : 6
35. மூன். திரு. — 33
36. திருவாய் — 4·2 : 1
37. மூலபலவதை — 232

என்இது வந்தது?என்ன இமையோர் திசைப்ப
எழில்வேதம் இன்றி மறைய
மன்னும்வா னவர்க்கும் முனிவர்க்கும் நல்கி
இருள்தீர்ந்து இவ்வையம் மகிழ
அன்னம்அது ஆய்இருந்து அங்குஅற
நூல்உரைத்த
அதுநம்மை ஆளும் அரசே. [38]

[மண்டி உண்ண - வியாபிக்கும்படி; விடு - முடிவு; திசைப்ப - திகைத்து நிற்க; உரைத்த - அருளிச்செய்த; அது-அந்தப் பரஞ்சோதி; அரசு ஆளும் - அடிமை கொள்ளும்].

என்று ஹம்சாவதார வரலாற்றை விரித்துப் பேசுவர். இந்த வரலாற்றைக் கம்ப நாடன் நினைவிற்கொண்டு விராதன் வாய்மொழியாக,

அன்னமாய் அருமறைகள்
அறைந்தாய் நீ அவையுன்னை
முன்னம்ஆர் ஓதுவித்தார்
எல்லாரும் முடிந்தாரோ? [39]

என்ற பாடலில் பேசுவன். இதில் நாராயணனே ஊழிக்குப் பிறகும் நிலைபெற்று நிற்பவன் என்ற கருத்து வலியுறுத்தப் பெற்றுள்ளமையைக் காணலாம்.

2. சில நிகழ்ச்சிகள் :

பல்வேறு தத்துவக் கருத்துகளைக் கம்ப நாடன் ஆழ்வார் பாசுரங்களிலிருந்து எவ்வாறு எடுத்தாண்டுள்ளான் என்பதை மேலே கண்டோம். இனி, ஆழ்வார் பாசுரங்களிலிருந்து சில நிகழ்ச்சிகளை எடுத்து எவ்வாறு கையாண்டுள்ளான் என்பதை எடுத்துக் காட்டுவோம்.

'ஏழை, ஏதலன் கீழ்மகன்' என்னாது
இரங்கி மற்றுஅவர்க்கு இன்னருள் சுரந்து
'மாழை மான்மட நோக்கி உன்தோழி
உம்பி எம்பி, என்று ஒழிந்திலை? உகந்து
'தோழன் நீஎனக்கு, இங்குஒழி' என்ற
சொற்கள் வந்து அடியேன் மனத்து
இருந்திட
ஆழிவண்ண! நின் அடியிணை அடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே! [40]

[ஏதலன் - யாதொரு சம்பந்தமும் இல்லாதவன்; மாழை - பேதைமைக் குணம்; எம்பி - என் தம்பி; உம்பி-உன் தம்பி; ஒழிந்திலை - விட்டிடாதவனாய்.]

இது கானவர் தலைவனான குகப்பெருமானுக்கு வானவர் தலைவனான இராமபிரான் திருவருள் புரிந்த செயலில் ஈடுபட்டு, அத்திருவருள் தன் பாலும் சுரக்க வேண்டும் என்று வேண்டுகின்றார் பரகாலன். குலத்திலும் செயலிலும் குணத்திலும் குறையொன்றையும் பாராமல், அவன் கொண்ட அன்பே காரணமாக அவனிடம் இரங்கியருளின கருணையுள்ளத்தைத் தம் நெஞ்சில் நிறுத்திப் பேசுகின்றார் ஆழ்வார். அசோக வனத்தில் அரக்கியர் கூட்டத்திடையே சீதை வருந்தியிருக்கும் நிலையில் பல எண்ண அலைகள் அவள் மனத்தில் எழுகின்றன. அவற்றுள் ஒன்று குகனோடு தோழமை கொண்டது. கம்பன் இதனை,

ஆழ நீர்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு 'எம்பிநின் தம்பி; நீ
தோழன்; மங்கை கொழுந்தி'
எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள் [41]

[அம்பி - தோணி; கடாவிய - செலுத்திய; உன்னி - நினைந்து; வாழி என்பது இங்கு அசை.]

என்று போற்றுவன். ஆழ்வார் பாசுரங்களில் கவிஞன் ஆழங்கால் பட்டதனால் இவ்வாறு பாடத் தோன்றுகின்றது. இச்செய்தி வான்மிகத்தில் இல்லை என்பதும் ஈண்டு கருதத்தக்கது.

மந்தரை என்று பெயர்பெற்ற கூனி என்ற பாத்திரமும் வான்மிகத்தில் காணப்பெறவில்லை. இராமன் கூனியின் முதுகில் உண்டை தெறித்த நிகழ்ச்சியில் ஆழ்வார்கள் ஈடுபட்டுப் பேசுகின்றனர்.

கொண்டை கொண்ட கோதைமீது
தேன்உலாவு கூனிகூன்
உண்டைகொண்டு அரங்கஓட்டி
உள்மகிழ்ந்த நாதன் [42]

---

38. பெரி. திரு. 11·4 : 8
39. ஆரணி. விராதன்வதை. — 60
40. பெரி. திரு. —5·8 : 1
41. சுந்தர. காட்சி. — 23
42. திருச்சந்த விருத்தம் — 49

[கொண்டை - மயிர்முடி; கோதை - மாலை; தேன் - வண்டுகள்; கூன் - முதுகின் வளைவு; அரங்க ஓட்டி - அமுக்கி]

என்று சிறுவன் இராமன் கூனியிடம் செய்த சிறுகுறும்பில் ஆழங்கால்படுவர் திருமழிசை யாழ்வார். மேலும் இவர்,

கூன்அகம் புறத்தெறித்த கொற்ற
வில்லி அல்லையே [43]

என்று கூறுவதையும் காணலாம்.

கூனே சிதைய உண்டைவில்
சினத்தில் தெறித்தாய். [44]

என்று நம்மாழ்வாரும் இச்சிறுகுறும்பில் ஈடுபடுவர். திருமங்கையாழ்வாரும்,

கூன்உலாவிய மடந்தைதன் கொடுஞ்
சொலின்
திறத்து, இளங் கொடியோடும்
கான்உலாவிய கருமுகில் திருநிறத்தவன் [45]

[கூன் உலாவிய - கூன் ஏறின; இளங்கொடி- சீதாப்பிராட்டி; கான் - காடு; முகில் - மேகம்.]

என்று இந்த நிகழ்ச்சியில் ஈடுபட்டுரைப்பர். திருமுடி கவித்தற்குக் கட்டின காப்பே கானுறை வாழ்க்கைக்குக் கட்டின காப்பாம்படிப் புறப் பட்டுக் கானகமே சென்றவிடத்திலும் மகிழ்ச் சியே விஞ்சித் திருமேனி புகர் பெற்றதனால் 'கருமுகில் திருநிறத்தவன்' என்று சிறப்பித் தமை அறிதற்பாலது. பெரியாழ்வாரும்,

கூன்தொழுத்தை சிதகுரைப்பக்
கொடியவள்வாய்க் கடியசொற்கேட்டு
ஈன்று எடுத்த தாயரையும்
இராச்சியமும் ஆங்கொழிய
கான்தொடுத்த நெறிபோகிக்
கண்டகரைக் களைந்தான் [46]

[தொழுத்தை - பணியாள், அடிமைப் பெண்; சிதகு - விபரீதம்; தொடுத்த- அடர்ந்திராநின்ற; கண்டகர் - முள்ளைப் போன்ற அரக்கர்கள்.]

என்று கூறுவர். இந்தச் சிறுநிகழ்ச்சியில் கம்ப நாடனும் உள்ளத்தைப் பறிகொடுத்து,

பண்டைநாள் இராகவன்
பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத்தன்
உள்ளத்து உள்ளுவாள் [47]

[பாணி - கையிலுள்ள; உமிழ் - வெளிப் படுத்திய; உண்டை - திரனை; உண்டதனை- மேல்பட்டதனை; உள்ளுவாள்-நினைப்பாள்]

என்று பேசுவன். விளையாட்டே வினையான செய்தி இதிகாசச் சிறப்புப் பெற்றதைக் கண்டு இறும்பூது எய்துகின்றோம்.

காகாசுரன் வரலாறும் ஆழ்வார்கள் பாடலில் சிறப்பிடம் பெற்றுள்ளது. அநுமன் சீதைக்குக் கூறிய அடையாளங்களுள் ஒன்றாக இதனைக் குறிப்பிடுவர் பெரியாழ்வார்:

சித்திரகூ டத்திருப்பச்
சிறுகாக்கை முலைதீண்ட
அத்திரமே கொண்டெறிய
அனைத்துலகும் திரிந்தோடி
'வித்தகனே! இராமாவோ!
நின்அபயம்' என்றுஅழைப்ப
அத்திரமே அதன்கண்ணை
அறுத்ததும்ஓர் அடையாளம் [48]

[சிறுகாக்கை - காக்கை வடிவமாக வந்த சயந்தன்; அத்திரம் - நான் முகன் கணை.]

என்ற பாசுரத்தில் இந்நிகழ்ச்சி நுவலப் பெற்றிருத்தலைக் கண்டு மகிழலாம். இந்த நிகழ்ச்சியைக் கம்பன் பல இடங்களில் சுட்டி மகிழ்வான்.

அசோகவனத்தில் சீதாப்பிராட்டி இந் நிகழ்ச்சியை நினைந்து போற்றுவதாகக் காட்டு கின்றான் கம்பன்.

43. திருச்சந்த வருத்தம் — 30
44. திருவாய்.
45. பெரி. திரு. —3·1 : 5
46. பெரியாழ். திரு. — 4·8 : 4
47. அயோத்தி மந்தரை சூழ்ச்சி — 41
48. பெரியாழ். திரு. 3·10 : 6

ஏக வாளிஅவ் இந்திரன் செம்மல்மேல்
போக ஏவி யதுகண் பொடித்தநாள்
காகம் முற்றும்ஓர் கண்ணில ஆக்கிய
வேக வென்றியை தன்தலேமேல்
கொள்வாள் [49]

[ஏகம் - ஒப்பற்ற; வாளி - அம்பு; இந்திரன் செம்மல் - சயந்தன்; பொடித்த - போக் கடித்த; காகம் முற்றும் - எல்லாக் காகங் களும்; கண்இல - கண்இல்லாதனவாக; தலைமேல் கொள்வாள் - கொண்டாடு வாள்.]

என்று தன் பாடலில் குறிப்பிடுவான். இதுவும் அசோகவனத்திலிருந்தபோது சீதை, முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எண்ணுவதைக் காட்டுவது. இந்த நிகழ்ச்சியை சற்று விரி வாகவே ஐந்து பாடல்களில் சீதை அநுமனுக்குக் கூறும் அடையாளங்களுள் ஒன்ருகக் கூறுகின் ருள். இந்த நிகழ்ச்சி இராமனும் சீதையும் தனிமையான ஓரிடத்தில் இருந்தபோது நடை பெற்றதால், இலக்குவனும் அறியான்.

இங்ஙனம் பல்வேறு எடுத்துக்காட்டு களால் கம்பராமாயணத்தில் ஆழ்வார் பாசு ரங்களின் தாக்கம் மிக்குள்ளது என்பதை விளக்கலாம். இராமாயணத்தின் பல பாடல்கள் ஆழ்வார்களின் பாசுரங்களால் புதுமெரு கேறிப் பொலிவதைக் காவியத்தை ஆழ்ந்துகற் பார் நன்கு அறிவர். ஆழ்வார்களின் பக்திப் பெருக்கு, அவர்கள் புலப்படுத்தும் தத்துவ — சமயக் கருத்துகள், பல்வேறு சிறு நிகழ்ச்சிகள் கம்பன் காவியத்தில் ஊடுருவிக் கிடப்பதும் அவர்கட்குப் புலனுகும். இதனுல் 'கம்பநாட் டாழ்வார்' என்று மக்கள் அவனுக்குத் திரு நாமம் சூட்டியதும் மிகப்பொருத்தம் என்பதும் தெளிவாகும்.

---

49. சுந்தர. காட்சி. — 28

சுந்தர காண்டத்தின் அருளியல்

கோவை அ. கிருஷ்ணசுவாமி

பாரத நாட்டுச் சமய நூல்களில் இரண்டு சிறந்ததெனப் போற்றப்படுகின்றன. ஒன்று, கீதை. மற்றொன்று, திருவாசகம். முன்னதை, கிருஷ்ணபகவான் சொல்ல மனிதன் எழுதியது. இரண்டாவது, எட்டாம் திருமுறை என்று சொல்லப்படும் திருவாசகத்தை மணிவாசகப் பெருமான் சொல்ல அழகிய திருச்சிற்றம்பல முடையான் எழுதி, கைநாட்டுச் செய்தது. இந்த இரண்டு நூல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, தென் இந்தியாவில் அன்னிய ஆட்சி அடிகோலியபோது மாவட்டந் தோறும் நியமிக்கப்பட்ட ஐ. சி. எஸ். அதிகாரிகளைப் படிக்கும்படி செய்தது பிரிட்டிஷ் அரசாங்கம். காரணம் காட்டும்போது, அப்போது தான் மக்களின் சமய உணர்ச்சிகளைத் தெரிந்து கொண்டு, அவற்றிற்கேற்ப அரசியல் அமைப்பையும் ஏற்படுத்தலாம் என்று கருதினர். இரண்டாவதாகிய திருவாசகம் பலர் போற்றச் செய்யப்பட்ட நூல் அன்று. பலர் வாழ எழுந்த நூல். மேலும், சொல்லும்போது, ஊழிக்காலத்தில் எல்லாம் மறைந்த சமயத்தில் தன்னந்தனியனாக நிற்கும் தனிமையைத் திருவாசகத்தைப் படித்து படித்துச் சலிப்பைப் போக்கிக்கொள்ளச் சிவபெருமான் தானே முன்வந்து எழுதி வைத்துக் கொண்டான் என்று சொல்லுவார்கள் ஞானிகள் — பெரியோர்கள். அத்தகைய பெருமைமிக்க திருவாசகம் தேன்போன்று தெவிட்டாத சுவையுடையது. பாக்கள் எல்லாம் பெரும்பாலாக மோகன ராகத்திலே பாடப்பெறுபவையாகும். இதில் உள்ள 656 பாடல்களுள் எது சிறப்புடையது, எது மனத்தில் நிலைத்து நிற்பது என்றுகேட்டால், உடனுகைப் பதில் சொல்வது கடினம். இருப்பினும், திருவாசகத்தின் குறிக்கோள் என்னவென்று ஒரு கேள்வியை எழுப்பினுல் இதற்கு ஒரு விதத்தில் பதில் சொல்ல முடியும். எல்லோருக்கும் தெரியும் இறைவனை அடைவதுதான் என்று. இந்தப் பதிலையும் பொதுவாகக் கொள்ளலாமே யொழியக்கேள்விக்குச் சரியான உத்தாரம்என்று சொல்ல முடியாது. கனிவான மொழியில் வாதவூரர் இறைவனுக்கு எத்தனையோ விண்ணப்பங்களை விடுத்தார். அவற்றுள் எது என்பது தான். குறிப்பான தெளிவான விண்ணப்பம் ஒன்று போடுகிருர்.

'உமையை இடப்பாகத்தில் கொண்டவனே, சிவபெருமானை வலப்பாகத்தில் கொண்டவளே, நான் நடுவில் இருக்க நீங்கள் இருவரும் எனக்கு இருபக்கத்திலும் இருக்க வேண்டும். இந்த அற்புதக் காட்சியை அடியார்கள் எல்லாம் சுற்றியிருந்து பார்க்க வேண்டும். ஆகவே, இந்த விதமாக அருள் பாலிக்க வேண்டும்'

இந்தக் கருத்தோடு பாடுகிருர்:

'உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவில் இருவீரும்
இருப்பதனுல் அடியேனுன்
அடியார் நடுவில் இருக்கும்அரு
ளைப்புரியாய் பொன்னம்பலத்தென்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே'

கேட்ட வரம் கிடைத்துவிட்டது. உற்சவ மூர்த்தி நடராஜப் பெருமானின் அருகில் எப்போதும் இருக்கும் பாக்யம் கிடைத்துவிட்டது. திருவாசகத்தின் இப்பாடலைச் சைவப் பெருமக்கள் இதய மந்திரம் என்று போற்றிப் பாடுகிருர்கள்.

இது போலவே கம்பனது இராமாயணத்திலே எது சிறந்தது, எது வாழ்க்கைக்கு மிக மிகப் பயனுடையது என்று ஒரு கேள்வியை எழுப்பினுல் சுந்தர காண்டம் என்று ஆணித்தரமாகச் சொல்லலாம். அதிலும் சிறந்த பகுதி எது, மனத்திற்கு இதம் என்று சொல்லப்படும் பாடல்கள் எவை என்று சிந்தனை செய்து பார்க்கலாமல்லவா ?

கம்பனது காவியம் பெரிய சாம்ராஜ்யத்தின் அரண்மனை போன்றதொரு கலைக்கோயில். இந்த மகோன்னத மாளிகைக்கு முன்வாயிற் சோலையாக அமைந்தது பால காண்டம். கதைப்

போக்கிற்கு இரண்டாம் வாயிலாக அமைந்தது அயோத்யா காண்டம். முக்கியத் திருப்புமுகமாயாக அமைந்துள்ள ஆரண்ய காண்டத்தை மகா மண்டபம் என்று சொல்லலாம். கிஷ்கிந்தா காண்டத்தை மகா மண்டபத்தை அடுத்த அந்தராளம் என்று கூறலாம். அடுத்துக் காண்பது கர்ப்பக் கிரகம் என்று போற்றிச் சொல்லும் சுந்தர காண்டம். மற்ற காண்டங்களின் கவிதைப் போக்கைப் பார்த்தால் மனத்தில் இன்பம், துன்பம், கோபம் முதலிய நவரசங்களும் தாழ்ந்தும் உயர்ந்தும் காணப்படும். ஆனல், சுந்தர காண்டத்தைப் படிக்கும் போதோ, இதயப்பூர்வமான மனேபாவமும், சாந்தியின் புனிதத் தன்மையும், பக்தியின் கனிவும் படிப்போர் மனத்தில் எழக் காணலாம். எல்லாம் சுந்தரமாக அமைந்ததால் சுந்தர காண்டம் என்று பெயர் வைத்தார்கள். சுந்தர காண்டம் என்று பெயர் வைத்தவர்கள் யாராயிருந்தாலும் சரி—முதல் நூல் ஆசிரியன் வால்மீகியாயிருந்தாலும் சரி, வழி நூல் ஆசிரியனுகிய கம்பனுக இருந்தாலும் சரி, அவர்கள் போற்றிப் புகழப்படுபவர்களே. காண்டங்கள் அனைத்தினும், கம்பன் இதில்தான் தன் கவிதா சக்தியையெல்லாம் திரட்டி, தெளிந்த சொல் அமுதம்என்ற வர்ணத்தால் பேரழகுடன் படைத்துள்ளான் என்றுல் அது மிகையாகாது. பின்னுல் வருகின்ற யுத்த காண்டத்தில் கதையின் வேகமும், காம்பீர்யமும் அதிகம்தான். இருப்பினும், சிறையிருந்தாள் ஏற்றம் கூறுமிடத்து உலகத்தில் அறம் நிலைநிற்கச் செய்தவள் சீதா பிராட்டியே என்று அறுதியிட்டுக் கூறுவதோடு மட்டுமல்லாமல், தாச பக்தியில் சிறந்தவன் அடியானுகிய அநுமனே என்று கம்பன் சுந்தர காண்டத்தில் தெளிவாகச் சொல்கிருன்.

பால காண்டத்தின் இறுதியில் சீதையை அறிமுகம் செய்து கருத்தொருமித்த காதலனுடன் ஒன்றிய போகமும், யோகமும், ஒத்து இருந்தாள் என்று காட்டுகின்ருன் கவி. இராமனது பட்டாபிஷேக வைபவம் கூனியின் சூழ்ச்சியால் தடைப்பட்டு இராமபிரான் வனம் போக நேர்ந்ததுபற்றி இரு தாயரும், நகர மாந்தர்களும் எல்லையிலாத் துயர் உற்றபோதும், பிராட்டி அதைப் பெரிதுபடுத்தாமல் 'நின் பிரிவினும் சுடுமோ, பெருங்காடு' என்று கூறி இராமனுடன் காடேகிருள். ஆரணிய காண்டத்தின் ஆரம்பத்தில், விராதன் தன்னைக் கவர்ந்தபோது சிறிது துயர் உற்ருள் எனினும், அவனது மரணத்தில் தேவி தெளிவு பெறுகிருள். பன்னசாலையோடு கபட சந்நியாசி இராவணன் எடுத்தேகும்போதுதான் முதல் முறையாகத் துயர் என்னவென்பதை யறிந்தாள். இறைவா! இளையோய்! என அழைத்து மனத்தில் நடுக்கமுற்று.

சரண் எனக்கு யார்கொல்' என அரற்ற
'அரண் உனக்கு ஆவேன்'

என்ற பறவை வேந்தனை இராவணன் தெய்வ வாளால் வெட்டி விழ்த்தினபொழுது நிலைகுலைந்தாள். பின்னர், இலங்கையில், அசோக வனத்தில் அரக்கியர் நடுவில் சிறை வைக்கப்பட்டாள். கற்புடைப் பெண்டிர்க்கு எது வரக்கூடாதோ அது வந்து விட்டது. வஞ்சகன் சூழ்ச்சியால் தலைவனைப்பிரிந்து, எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி

விழுகிருள், விம்மூகிருள், எழுகிருள், ஏங்குகிருள் இரங்குகிருள், இராமனைத் தொழுகிருள், சோர்வடைகிருள் துளங்குகிருள், உயிரே போகும்படி அரற்றுகிருள் அழுகிருள். இதுதான் இலங்கையில் பிராட்டியின் நிலை. சுந்தர காண்டம் கடல் தாவு படலத்திலிருந்து ஆரம்பமாகிறது. இதில் முழுவதும் சீதையின் சோகமும், கற்பின் தூய்மையும், அனுமனது செயல்களுமே படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. ஆஞ்சநேயனைப் பார்த்த முதல் நோக்கிலேயே அவனது அறிவாற்றலை யுணர்ந்த இராமபிரான், 'யார் கொலோ இச் சொல்லின் செல்வன்' என்று வினவுகின்ருன். கிஷ்கிந்தா காண்டத்தில் சில நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றனவேயொழியச் சொல்லின் செல்வன் என்ற பட்டத்திற்கு தீர்க்க தரிசனமான விளக்கம் கொடுக்கப்படவில்லை. ஆனல், சுந்தர காண்டத்தில்தான் பிராட்டியுடன் பேசும்போதும், இராவண சம்வாதத்திலும் சொல்லின் செல்வனின் மேதாவிலாசம் வெள்ளிடை மலைபோல் பிரகாசிக்கின்றது. ஆஞ்சநேயனின் அற்புதச் செயல்களையெல்லாம் கண்டுகளித்த வைஷ்ணவப் பெருமக்கள் அவனை வாழ்த்தி வழிபடுகிருர்கள். பஞ்சபூதங்களின் தன்மையை அவனுடன் இணைத்துப் பாடுகிருர்கள்.

'அஞ்சிலே ஒன்று பெற்ருன், அஞ்சிலே
ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறு ஆக, ஆர் உயிர் காக்க ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக்
கண்டயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான், அவன் எம்மை
அளித்துக் காப்பான்'

சில முக்கிய விஷ்ணு ஆலயங்களிலே இந்தப் பாட்டு தீபாராதனையின்போது அர்ச்சகர்களால் பாடப்பட்டுவருவது இன்றும்கூடக் காணலாம். ஆகவே, வைஷ்ணவ சம்பிரதாயத்தில் அனுமனுக்கு ஓர் உயர்ந்த இடம் அளிக்கப்பட்டு வருகிறது. இராம பக்தியைக்காட்டிலும் ஆஞ்சநேய பக்தியே சிறந்ததென எண்ணுகிறார்கள். இராமபிரான் கருணைக்கடலாகிய வள்ளலாக இருக்கலாம். இருந்தாலும் அவனது வள்ளல் தன்மையை உலகறியச் செய்தவன் அநுமனே. ஆண்டானைவிட அடியானின் பெருமை பெரிது என்று சொல்லும் வாக்கிற்கிணங்க உயர்ந்து நின்று அருள் பாலிப்பவன்.

இராம காரியத்தை முடிக்க வானில் ராக்கெட் வேகத்தில் போகின்றான் அநுமன். மைந்நாகம் உபசரணை செய்தபோது 'காரியம் முடியும் வரை அருந்தேன்' என்று சொன்னாலும், அதன் அன்பினை எண்ணி வியந்து, 'இருந்தேன் நுகர்ந்தேன் சென்றேன்' என்று சொன்ன போதே அவன் ஆசையும் ஆர்வமும் வேகமும் தெரிகின்றன. ஊர்தேடு படலத்திலும், காட்சிப் படலத்திலும் காண்டனவற்றையெல்லாம் மனத்தில் பதித்துக்கொண்டே விரைவினில் அசோக வனத்தையடைகின்றான். அரக்கியர் குழுவில் ஜோதியான உருவம் தென்படுகிறது. இராமன் சொன்ன லக்ஷணங்கள் யாவும் அப்படியே உள்ளன.

'அரவின் நீங்கிய தேவ னேஅவன்
இவள்அவன் கமலச் செல்வியே'

என்று ஊர்ஜிதம் செய்துகொண்டு ஆடிப்பாடி மகிழ்ந்து பிராட்டியின் தூய்மையைக் கண்டு தனக்குத் தானே வியந்து பேசுகின்றான்.

'தருமமே காத்ததோ? சனகன் நல்வினைக்
கருமமே காத்ததோ? கற்பின் காவலோ?
அருமையே! அருமையே! யார்இது ஆற்றுவார்?
ஒருமையே,எம்மனோர்க்கு உரைக்கற் பாலதோ''

எடுத்து வளர்ப்பதற்கு ஒரு குழந்தை வேண்டுமென்று உலகத்தில் தோன்றிய குடிப்பிறப்புகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஆசைப்பட்டு நோன்பு நோற்றதாம். அதையும் அடைந்துவிட்டனவாம். எப்பேர்ப்பட்ட குழந்தை. மனித சமுதாயம் உயர்வதற்கான பெண்மை, நாயகனுக்காக எதையும் தியாகம் செய்கின்ற நாணம் என்ற தத்துவம் நோன்பு நோற்ற குழந்தையாம். அந்தக் குழந்தையான சீதாப் பிராட்டி அற்புதமான முறையில் தவம் செய்கிறாள். இந்த ஏற்றமிக்க தவத்தின் ஆற்றலை, அழகைக் காண அந்த இராமனது கமலக் கண்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை என்று பரிதாபப் படுகிறான். உல்லாசமாக இருந்த நிலையில்தான் இராமன் சீதையின் அழகைப் பார்த்திருக்கிறான். இந்த நோன்பில் விளங்கும் அற்புதத்தை அதிசயத்தைக் காணக் கொடுத்து வைக்கவில்லையே என்று சொல்லின் செல்வன் சொல்கின்றான்:

'பேணநோற் றதுமனைப் பிறவி; பெண்மை
போல்
நாணம் நோற்(று) உயர்ந்தது நங்கை
தோன்றலால்;
மாண நோற்(று) ஈண்டிவள் இருந்த
வாறெலாம்
காணநோற் றிலஅவன் கமலக் கண்களே!'

அடுத்து வருகிறான் இராவணன். நிந்தனைப் படலத்தில் அரக்கனைச் சீதாபிராட்டி சம்வாதத்தில் வீரலட்சுமியாக நின்று வென்றுவிடுகிறாள். முக்கோடி வாணாளை முயன்றுபெற்றவன், எக்கோடி எவராலும் வெலப்படாதவன் என்கின்ற இராவணேஸ்வரனை மிக அற்பமாக, கேவலமாகப் பேசுகிறாள். நயமொழியாலும் அவனுக்கு அறநெறி உணர்த்தத் தவறவில்லை. இராவணன் சென்றுவிடுகின்றான். தன் நிலையை எண்ணிப் பார்க்கின்றாள்.

''நிருதர் நீள்நகர் சிறையிருந் தேனை
அப்புனிதன் தீண்டுமோ?''

''கற்புடை மடந்தையர், கதையில்தான்
உளோர்
இல்பிரிந்து உய்ந்தவர் என்னின் யாவரே?''

பிறர்மனை எய்திய பெண்ணைப் பேணுதல்
திறன்அலது என்று இறைவன்
தீர்ந்தனோ?''

''.......... அருஞ் சிறையின் மீட்டநாள்
இல்புகத் தக்கலை' என்னில் யானுடைக்
கற்பினை எப்பரிசு இழைத்துக் காட்டுகேன்?''

இப்படியெல்லாம் நினைத்து உயிர் விடத் துணிகிறாள். இதுதான் தக்க தருணம் என 'அண்டர் நாயகனின் அருள் தூதன் யான்' என்று பிராட்டி

மூன் சொல்லி அநுமன் தன்னை அறிமுகம் செய்து தொழுகின்றான். முதலில் சிறிது ஐய முற்றாலும் பின் நம்பத்தகுந்தவனே என உறுதி செய்துகொண்டு 'ஐயன் மேனி எவ்வாறு' என்று பிராட்டி கேட்க, இராமபிரானின் பாதாதிகேச வர்ணனையை அற்புதமாகச் செய்து காட்டி,

''அண்ணல்தன் திருமுகம் கமலம் ஆம்எனின்
கண்ணினுக்கு உவமைவேறு யாது காட்டு
கேன்?''

என்று நிறைவு செய்து அடையாளப் பொருளைக் காட்டுகிறான். கணையாழியை வாங்குகிறாள், மோந்து பார்க்கிறாள். மார்போடு வைத்து அணைக்கிறாள். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொழிகிறது. அதை நீக்கிவிட்டுக் கணையாழி யையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருக்கிறாள். உடம்பில் மகிழ்ச்சி யின் பல மெய்ப்பாடுகள். இராம இலட்சும ணர்கள் தன்னைத் தேடிக்கண்டுபிடிக்க முடியாது. இச்சிறையிலிருந்து மீளமுடியாது என்கின்ற தீர் மானத்தில் இதயமே உடைந்து தற்கொலை செய்யப்போகும் தருணத்தில், இராமன் 'நானே வந்துவிட்டேன்' என்றாற்போல அவனது கணை யாழி தன்னிடம் வந்ததென்றால் இது சாமான்ய காரியமா—போகும் உயிரை மீட்டுக் கொண்டு வந்தது இந்த அழியாச் செல்வ மாகிய கணையாழியல்லவா? அந்த ஆனந் தத்தைக் கம்பன் கவியிலே பார்க்கலாம்.

'இருந்து பசியால் இடர்உழந் தவர்கள் எய்தும்
அருந்தும்அமுதாகியது அறத்தவரை அண்டும்
விருந்தும் எனலாகியது வீயும் உயிர்மீளும்.
மருந்தும் எனலாகியது வாழி மணிஆழி'

என்ற செய்யுளேநம்மிடம் பேசுகிறது. பேரானந் தத்தில் மூழ்கி அமைதியடைந்தவுடன் அநும னுக்கு நன்றி சொல்கின்றாள் பிராட்டி.

'மூவுலகிற்கும் முதல்வனான இராமபிரான் தூதனாகவும், தாயும் தந்தையும் கடவுளும் ஒன்றாக அமைந்த அப்பனாகவும் வந்து உனது கருணைக் கடலின் சக்தியால் எனக்கு இந்த உலக வாழ்க்கையிலேயே பேரானந் தத்தை அநுபவிக்கச் செய்துவிட்டாய். அதோடு மட்டுமல்லாமல் தீராப் பழிக்கு உள்ளாகிவிடுவேனோ என்று அஞ்சியிருந்த எனக்கு யாருக்கும் கிடைக்காத புகழையும் சேர்த்துக் கொடுத்துவிட்டாய். உனக்கு உற்ற கைம்மாறு செய்வது எளிதன்று.'

''மும்மையாம் உலகம் தந்த
முதல்வற்கு முதல்வன் தூதாய்ச்
செம்மையால் உயிர்தந் தாய்க்குச்
செயல்என்னால் எளிய துண்டோ
அம்மையாய், அத்த னாய,
அப்பனே! அருளின் வாழ்வே!
இம்மையே மறுமை தானும்
நல்கினை இசையோ டென்றாள்''

தனது இதயத்தைக் கொட்டிவிட்டாள் என்று தான் சொல்ல வேண்டும். பேரானந்தப் பெரு வெளியின் எல்லையில் நின்றுகொண்டு, உணர்ச்சி யின் வேகம் உந்த, நீண்ட நெடுங்காலம் திட காத்திரத்தோடு சிரஞ்சீவியாக இருக்க வேண் டும் என வாழ்த்துகிறாள்.

''பாழிய பணைத்தோள் வீர!
துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ள லே!யான்
மறுவிலா மனத்தேன் என்னில்
ஊழியோர் பகலா ஓதும்
ஆண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும்
இன்றென இருத்தி' என்றாள்''

எப்படி இந்தப் பெரிய கருங்கடலைக் கடந்தாய் என்று கேட்க, ஞானிகள் எப்படி இராமநாமம் துணைகொண்டு பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவார்களோ, அதுபோல் நானும் வாயு பகவான் கருணையால் கடந்தேன் என்று அநுமன் சொன்னான். தேவியால் நம்ப முடிய வில்லை. இத்துணை சிறு உருக்கொண்டவன் செய்கின்ற காரியம் அல்லவே என்று வியப்புறு கிறாள்.

அநுமன் வெறும் உடல் பலம் மட்டும் பெற்றவன் அல்ல, ஆத்ம பலமும் கொண்ட வன். யோகாந்தம், சித்தாந்தம், வேதாந்தம் முதலிய பல கலைகளைக் கற்றவன். வைராக் யத்தைக் கடைப்பிடித்து நைஷ்டிக பிரமசரிய விரதத்தை அநுஷ்டிப்பவன். இருவினையும் மும்மலமும் வென்றவன். ஐம்பொறிகளை அவித்தவன். அட்டமாசித்திகள் கைவரப் பெற்றவன். மனோ, வாக்கு, காயம் எட்டாத எல்லைக்கு எளிதில் போய் வருபவன். தூல

தேகத்தில் இருந்து சூக்கும தேகத்திற்குப் போய் அதற்கும்மேலாகக் காரணதேகத்திற்கும், மகா காரண தேகத்திற்கும் போக்குவரத்து வைத்துக்கொள்ளும் ஞான பண்டிதனுக இருந்தவன். ஜீவாத்துமாவும், பரமாத்துமாவும் ஒன்று சேர்ந்து வாழ வழி வகுத்துக்கொண்டவன். இருதயத்தில் உள்ள ஈசனை நினைக்கும்தொறும் காணும் பிரம்ம வித்தையை அடைந்தவன். இவனது மேதா விலாசத்தை முதலில் பார்த்தவுடனேயே தெரிந்துகொண்டு இவனே 'வேதக் கடல்' என்ற ஞான துரைத்தன முத்திரையை வைத்தவன் இராமன். தேவியின் கேள்விக்குச் சொல்லால் விளக்கம் சொல்லாமல், விஸ்வரூபம் எடுத்தான். வான் முகடு தட்டியபடியால் வளர்ந்து நின்ருன். மேலும் வியக்கின்ருள் பிராட்டி :

''அறிவும் ஈதே உரு ஈதே, ஆற்றல் ஈதே,
ஐம்புலத்தின்
செறிவும் ஈதே, செயல் ஈதே, தேற்றம் ஈதே,
தேற்றத்தின்
நெறியும் ஈதே, நினைவு ஈதே, நீதி ஈதே,
நினக்கு என்ருல்,
வெறியா அன்ருே, குணங்களான் விரிஞ்சன்
முதலாம் மேலானுர்?''

இந்த விஸ்வரூபத்தில் அகில உலகங்களின் சக்தியையும் வலிமையையும் பார்க்கின்ருள் அன்னை சிதா பிராட்டி.. ''70 வெள்ளம் வானரப் பண்ணையில் நானும் ஒருவன்'' என்று அடக்கமாகப் பேசுகிருன் அநுமன். பேராச்சரியம் அடைகிருள். காட்டிற்கு வந்த இராமனுக்குத் துணை இளவல், ஒருவனே என்றிருந்தேன். இராம லட்சுமணர்களுக்கு இந்த மகாவீரனைப் போல் பல பேர்கள் துணை என்ருல் அரக்கர் குலம் ஏன் பூண்டோடு அழியாது? ஆகவே, எனக்குப் புத்துயிர் வந்துவிட்டது, என்று சீதா தேவிக்கு ஒரே எக்களிப்பு. பேசுகின்ருள் ;

'என்னைத் துன்புறுத்திய இராவணன் முதலியோரைக் குலத்தோடு வேரறுத்துவிட்டேன். யாராலும் கண்டுபிடிக்க முடியாத சிறையினின்று மீண்டுவிட்டேன். என் நாயகன் திருவடிகளைத் தொழும் பேற்றினை அடைந்துவிட்டேன். புகழ் ஒன்றுதான் என்னையடையுமேயொழியக் கேவலமான பழி வந்து தீண்டாது. கணவனைக் காணமுடியுமோ என்றிருந்த ஆசை நிறைவேருமல் அது நிராசையாகிவிடுமோ என்றிருந்த நிலையில், திடீர் என எல்லாமே மாறி, தெவிட்டாத, சலிப்பில்லாத, பேரானந்தப் பெருவெளியில் சேர்த்த தன்மை அளவிற்கப்பால் பட்டது. இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்தாலும், இத்தகையதோர் மகிழ்ச்சி கிடைக்கவே கிடைக்காது. ஆகவே, இந்த க்ஷணமே உயிர் துறந்தாலும் பரிபூரண நிறைவேயல்லாமல், குற்றமோ குறையோ ஏதும் இல்லை என்று சொல்லுவேன்.' இனிப் பாடலைப் பார்ப்போம்.

'யாண்டேன் எனினும் பழுதன் றே;
இன்றே மாயச் சிறைநின் றும்
மீண்டேன்; என்னை ஒறுத்தா ரைக்
குலங்க ளோடும் வேரறுத் தேன்;
பூண்டேன் எங்கோன் பொலங்கழல் கள்
புகழே யன்றிப் புன்பழி யும்
தீண்டேன்,' என்று மனமகிழ்ந் தாள்—
திருவின் முகத்துத் திருவன் னுள்''

இதைத் திருப்பித் திருப்பிப் படிக்கும்போது, நாமும் பிராட்டி போலவே அப்பேரானந்தத்தை அநுபவிக்கிருேம், இல்லையா?

செப்பரு நிலைமை

மா. சின்னு

கவிஞர்கள் உளவியல் தெரிந்து காவியம் புனைவதில் வல்லவர்கள். உளவியல் பற்றிய தெளிவு காவிய வெற்றிக்கும், காவியச் சிறப்புக்கும் துணைசெய்யும். காப்பியச் சுவைக்கு மெருகூட்டும். அக உணர்ச்சி குறித்து நம் முன்னோர்கள் கொண்டிருந்த கொள்கையை முதலில் காண்போம்.

உள்ளம்-மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்று நான்கு வகைப்படும். இந்த மனம், அடிமனம் என்றும் புறமனம் என்றும் இருவகைப்படும். புறமனம், கடலின் மேற்பரப்பு போன்றது. அடிமனம், கடலின் அடிப்பரப்பைப் போன்றது. கடலின் அடிப்பரப்பை அறிவது கடினம். அடிமனத்தில் உள்ளதை அறிவதும் கடினம். கடலின் மேற்பரப்பில் போட்ட கல்ஆழத்தில் சென்று தங்குவதுபோல, எண்ணங்கள் வாசனை வடிவில் உள் மனத்தில் தங்கி இருக்கும். என்பர் வேதாந்திகள் பல் பிறவிகளின் சுவடுகள் அடிமனத்தில் இருப்பதாக இந்திய மனோதத்துவ ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இதனால் எண்ணங்களின் சமாதி அடிமனம் என்றும் குறிப்பிடுவர்.

இந்த அடிமனமாகிய உள்மனத்தை நம் தமிழ் இலக்கண இலக்கிய ஆசிரியர்கள் அகம் என்று குறிப்பிட்டனர். தொல்காப்பியர் கைக்கிளை, ஐந்திணை, பெருந் திணைஎன்னும் ஏழினையும் அகம் என்று கொண்டார் எனினும், அவற்றுள் நடுவண் ஐந்திணையே சிறப்பாக அகம் எனக் கொள்ளுதற்குரியது என்பதனை, 'மக்கள் நுதலிய அகனைந்திணையும்' என்ற தொடரால் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம். 'நடுவண் ஐந்திணை' என்று பிரித்தும் சிறப்பிக்கிறார். ஆகையால்தான்இளம்பூரணர்,கைக்கிளை,பெருந்திணை ஆகிய இரண்டினையும் அகப்புறம் என வழங்க வேண்டும் என்று குறிப்பாக உணர்த்தினார். நம்பி அகப்பொருள் ஆசிரியர் இக்கருத்தை விரிவுபடுத்தி அகப்புறக் கைக்கிளை, அகப்புறப்பெருந்திணை என்று வெளிப்படையாகக் குறிப்பிட்டார். இவ்விருதிணைகளிலும் எழும் காதல், அடிமனத்திலிருந்து முகிழ்ப்பதன்று, புறமனத்தில் முகிழ்ப்பதாகும். அடிமனத்திலிருந்து மலரும் காதல்தான் அகனைந்திணையின்பாற்படும்.

மேலும் இக்கருத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள கி. பி. ஆறும் நூற்றாண்டில் தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலையைப் பார்க்க வேண்டும். புறப்பொருள் இலக்கணம் கூறும் இந்நூலில் கைக்கிளைப் படலம், பெருந்திணைப் படலம் என இருபடலங்கள் உள்ளன. இவற்றை நோக்கினால் இவ்விருதிணையும் புறச்சார்புடையன என்பது விளங்கும். புறமனத்தில் தோன்றுவதால் இவை அகப்புறத்திணை ஆயின.

உள் மனத்தை அகம் என்றும், புறமனத்தை மனம் என்றும் பாகுபடுத்தி நம் முன்னோர்கள் குறிப்பிட்டனர் என்பதை ஒரு இலக்கியச் சான்று மூலமும் வலியுறுத்தலாம். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய நான்மணிக் கடிகையில் பின்வரும் பாடல் ஒன்று உள்ளது.

''நாற்றம் உரைக்கும் மலர்உண்மை கூறிய
மாற்றம் உரைக்கும் வினைநலம்; தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனம்உரைக்கும்; முன்னம்
முகம்போல முன்னுரைப்பது இல்.'
(நான்மணிக்கடிகை : 45)

இங்கே 'அகம்' என்று ஆசிரியர் குறிப்பிடுவது அடிமனமாகிய உள்மனமாகும். 'மனம்' என்று குறிப்பிடுவது புறமனத்தையே ஆகும். திருவள்ளுவர்,

''புறங்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து''

என்று கூறினார். ஈண்டு புறம் என்றது புறமனத்தையும், அகம் என்றது உள்மனத்தையும் குறிக்கும். 'குன்றியின் புறம்போலப் புறமனத்தால் செம்மையுடையராகத் தோன்றினாலும் அதன் மூக்குப்போல அகமனம் இருண்டிருப்பாரை உடைத்து உலகம்' என்பதே இக்குறளின் கருத்து.

இவற்றை நோக்கும்பொழுது, சங்க இலக்கியங்கள் மனோ தத்துவ அடிப்படையில் அமைந்துள்ளன என்பது புலப்படும். ஆகையால்தான் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்று வகுத்தனர். அகத்தைக் குறிப்பாகவும், அகப்புறத்தை வெளிப்படையாகவும் கூறினர். உதாரணமாக, ஒரு தலைவி தன் தோழியிடம் 'இராமேசுரம் போகிறேன்' என்கிறாள். தோழியோ, நம் தலைவி இராமேசுரம் என்ற ஊருக்குத் தான் போகப் போகிறாள் என்று நினைப்பாள். தலைவி, தலைவனுடன் உடன்போக்குப் போன பிறகுதான் இதன் பொருளைத் தோழி உணர்வாள். அன்று தலைவி, 'இங்குத் தங்கி இராமே, சுரம் போகிறேன்' என்ற பொருளில் கூறியிருக்கிறாள் என்று அறிவாள். இவ்வாறு அகக்காட்சி அகமாக - குறிப்பாக உணர்த்தப்படுவதைச் சங்க இலக்கியங்களில் ஆராய்வதுபோல் கம்பன் காவியத்தையும் ஆராய வேண்டும்.

அகமனத்தில் உள்ள இன்ப துன்ப உணர்ச்சிகள் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் வெளிப்படும். துன்ப உணர்வுகள் வெளிப்படுவதை மட்டும் இக்கட்டுரையில் காண்போம். அடிமனத்தில் உள்ள, தாங்க முடியாத உணர்வுகளைக் கவிஞர்கள் வாயினால் கூறவே அஞ்சுவார்கள். குறிப்பினால்தான் கூறுவர். தம் காவியப் பாத்திரங்களுடன் ஒன்றிவிடுவதே இதற்குக் காரணம்.

சேதி நன்னாட்டில் திருக்கோவலூரில் தங்கி, வேத நன்னெறியின் வாய்மை விளங்கிட ஆட்சி புரிந்த மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்லத் திட்டமிட்டு முத்தநாதன் திருக்கோவலூரை அடைந்தான். இதனைச் 'செப்பரு நிலைமை எண்ணித் திருக்கோவ லூரிற் சேர்ந்தான்' என்பார் சேக்கிழார். மேலும், அக்கொடியோன் கைத்தலத்தில் இருந்த வஞ்சகக் கவளியை மடிமேல் வைத்துப் புத்தகம் அவிழ்ப்பான் போன்று நடித்து, அவர் வணங்கும் போதில் வாளை எடுத்துச் செய்த செயலைத் 'தான் நினைந்த அப்பரிசே செய்ய' என்று குறிப்பிடுவார். அவ்வஞ்சகன் செய்த கொடுஞ்செயலைக் கூறவே சேக்கிழாரின் உள்ளம் நடுங்குகிறது. அடிமனத்தில் இருந்து உரிய வார்த்தை வெளிவர மறுக்கிறது. 'நினைந்த அப்பரி' என்று குறிப்பாகத்தான் வெளிப்படுகிறது. மெய்ப்பொருள் நாயனாரிடம் கவிஞர் கொண்ட ஈடுபாடும், முத்தநாதன் செயல்மீதுள்ள வெறுப்பும் 'செப்பரு நிலைமை', 'நினைந்த அப்பரிசு' என்ற தொடர் மூலம் வெளிப்படுகின்றன.

இனி, நம் கம்பன் இந்த அடிமன வேதனை உணர்ச்சியை - செப்பரு நிலைமையை - தன் பாத்திரங்களில் எவ்வாறு கையாண்டு வெளிப்படுத்துகிறான் என்று பார்ப்போம். 'கொள்ளான் நின்சேய் இவ்வரசு, அன்னான் கொண்டாலும் நள்ளாது இந்த நானிலம்' என்று கைகேயியின் கால்மேல் விழ்ந்து தயரதன் கூறிய போது 'நின்சேய்' என்றது புறமன வெளியீடாகும். 'கொள்ளான்' என்ற குறிப்பினால் பரதன்மேல் இன்னும் முழு வெறுப்பு தயரதனுக்கு ஏற்படவில்லை. எவ்வளவோ கூறியும், 'முன்னே தந்தாய் இவ்வரம் நல்காய்;முனிவாயேல் என்னே? மன்னா! யார் உளர் வாய்மைக்கு இனி' என்று பிடிவாதம் செய்ததும்தான் பரதன்மீதிருந்த புறமன வெறுப்பு அடிமனத்திற்குச் சென்றுவிடுகிறது. பிறகு, 'நின்மகன் ஆள்வான்; நீ இனிது ஆள்வாய் நிலம் எல்லாம்' என்று பேசுகிறான். தன் கண்ணைக்காட்டிலும், ஆவியினும் மேலாக, மண்ணைவிட உயர்வாக இராமனை நேசிக்கிறான் தயரதன். இம்மூன்றையும் கைகேயிக்குத் தரச் சித்தமாயிருக்கிறான். 'மற்றைய ஒன்று மட்டும் கேட்காதே' என்கின்றான்:

''கண்ணே வேண்டும் என்னினும்
ஈயக் கடவேன்; என்
உள்நேர் ஆவி வேண்டினும் இன்றே
உனது அன்றோ
பெண்ணே! வண்மைக் கேகயன்
மானே! பெறுவாயேல்
மண்ணே கொள்நீ; மற்றைய
ஒன்றும் மறஎன்றான்''.

'இராமன் காடு செல்ல வேண்டும் என்று மற்றொரு வரம் கேட்கிறாயே அந்த வரத்தை மறந்துவிடு' என்று தன் அடிமனத்தில் உள்ளதை வார்த்தை வடிவில் கூறமுடியவில்லை. இராமன் மீதுள்ள பாசம், அத்தொடரைத் தடுக்கிறது. அதனால் 'மற்றைய ஒன்று' என்று மட்டும் குறிப்பு மொழியாக வெளி வருகிறது.

தம்பி சுக்ரீவனுடன் பகைப்பதற்கு முன், சிந்தையால் செய்கையால் ஒரு தீவினை செய்து அறியாதவன் வாலி. பஞ்சின் மெல் அடியாள் பங்கன் பதயுகம் அல்லாமல் வேறு எதனையும் அஞ்சலித்து அறியாதவன். இவனால் அமுதம்

பெற்றவர்கள் உயிருடன் இருக்கிறார்கள். இன்னமுதம் ஈந்த இவ்வள்ளலோ இறந்து கிடக்கிறான். செய்தி கேட்டு மலைக்குல மயில் தாரை பதறிக்கொண்டு ஓடி வருகிறாள். அவன் மெய்யில் வீழ்ந்து குழலும் யாழும் வீணையும் நாணமுறும்படி அக்குயில்மொழியாள் புலம்பு கிறாள்:

''வரைசேர் தோளிடை நாளும் உறங்குவேன்
கரைசேரா இடர் வேலை கண்டிலேன்
உரைசேர் ஆருயி ரே!என் உள்ளமே!
அரைசே! யான்இது காண அஞ்சினேன்.''
(தாரை புலம்புறு—4.)

'உன் மலையொத்த தோள்களின் இடையில் நாள் தோறும் உறங்கினேன். துன்பக் கடலையே யான் இதுநாள்வரை கண்டிலேன். புகழ் பெற்ற என் ஆருயிரே! என் உள்ளமே! என் அரசே! இப்பொழுது நீ கிடக்கும் இந்தக் கோலத்தைக் காண அஞ்சுகிறேன்,' என்று புலம்புகிறாள். 'இதுகாண அஞ்சினேன்' என்று தான் கூறுகிறாள். 'நீ இறந்தது காண அஞ்சு கிறேன்' என்று அடிமனத்தில் உள்ள உணர்ச்சி, வார்த்தையாக வெளிவர மறுக்கிறது. 'இது' என்று குறிப்பாகத்தான் வருகிறது. 'நினைந்த அப்பரிசு' என்றார் சேக்கிழார். 'இதுகாண அஞ்சி னேன்' என்றாள் கம்பனுடைய தாரை.

இராவணனை நினைந்ததும் மறந்ததும் இல்லா தவள் மண்டோதரி. மறந்தால் அல்லவா நினைப்பு என்ற ஒன்று நிகழும். மயன்மகள் மண்டோதரி, இந்திரசித்து இறந்த செய்தி கேட்டு ஓடி வருகிறாள். ஏக்கத்தால் நிறைந்த நெஞ்சோடு வந்து, மலையின்மேல் மயில் வீழ்வது போல் மைந்தன்மேல் விழுந்து, வாய் திறந்து அரற்றுகின்றாள். அரக்கர் வீழ்ச்சியும் மகன் வீழ்ச்சியும் கண்டு, தன் நாயகன் நிலை நாளை என்னவாகும் என்று அவளுடைய அடிமனம் நினைக்கிறது.

''பஞ்சுஎரி உற்றதென்ன, அரக்கர்தம்
பரவை யெல்லாம்
வெஞ்சின மனிதர்கொல்ல விளிந்ததே;
மீண்டது இல்லை ;
அஞ்சினேன், அஞ்சினேன்; அச்சீதையென்று
அமுதால் செய்த
நஞ்சினால், இலங்கை வேந்தன் நாளைஇத்
தகையன் அன்றோ?
(இராவணன் சோகப் படலம்:53)

'வெஞ்சின மனிதர் கொல்ல அரக்கர் கூட்டம் எல்லாம் தீப்பற்றிய பஞ்சுபோல அழிந்தது. எவரும் இராமலக்குவருடன் பொருது மீண்டா ரில்லை. இதை நினைக்க நினைக்க எனக்கு அச்சம் ஏற்படுகிறது. அச்சீதை என்ற அமுதால் செய்த நஞ்சினால் நாளை என் இலங்கை வேந்த னும் இந்த நிலையை அடைவான் அல்லவா?' என்று கூறி அழுகிறாள். 'மகனைப்போல் தலை துண்டிக்கப்பட்டு என் கணவனும் இதுபோல் வீழ்ச்சியுற்றுப் பிணமாவான்' என்று வெளிப் படையாகக் கூற அவள் அடிமனம் இடந்தர வில்லை. 'இலங்கை வேந்தன் நாளை இத்தகை யன் அன்றோ!' என்று மட்டும் குறிப்பாகக் கூறு கிறது. செப்பரு நிலைமையை எவ்வாறு செப்ப முடியும் ?

தாரையும், மண்டோதரியும் தத்தம் நாயக ரிடம் கொண்ட அடிமனக் காதல், அமங்கலச் சொற்கள் நாவில் வரவிடாமல் தடுத்து, 'இது', 'இத்தகையவன்' என்ற சுட்டின் மூலம் துய ரத்தை வெளிப்படுத்துகிறது. இக்குறிப்பு மொழிகள் மூலம் சோகத்தின் உச்ச கட்டத்தை யும் அன்புடைக் காதலின் தூய்மையையும் கம்பன் நமக்குத் தெளிவாகக் காட்டிவிடுகிறான்.

கம்பனுடைய பாத்திரப் படைப்பு மனோ தத்துவ அடிப்படையில் அமைந்துள்ளது. இராமன், இராவணன் முதலிய பாத்திரங்களின் அக உணர்வுகளை அறிஞர்கள் ஆராய்ந்தால் கம்பனுடைய தத்துவம் நமக்குப் பல உண்மை களை வெளிப்படுத்தும் விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை,

''நின்னுவார் பிறரன்றி நீயே ஆனுய்''

அருட்பா R. S. தங்கவேலு

அப்பர் பெருமான் இறைவனை வர்ணிக்கும் போது ''நின்னுவார் பிறரன்றி நீயே ஆனுய், நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்துமானுய்'' என்று ஆனந்தமாகப் பாடுகின்முர். மூல முதல்வன் ஆதிநாயகன் ஒப்பும் நிகர்வுமில்லாத் தனிப்பெருந் தலைவன் என்பதைச் சுட்டவே இவ்வண்ணம் பேசுகின்முர். கம்பநாட்டாழ் வாரின் இராம காதையிலே சுடர்விட்டுப் பிர காசிப்பது இக்கருத்தே; மணிகளின் ஊடே செல்லும் சரடுபோல இந்தக் கருத்தை ஒட்டியே மற்றைய சிந்தனைகள் ஆதாரம் பெறுகின்றன. கம்பர் இராமனைப் பரம்பொருளாகவே கொண் டுள்ளார். ஆனுல் வான்மீகி லோக நாயகனுகக் கொண்டார். ''கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண் தீர்த்த கழல்வேந்தே'' என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லி இராம னது இறைத்தன்மைக்கு அடிக்கல் நாட்டி விடுகின்முர் கம்பர் பெருமான். இதோ கவிக் கூற்முக இங்கு அமைந்துள்ள பாடல் இராமனது பரத்துவத்தை ஆனந்தமான போக்கைச் சுருதி கூட்டுகின்றது. இராமனது வாளியால் துளைக் கப் பெறும் வாலி இராமனது நாமத்தை அவ் வாளியில் காண்கின்முன். இதை வியாஜிய மாக வைத்துக்கொண்டு எவ்வளவு அற்புத மான நுண்ணிய கருத்தைத் தத்துவத்தில் குழைத்து நமக்குக் கொடுக்கின்முர்!

'' மும்மைசால் உலகுக் கெல்லாம்
  மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
  தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும்
  மருந்தினை, இராமன் என்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக்
  கண்களில் தெரியக் கண்டான்''

(வாலிவதைப் படலம்)

மனிதத் தரத்திலே இதற்குமேல் சொல்ல முடி யாது. இக்கருத்தின் உணர்ச்சி கெடாது, ஜீவ னுள்ள மொழியாக்கம் போன்றே அமைந்திருக் கின்றது. தியாகப் பிரம்மத்தின் இராம கானம் ''ராம நீ சமான மெவரு''—இராமா உனக்குச் சமானமானவர் எவருளர் ?—என்று இரத் தினச் சுருக்கமாக நம்முன் எண்ணத்தை வைக் கின்முர். தியாகப் பிரம்மத்தின் இராம தாகம் கங்கு கரையின்றிப் போகவே இதைத் தணிக்க அங்கு, இங்கு, அப்பால் என்றெல்லாம் அலை பாய்கின்முர். ''நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணு என்னும் நாமம்'' என்ற திருமங்கை மன்னனின் விடாய் தீர்த்த விச்சையை இவரும் பின்பற்றுகிமுர். ''சீதம்ம மாயம்ம, ஸ்ரீராமுடு மாதன்றி''— சீதாப் பிராட்டியார் எங்கள் தாயார், இராமச் சந்திர மூர்த்தி எங்கள் தந்தை—என்று ஞானப் பறை கொட்டி இறும்பூது கொள்ளுகின்முர்.

மேலைநாட்டுக் காவியங்களாகிய ஹோமரது 'இல்லியத்', ஒதனி வெர்ஜிலது ஈனியத், நாடக மேதை ஷேக்ஸ்பியரது நாடகங்கள், அவைகள் இன்ப இயல் நாடகங்களாயினும், துன்ப இயல் நாடகங்களாயினும் எல்லாவற்றிலும் ஒன்பான் சுவைகள் அணிசெய்கின்றன. ஆனுல் அவற்றில் மீதூர்ந்து நிற்பன காதலும் வீரமு மாகும், நமது அகநானூறு புறநானூறு போல! ஆனுல், கம்பர் பெருமானுரது மகா காவியத் திலே இமய முகட்டிலே பௌத்திரமான ஒரு சுனையினின்றும் பூரித்துப் பொங்கிக் கொப் புளிக்கும் ஜீவவெள்ளம் போன்று பெருக்கெடுத் தோடுவது இராமனது பரத்துவமே! இக் கருத்தை அடியொற்றியே சரணுகதித் தத்து வம்—பிரபத்திநெறி—மணம் கமழ்கின்றது. காவியப் போக்கிலே பல பாத்திரங்கள் வாயி லாகவும் கவிக்கூற்முகவும் தமது அடங்காப் பெருவெள்ளக் காதலைக் கொட்டுகின்முர். இக் காரணம் பற்றித்தான் இம்மகாகாவியம்! தினே தினே மெருகேறிக்கொண்டே செல்லுகின்றது. இந்தோனிஷியா, ரஷ்யா போன்ற நாடுகளிலே மணிக்கணக்காக இராமநாடகங்கள் நடத்தப் படுகின்றன. இன்னுமொரு ஆச்சரியம்! இம் மகா காவியம் காலத்தையும் இடத்தையும் வென்றது. மானிட ஜாதிக்கே உகந்தது; பொருத்தமானது. எவர்க்கும் எந்நிலையிலும், எச்சூழலிலும் திசைகாட்டும் தாரகையாக இன் றும் இருக்கின்றது. இன்றைய பரபரப்பான கொந்தளிக்கும் உலகுக்கு இன்னும் உகந்ததா யிருக்கின்றது. உலகெங்கும் காணப்படும். அறக்கோட்பாடுகள், தர்ம சாஸ்திரங்கள், நீதி

நூல்கள் ஆகியவற்றில் காணப்படும் எல்லா மூலக் கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டு, தனது தனித்தன்மையோடும் விகசிக்கின்றது. 'காலமும் கணக்கும் நீத்த காரணன்' என்று அனுமன் சொல்லுவானே அது, ஆஹா! எத்துணைப் பொருத்தம்!

அறம் தர்மம் என்ற வார்த்தை மிக நீளும் தன்மையது— Elastic and Relative— காலப்போக்கிலே சில அறங்கள் மாறலாம். ஆனல், சில மூல அறங்கள் என்றுமே மாரு. இராம காதையிலே இந்த மூல அறங்களுக்கு எடுத்துக் காட்டாக இராமன் வாழ்ந்து காட்டுகின்ருன். ''முந்தையோர் முறை'' என்று இதைப் பரதன் மூலமாக நமக்குக் காட்டுகின்ருர், கவிச்சக்ரவர்த்தி.

இராமனும் கிருஷ்ணனும் நம்மைப் போன்று மனிதர்களாகப் பிறந்தவர்களே. ஆனல் தங்களது ஒப்புயர்வற்ற குணநலன்களால் தெய்வமானுர்கள் என்று ஒரு சாரார் சொல்லுகின்ருர்கள். தேவர்கள் இவ்வுலகில் மனிதர்களாகப் பிறப்பதற்கு அருந்தவம் ஆற்றுகின்ருர்களாம். ஏனென்ருல் அப்பொழுதுதான் நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரால் உடம்பு நனைந்து நனைந்து இறைவனிடம் பக்தி செலுத்த முடியுமாம். தேவலோகத்தில் அது சாத்தியமில்லையாம். இறைவன் முக்தியைக் கொடுத்தாலும் கொடுப்பான். ஆனல் பக்தியைக் கொடுக்க மாட்டானும்! இது ஒரு தத்துவக்கண்ணேட்டம். இது அவ்வண்ணமேயிருப்பினும் நம்மைப் போல இராமனும் கிருஷ்ணனும் மானிடச் சட்டையைத் தாங்கியவர்களே என்ருலும் இது இராமகிருஷ்ணுதியரது பெருமையையும் சிறப்பையும் உயர்த்துமேயொழியக் குறைக்காது. ''ஸ்திதப் பிரக்ஞன்'' என்ற பெருநிலையை இவ்விருவரும் எட்டியவர்கள். ஒரு மனிதன் எப்படி அறநெறிப் பண்புகளோடு வாழவேண்டுமென்ற இலக்கியத்திற்கு இலக்கணமாக அமைந்தவர்கள். ஆக, இவர்கள் மனித தெய்வங்களா! தெய்வ மனிதர்களா?

இன்னுமொரு கூற்று! அயோத்தி இராமனுக்கு முன்னே இராமன் என்று நாமம் பூண்ட பல பெரியோர் இருந்திருக்கின்ருர்களாம். ஆக, இராமனுக்கு முன்பாகவே எவன் ஒருவனே, அவனுக்கு இராமன் என்னும் பெயர் இருந்திருக்க வேண்டும். இதோ இப்படி ஒரு ஆதாரத்தைக் காட்டுகின்ருர்கள். இராமபிரான் தன் மரபிற்கு ஏற்ப சீதாப்பிராட்டியை மணந்துகொள்வதற்கு மங்கள ஸ்நானம் செய்தபின் திருநாமத்தை அணிந்தான் என்று சொல்லுமுகத்தான் .

''என்றுநான் முகன்முதல் யாரும் யாவையும்
நின்ற பேரிருளினை நீக்கித் தீநெறி
ஒன்று மீளாக் குறிசேரச் சேர்த்திடும்
தன்திரு நாமத்தைத் தானும் சாத்தியே''

என்ற குறிப்புக் காணப்படுகின்றது. ஆக, பரம் பொருளுக்கு இராமன் என்ற பெயர் கற்பாந்த கோடி காலம் வழிவழியாக வருகின்றது. இதை மிக அழகாகத் தியாகப் பிரம்மம் சொல்லுவார், ''நான் சிவபரத்திற்கு உரிய மகாமந்திரமாய ஓம் நமசிவாய என்றதில் உள்ள ஜீவாட்சரமாகிய 'ம' வையும் பரமபத நாதனின் மகா மந்திரமாகிய 'ஓம் நமோ நாராயணுய' என்றதில் உள்ள பீஜாட்சரமாகிய 'ர' வையும் இணைத்துக்கொண்டு எனது ஆன்மநாயகனை இராமா, இராமா என்று நாளெல்லாம் பொழுதெல்லாம் கூவிக் கூவி அழைக்கின்றேன்,'' ''எவரினி நிர்ணயிஞ்சிரா'' என்ற சாகித்யத்தில் சுட்டுகின்ருர். ஆக, இராம என்னும் நாமம் எல்லோருக்கும் உகந்த பொது நாமம். பாடிய வாய் தேனூறும்-ஆனந்தத் திருநாமம்.

இராம காதையிலே மனிதர்கள், தேவர்கள், அரக்கர்கள் எல்லோரும் வருகின்ருர்கள். கழுகு, கரடி, குரங்கு எல்லாம் வருகின்றன. அவை பேசவும் செய்கின்றன. ஆம், அஃறிணைப் பொருட்களும் நம்மைப் போலப் பேசுகின்றன. ஒழுக்கம், நெறி, பண்பு, பக்தி என்றெல்லாம் பேசுகின்றன. சுவர்க்கம், நரகம், தேவலோகம் வருகின்றன. இவைகளெல்லாம் நமக்கு முரண்பாடுகள் போல் தோன்றுகின்றன. சில நேரங்களில் நமக்குக் குழப்பங்களும் ஏற்படுவனபோல் தோன்றுகின்றது. ஆனல், பரிபூரணமான முழுமைபெற்ற ஒரு உன்னதப் பொருளின் பல பட்டைகள் இவைகள். பட்டைகளைத் தனித் தனியே காணும்பொழுது நமக்குக் குழப்பம் ஏற்படுவது போன்ற ஒரு பிரமை, ஒரு மயக்கம் அவ்வளவே. கம்பநாட்டாழ்வார் தமது மகா காதையிலே கதைப்போக்கிற்கு வேண்டாத சில பாத்திரங்களையும், சம்பவங்களையும் புகுத்தியிருக்கின்ருரென்று பல மேதாவிகள் சொல்லுகின்ருர்கள்— சிலப்பதிகாரத்திலே இளங்கோ

வடிகள் கவுந்தி அடிகளையும், சாரணர்களையும் புகுத்தித் தமது சமயக் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதுபோல—இக்கருத்தை விளக்க விராதன் துதியையும், பிரகலாதன் சரிதையையும் புகுத்தியிருக்கிறார் என்று சுட்டிக் காட்டுகின்றார்கள். இப்பகுதிகள் இல்லாமலே கதை ஆனந்தமாக நடைபோடும். ஆனால் அழகுக்கு அழகு செய்வதல்லவா ஒரு மகாகவியின் தனித்துவம்! அதுமட்டுமல்ல, ஒரு மகாகவி தனது ஆனந்த நாயகனை எங்கெங்கு எப்படி எப்படியெல்லாம் உயர்த்த வேண்டுமோ அவ்வண்ணமே செய்வான். தன்னேரில்லாத் தனிப்பெருந் தலைவனல்லவா இந்த ஆத்ம நாயகன்?

அப்பர் பெருமான் ''சிவனென்னும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்'' என்றும், தொண்டரடிப்பொடி ஆழ்வார் ''மற்றுமோர் தெய்வ முண்டோ மதியிலா மானிடங்காள்'' என்றும், திருமூலர் ''சிவனொடொக்கும் தெய்வம் தேடினு மில்லை அவனொடொப்பர் இங்கு யாருமில்லை'' என்றும் பாடியுள்ளார்கள். இவர்கள் எல்லோரும் ஆன்ம அனுபூதி பெற்ற மகான்கள். ஆனால் தங்களது ''உள்ளங்கவர்ந்த கள்வனை'' எவ்வளவு உயர்வாகப் பேசுகிறார்கள்! ஒட்டுமாங்கனியைச் சுவைத்து உண்பவன் மற்ற கனிகளைப்பற்றி ஏன் எண்ண வேண்டும். எண்ணவே மாட்டான். இக்கண்ணோட்டத்தோடு காணுங்கால் கம்பநாட்டாழ்வாரின் காவிய மாண்பு நமக்கு நன்கு புரிகிறது. இராம நாமத்தின் பெருமையைப் பளிச்சென்று முதலிலேயே சொல்லிவிடுகிறது ஒரு தனியன்.

''நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மானமும் இன்றித் திருமே
இம்மையே இராமஎன் றிரண்டெ ழுத்தினால்''

என்று சொல்லும்பொழுது இராமநாமத்தின் அருமையை நாமும் நன்கு அறிந்துகொள்ளுகிறோம்.

இவ்வாறாக இராம காதையிலே காணப்படும் முரண்பாடுகள் ஆனந்தமான முரண்பாடுகள். (Delightful Confusion) சம்பந்தா சம்பந்தமில்லாத பல விஷயங்கள் புகுத்தப்பட்டிருப்பதுபோலத் தோன்றினாலும், அவைகளையெல்லாம் ஊடுருவி ஒரு அற்புதமான முழுமை ஆனந்த சுருதி கூட்டுவதைக் கேட்கலாம். ஆக, மேலெழுந்த வாரியாகக் காண்போருக்கு ஏதோ ஒரு பிரமை, மயக்கம், குழப்பம் ஏற்பட்டாலும் சற்றுத் தெளிந்த பின்னர், 'ஆஹா! இந்தத் தாறுமாறுகளில் எவ்வளவு ஒழுங்கும் வடிவமைப்பும் இருக்கின்றன, என்று உணர்ந்து பிரமிப்படைவார்கள்.

இப்பொழுது கம்பநாட்டாழ்வார் எப்படி இராமனைப் பரம்பொருளாக, பரமபத நாதனாகக் காட்டுகின்றார் என்று பார்ப்போம். இராமனை உருவ அழகு, குண அழகு, வீரவழகு எனப் பல கோணங்களில் காட்டுகின்றார். 'நடையில் நின்றுயர் நாயகன்', 'அறத்தின் மூர்த்தி', ''கண்ணில் காண்பரேல் ஆடவர் பெண்மையை அவாவும் தோளினன்' என்றெல்லாம் இறும்பூதோடு பாடுகின்றார். தன்வசமிழந்த நிலையில் ''மையோ, மரகதமோ, மழைமுகிலே முகிலோ மறிகடலோ'' என்று வியக்கின்றார். ''முத்துத்தாமமும் முடிவில்லதோர் எழில் நீலமேனி ஐயோ! நிறைகொண்டது என்நெஞ்சினையோ'' என்ற திருப்பாணாழ்வார் உள்ளம் இங்கு எதிரொலிக்கின்றது. குகனது ''ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!'' என்ற வியப்பும் 'எண்ணில் கோடி இராமர்கள்' என்ற கோசலையின் பாராட்டும் உயர்வு நவிற்சியாக உபசாரமாகச் சொன்னவை என்பதை நாம் இப்பொழுது காண்போம். ஆம், இராமனது அகஅழகு, புறஅழகு கவிச்சக்ரவர்த்தினது அகஅழகு, புறஅழகு கவிச்சக்ரவர்த்தியினது உள்ளத்தில் நிரம்பி வழிந்தது.

''நின்னுவார் பிறரன்றி நீயே ஆனாய்'' என்ற இராமனது பரத்துவத்தை மிக அற்புதமாக விராதன் மூலமாக நமக்குக் காட்டுகின்றார் கம்பர். விராதன் இப்பூதவுடல் நீத்துக் காந்தர்வ வடிவம் பெற்று இராமனை மூலமுதல்வன் என்று தொழும் காட்சி நம்மை ஜென்ம சாபல்யம் அடையச் செய்யும். இங்கு மிக நுட்பமாகக் கம்பர் பெருமான் ஒரு நகாஸ் வேலை செய்து மற்றைத் தேவர்களெல்லாம் இவர் ஆணைவழி நடப்பவர்கள் என்பதையும் காட்டுகின்றார்.

''பனிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் படிபற்றி
நனிநின்ற சடயத்தோர் எல்லோரும் நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின் தகைமூர்த்தி நீயாகில்
இனிநின்ற முதல்தேவர் என்கொண்டென் செய்வாரே''
(விராதன் வதைப்படலம்)

வாலியின் மூலமாக நமக்குக் கவிஞர் பெருமான் இராமனது அவதார நோக்கத்தையும், பரத்துவத்தையும் என்ன அழகாகக் காட்டுகின்ருர். ''சுக்ரீவா. இவரை யாரென்று கண்டு கொண்டாயா? இவர் சாட்சாத் பரம்பொருள், இது நம்மைப் போன்ற குரங்குக்குத் தெரியாது. ஆனுல், வேறென்னப்பா அத்தாட்சி வேண்டும். என்னைக் கொன்றது ஒன்றே போதாதா?'' என்று கேட்கின்ருன். இந்த உருக்கமான காட்சியை நம்முன் காட்டுகின்ருர்—கம்பர். இப்படிச் சொல்லக் கம்பராற்ருன் முடியும்!

''நிற்கின்ற செல்வம் வேண்டி
நெறிநின்ற பொருள்கள் எல்லாம்
கற்கின்ற இவன்தன் நாமம்
கருதுவ இவனைக் கண்டாய்
பொற்குன்றம் அனைய தோளாய்
பொதுநின்ற தலைமை நோக்கின்
எற்கொன்ற வலியே சாலும்
இதற்கொன்றும் ஏது வேண்டாம்''
(வாலி வதைப்படலம்)

இது ஒரு அற்புதமான மணிப்பாட்டு.

மேலும், தன் மகன் அங்கதனுக்கு அறிவுரை கூறும் பாங்கிலே மரணவாக்கு மூலமாக மிக உயர்ந்த கருத்தைச் சொல்லுகின்ருன், வாலி. ஆம்; இவன் 'சிறியன சிந்தியாதான்''. எனவே, மாமேருவைப் போன்ற மிகப்பெரிய கருத்தைச் சொல்லுகின்ருன். மரண வாக்குமூலமென்பது இவ்வுலகப் பற்றுக்களையும் ஆசாபாசங்களையும் விட்டுச் செல்லும் ஒரு உண்மையான உறுதிச்சீட்டு. ''அங்கதா, நீ இன்னும் சிறுபையனுக நடந்து கொள்ளாதே. நாம் கடைத்தேற உள்ள ஒரே மார்க்கம் இறைவனுகிய இந்த இராமனது பாதபங்கயங்களே'' என்று வேத சுருதிகள் போன்று பேசுகின்ருன்.

''பாலமை தவிர்நீ; என்சொல் பற்றுதி
ஆயின் தன்னின்
மேல்ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள்
வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று கட்புலக்கு உற்றது
அம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென
வணங்கு மைந்த!'
(வாலி வதைப்படலம்)

அனுமன் மூலமாக இராமனது பரத்துவத்தை நமக்குக் காட்டுகின்ருர்.

''கண்டெனன் கற்பினுக்கு அணியைக்
கண்களால்
தெண்திரை அலைகடல் இலங்கைத்
தொன்னகர்
அண்டர்நாயக! இனித் துறத்தி ஐயமும்
பண்டுள துயரும் என்று அனுமன் பன்னுவான்.''
(சுந்தர காண்டம்)

அண்டர் நாயக—தேவாதி தேவனே— என்ற ஒரே பதத்தில் கம்பர் எல்லாவற்றையும் நமக்குக் காட்டுகின்ருர்.

இராவணன் வாயிலாக நமக்குக் கம்பர், இராமன் யார் என்பதை அதிஅற்புதமாகச் சொல்லுகின்ருர். இது யுத்த களத்தில் செய்யும் இராவணனது மதிப்பீடு! சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய திரிமூர்த்திகளையெல்லாம் கடந்த மூலபரம்பொருள் இந்த இராமன் என்று அவன் ஒரு ஆதீதமான மோனப் பெருநிலையில் சொல்லுகிருன்.

''சிவனோ அல்லன்; நான்முகன் அல்லன்;
திருமாலாம்
அவனோ அல்லன்; மெய்வரம் எல்லாம்
அருள்கின்ருன்;
தவனோ என்னின் செய்து முடிக்கும்
தரன்அல்லன்;
இவனோதான் அவ்வேத முதற் காரணன்?''
என்ருன்.

மேலும் பேசுவான், ஒரு துன்ப இன்பத்திலே,
''வென்றிலன் என்றபோதும் வேதம்
உள்ளளவும் யானும்
நின்றுளன் அன்றோ மற்றுஅவ் இராமன்பேர்
நிற்குமாயின்
பொன்றுதல் ஒரு காலத்தும் தவிருமோ?
பொதுமைத்து அன்றோ?
இன்றுளர் நாளை மாள்வர்; புகழுக்கும் இறுதி
உண்டோ?''

இராவணனது இக்கருத்தோட்டம் மிக அற்புதமானது. வஸிஷ்டர் வாயினலேயே பிரம்மரிஷி பட்டம் பெறவேண்டுமென்று கங்கணம் கட்டி வெற்றி கண்ட விஸ்வாமித்திரனரின் கதை ஒருகால் கம்பர் பெருமானுக்குப் பளிச்சிட்டிருக்கலாம். எனவே, இராவணன் மூல

மாகவே இக்கருத்தை இந்த உலகிற்குச் சொல்லு கின்றார்.

கடைசியாக, முத்தாய்ப்புப்போல இராவண னது சடலத்தின்மீது புரண்டழுகும் மண்டோ தரியின் புலம்பல் மூலமாக இராமனது அவ தார நோக்கம் காவிய நோக்கம், பரத்துவம் எல்லாவற்றையும் காட்டிவிடுகின்றார், கவிச் சக்ரவர்த்தி. காவியத்தின் மணிமுடியாகத் திகழுகின்றது அப்பாட்டு!

''காந்தையர்க்கு அணிஅனைய சானகியார்
பேர்அழகும், அவர்தம் கற்பும்
ஏந்துபுயத்து இராவணனார் காதலும், அச்
சூர்ப்பணகை இழந்த மூக்கும்,
வேந்தர் பிரான் தயரதனார், பணியினால்
வெங்கானம் விரதம் பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற்று அம்மா!'',

மண்டோதரி மறுகுகின்றாள்!

பி. சி. சீதாபதி — 'குறளடிமை'—சேலம்-5.

சோழ வள நாட்டின் சோர்விலாச் சோற்றினைப் போன்று பெருகிடும் பெருமை ஓங்கும் சொல்வள ஏட்டின் மன்னர் மன்னனே! கம்ப நாட்டாழ்வாரே! வணங்குகின்றேன், மண்டோதரி, யான்.

இம்மியளவும் சிந்தித்துப் பாராதே, பிறன் மனைவியை விழைபவன் எத்துணைப் பெருமை பொருந்தியவனாயினும் ஏது பயனு மிலன் என்பதனை எடுத்துக் காட்ட இசைபெறு காவியமாம் இராமாயணத்தை உலகினிற்கே ஈந்துள்ளீர்! கற்பினுக்கு அணியாம் சீதையைக் காவிய நாயகியாய்க் கண்டீர், தெளிவுற. அவளின் கணவனும் காகுத்தனுக்கு முரண்பட்ட இலங்கேசுவரனின் பட்டத்தரசியாய்க் காட்டினீர், மயன் மகள் மண்டோதரி என்னை.

மன்னரின் உரிமைப் பெண்டிரை அவர்தம் அரண்மனைக் கூடங்களுள் உற்று நோக்கிய பாங்கில் வர்ணித்தல் ஆசாரக்கோவையின்படி பிழையுடைத்து என்னும் கொள்கை கொண்டீரோ? கோசல நாட்டுக் கோமகளிர் மூவர்தம் இல்லற வாழ்வு வகைகளைப் பற்றித் தனிப் படப் பாடினீரில்லை! அஃதேபோல் இலங்கை வாழ் என்னைப் பற்றியும் பாடினீரில்லை. என்றாலும், என் உடல் வளமும், வனப்பும், உள்ளப் பாங்கும் தங்கள் காவியத்தில் காணப்படாமல் இல்லை!

எனது ஆருயிர் மைந்தன் இந்திரசித்தன் இறந்துபட்டது கேட்டு என்னையே மறந்த நிலையில் நான் ஓடோடி வந்தேன். அந்த அவலச் சூழலில் என்னைக் கண்டுவிட்ட தாங்கள், ''அவள் கூந்தல் கருமையானது; அடர்த்தியானது; நீண்டது; பாதம் தொடும்படி தாழ்ந்து தொங்கியது! கைகளோ தாமரை மலரென மென்மையானவை; முலைகளோ, குரும்பையை ஒத்தன! அத்தகைய தனங்களின் மேல் தன் கைகளைக் கொட்டிக்கொண்டே வந்தாள்! ஏராளமான அணிகலன்களை அணிந்திருந்தாள்; அவற்றைத் தாங்கிட அவளின் அகன்ற அல்குலே அல்லாமல் சிறிய இடையும் இருந்தது!'' என்றெல்லாம் சுட்டிக் காட்டி,

''கருங்குழல் கற்றைப் பாரம் கால்தொட,
கமலப் பூவால்
குரும்பையைப் புடைக்கின்றாள்போல் கைகளால்
முலைமேல் கொட்டி,
அருங்கலச் சும்மை தாங்க, 'அகல் அல்குல்
அன்றி, சற்றே
மருங்குலும் உண்டு உண்டு! என்ன, மயன்
மகள் மறுகி வந்தாள்''
(1433/44)

எனப்பாடி விட்டீர்!

''தலைக்கு மேலே கைகளை உயர்த்தி, நீட்டி வரும்போழ்து நெஞ்சுறுப்பு நிமிர்ந்து நின்று கண்ணை உறுத்தினவே! இந்திரசித்தின் இறந்த அவலச் செய்தி கேட்டு, நெருப்பை மிதித்து ஓடுவாள் போலே காலடிகளை எடுத்து வைத்து ஓடும் போழ்திலே 'இடை ஒடிந்திடுமோ?' என்ற அச்சத்தைத் தோற்றுவித்ததே! பாசம் மிக்க நெஞ்சொடு மைந்தனின் உடல் மேல் மயங்கி வீழ்ந்த நிலை, மலையின் மேல் மயில் சாய்ந்ததுபோல் இருந்ததால் நின் தளிர்மேனியின் தன்மை தெரிந்ததே!'' என்றெல்லாம் (1433/45) கூறுகின்றீர்களா! ஆம்; எங்கள் பெண் இனத்தை மயிலென, மானென வர்ணித்தல் தங்கட்குக் கைவந்த கலையாயிற்றே! பாசாங்கு செய்து படுத்துக் கிடந்த கைகேயியை அவளின் கணவன் வாரி எடுத்த பாங்கினை, 'மடந்தையை, மானை எடுக்கும் ஆனையேபோல் தடங்கைகள் கொண்டு தயரதன் தூக்கி'ய தாகப் பாடியவராயிற்றே தாங்கள்! (256/7).

அரசுத் தாயாகிய யான் ஈன்றெடுத்த இந்திரசித்தனை அன்புத் தாயாக எவ்வளவு வாஞ்சையோடு குழந்தைப் பருவம் முதல் வளர்த்தேன் என்பது தாங்கள் அறியாதது அன்று. அம்புலி காட்டி, 'அம்மா வா' என்றழைத்து (1434/50) அவன் கையேந்தி விளையாடச் செய்து மகிழ்ந்தேன். இன்னிசைச் சதங்கை ஆர்ப்ப அவன் தவழ்ந்து வந்த பருவத்தே சிங்கக் குட்டிகளைப் பிடித்து வைத்து விளையாடக் கண்டு, அவன் வீரம் வளர்ந்தோங்க வாய்ப்புத் தந்தேன். (1434/49.] காளைப் பருவம் கண்டதும் இயற்கையாக

எழக்கூடிய விகார எண்ணங்களுக்கு அவன் இடங் கொடுத்து மாறிடாவண்ணம் அவனை இயக்கியர், அரக்கியர், விஞ்சையர், ஏழை மாதர் ஆகியோர், கறை படியாத சந்திரன் போன்ற தங்கள் வதனங்களைக் காட்டி மயக்கி, முயக்காமல் கண்காணித்துக் காத்து வந்தேன்! (1434/51). என்னுடைய இந்தத் தாய்மை உணர்வுகளைத் தானே கொட்டி விட்டீர் தங்கள் காவியத்தே, இந்திரசித்தன் மாண்டு கிடந்தபோழ்து யான் புலம்அயிருந்த பாங்கில்!

அதுமட்டுமா! அவன் இந்திராதி தேவர்களை யெல்லாம் வென்று நின்ற வீரப் பெருமிதத்தில் அவனுடைய இளமையி விருந்தே திளைத் திருந்த யான், 'கேவலம் ஒரு மானிடன்கொல்ல இவன் இறப்பானு? மாபெரும் மேருமலை சிதறும்படி ஒரு சிறிய அணு உதைத்ததற்குச் சமம் அல்லவோ, என் மைந்தனை ஒரு மானிடன் கொன்றது!' என்றெல்லாம் ஓலமிட்டதனையும் அல்லவா ஒலிப்பதிவு செய்து விட்டீர்!

(1434/52.)

இவ்வாறு என் உணர்ச்சிகளையெல்லாம் சொற்களால், சோகம் பொருந்த எடுத்துக் காட்டிய தாங்கள், அங்கே தங்களின் எண்ணத் தையும் அல்லவா, என் வாயாலேயே வெளிக் காட்டி விட்டீர்! ஆம், என் மகன் மாண்ட நிலையால் என் மணாளரும் மற்றொருநாள் அதே கதிக்குள்ளாவாரே எனக் கருதியதை

''பஞ்சு எரி உற்றது என்ன அரக்கர்தம் பரவை
எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல, விளிந்ததே;
மீண்டது இல்லை;
அஞ்சினேன் அஞ்சினேன்; அச்சீதை என்று
அமுதால் செய்த
நஞ்சினல், இலங்கை வேந்தன் நாளை
இத்தகையன் அன்றோ?''

(1434/53)

என்று கதறியதாகப் பாடிவிட்டீரே!

நல்லவேளையாக, அதுபோழ்து அந்தச் சூழ லில் என் கணவரும் அருகில் இருந்தார்; அவ ருடைய வீரத்திற்கு இழுக்குத் தோன்ற நான் அவ்வாறு அரற்றி யிருந்திருப்பேனெயாகில் என்னை அப்போழ்தே, அங்கேயே கொன்று தொலைத்திருப்பார் என்பது யாவரும் உணர வல்லதே யன்றோ, அவருடைய பெருமிதப் பண்புகளைத் தாங்கள் தங்கள் காவியத்தில் காட்டியுள்ள வண்ணம் புரிந்து கொண்ட நிலை யில் !

''புகழ் புரிந்தஇல் இலோர்க்கு இல்லை இகழ்வார்
முன்
ஏறுபோல் பீடு நடை'' (திரு. 6/9)

என்ற தெய்வப் புலவரின் வாக்கிற் கிணங்க நடந்து, என்னவரின் பெருமிதத்தில் அக்கறை காட்டாது போயிருந்தேனேயானல், நான் என்ன கற்புடையவள்? புகழ்ச் சொல், பெண் தன் மட்டில் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பது மட்டுமா இக்குறட்பாவின் குறிக் கோள்? தன் கணவனிடத்துப் பிழை காணி னும், கற்புடை மனையாள் அவனைத் திருத்திட, தங்களுக்குள் எண்ணப் பரிமாற்றமும் உட்பூச லும் கொண்டாலும், பிறர் முன்னிலையில் தன் தலைவனுக்கு இழுக்குச் சொல் ஏற்படுத்தா மல் அவன் புகழ் காத்தல் தலைவிக்கு உற்ற தர்மம் என்பதுவும் அன்றோ அங்குக் காட்டப் பெறும் பண்பாடு! இத்தன்மை இருந்ததால் தானே, பின்னர் மாண்டு கிடந்தபோழ்து அவர் மேல் வீழ்ந்தவளாய் ஒரு கணத்தில் உயிர் நீந்தேன்!

ஆனல், அவரே உணர்ந்தார் சீதைபால் தான் கொண்ட ஆசையினல் ஈது (இந்திரசித்தன் வதை) விளைந்தது என்று. அக்கணமே அவளை நஞ்சென வெறுத்தார். அவளைக் கொன்றிட வும் எண்ணிப் புறப்பட்டு விட்டார்! இதனைத் தாங்கள்,

''என்று அழைத்து இரங்கி ஏங்க, 'இத்துயர்
நமர்கட்கு எல்லாம்
பொன் தழைத்தனைய அல்குல் சீதையால்
புகுந்தது' என்ன,
'வன் தழைக் கல்லின் நெஞ்சின் வஞ்சகத்தாளை,
வாளால்
கொன்று இழைத்திடுவென்' என்ன, ஓடினன்,
அரக்கர்கோமான்

(1435/54) .

எனப் பாடியுள்ளீர்! மகோதரன் தடுத்திரா விட்டால் கதையே மாறியிருக்குமே!

''மங்கையை வாளால் சங்கை ஒன்றுஇன்றிக் கொன்றல் 'குலத்துக்கே தகான்-சிறியன்' என்று எல்லோரும் ஏளனமாய்ச் சிரிப்பார் களே'' என்று அவன் கூறியதை எண்ணிப்

பார்த்தார், வீரப் பெருமிதமும், மான உணர்வும் கொண்ட என் மணாளர்! (1435/58). இந்த உணர்வும், இயற்கையாய் அவருக்கிருந்த இறுமாந்த நிலேயுமே அவரை, தொடர்ந்து சீதையை விட்டிடாப் பிடிவாதப் பிடிப்பில் நிறுத்தி, ஓயாச் சண்டைக்கு ஆளாக்கியதே அன்றி, அவள்பால் ஏற்பட்ட ஆசை தொடர்ந்து நீடிக்க வில்லே! செம்மாப்புக் கடல் எனப்படுவர், உலக அழிவுக் காலம் மாறிடினும் தன் பெருமிதத்திலிருந்து மாருதவர் என்பதற்கு உருவாய் நின்றவ ரன்ருே என் கணவர்! (திரு. 99/7)

இந்த, மான உணர்வு கொண்ட என் மணாளர்க்குத் தம்பியாகத் தோன்றினுரே வீடணர்! அவருடைய வாழ்க்கை முறைகளைப் பற்றியோ, தனக்குப்பட்ட நியாயத்தின் வழி நின்று இராமனிடம் அடைக்கலம் புகுந்தது பற்றியோ நான் இங்கு விமர்சிக்க விரும்பவில்லே. ஆனுல், கொழுந்தன், பாசத்தால் குழந்தைக்குச் சமானம் என்பதையும் மறந்து அவரை நான் தூற்ற வேண்டியுள்ளது! ஆம், கசாப்புக் கடைக் காரனே விட இழிவான செய்கையைத் தூண்டுவித்த அவரின் கயமை கண்டு கனல்கின்றேன்.

''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்
ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்'' (திரு. 8/1)

என்பதன்ருே தெய்வப் புலவர் திருவாக்கு. அதற்கு நேர்மாருக அமைந்ததே அவர்தம் செய்கைகள் எனக் குமுறுகின்றேன்.

இந்திரசித்தனும் இலக்குவனும் போர் புரிந்திருந்தபோழ்து தமையனின் தனயன் தோற்று இறந்தொழிதற்கான வழிவகைகளைக் காட்டியவர் வீடணரன்ருே! தான் தோன்றிய குடியை ஆள்கின்ற தன்மையைத் தன் உரிமை ஆக்கிக் கொள்வதே ஒருவர்க்குச் சிறந்த ஆண்மை (திரு. 103[6) என்ற தத்துவத்தைக் கடைப் பிடிக்கத் தன் குடிப் பிறந்தாரை ஒவ்வொருவராகக் கொல்வித்து, தான் பிறந்த அரக்கர் குடியின் ஆட்சியைத் தான் ஏற்றிடும் வகை போலும்! பற்பல கோடி பெறுவதாயினும் தம் குடியில் பிறந்தவர்க்குக் குறை ஏற்படும் செயல்களைச் செய்யக் கூடாது என்ற பண்பாடு மட்டும் (திரு. 96/4) தெரியவில்லே போலும், வீடணர்க்கு!

இந்திரசித்தனின் தலேயைக் கண்டு அவனைக் கொல்ல வீடணர் கையாண்ட முறைகளைத் தெளிந்து அவரை இராமன் வஞ்சப் புகழ்ச்சியாய் ஏத்தினுன்! தன் தம்பியை 'ஆடவர்திலக!' என்று விளித்தான், ஆண்மையின் தன்மை முன் நின்று போர் புரிவதே யன்றிப் பின் நின்று வஞ்சகமாய்ச் செயல்படுதல் அன்று என மறை முகமாய் மொழிந்ததாயிற்று! 'இது நடந்தது நின் ஆண்மையால் அன்று; அனுமனுல் அன்று; தெய்வ அருளால் அன்று; வீடணன் தந்த வென்றி ஈது' என்று வீடணர் கையாண்ட வஞ்சகச் சூழ்ச்சியால்தான் எனக் கூருமல் கூறினுர்!

இத்துணையும் ஏன் எடுத்துக் கூறினேன்? 'வீடணன் ஐந்தாம் படையன்; துரோகி; கருங்காலி' என்றெல்லாம் முழக்கி, அவரைத்தாக்குகின்றனரே அதற்குத் துணையாக யான் கூற வில்லே; 'உட்பகை மூண்டு விட்ட குடியானது அரத்தால் அராவப் பெற்ற பொன்னேபோல் உட்பகையால் தேய்க்கப்பட்டு, வலிமைகுன்றி விடும் (திரு. 89/8) என்ற கருத்திற்கும், 'உட்பகை ஓர் எள்ளின் பிளவு அளவே சிறிதாகத் தோன்றினுலும்கூட அஃதே பெருங்கேட்டை உண்டாக்கும்' (திரு. 89/७) என்னும் கருத்திற்கும் எடுத்துக் காட்டாகி நின்ருரே என்றதனைக் கண்டு கொண்ட வியப்பாலேயே இவ்வளவும் கூறினேன்! இந்த உட்பகைத் தன்மையாலன்ருே, ஒரு தாய் தந்தையர் தம் தனயன் போரில் வீர மரணம் எய்தியதற்காக இன்றேனும் அவனின் தலேயையும் காண முடியாத நிலேயில் எத்துணே ஏமாற்றமும், ஏக்கமும், துயரமும் கொள்வர் என்ற மனேநிலேயை எண்ணிப் பாராமலேயே இந்திரசித்தனேக் கொலே செய்வித்து விட்டார் என்று காட்டவே இவ்வளவும் கூறினேன்!

குடிமை காக்கும் குலப் பெண்ணுய், வேறு தெய்வங்களைத் தொழாது, கணவனேயே தெய்வமென வணங்கி (திரு. 6/5), மன அமைதியோடு வாழும் நற்பெண்டிரின் வழியில் வந்ததால் அன்ருே, இலங்கை அரண்மனேயில் முதலில் புகுந்து சீதையைத் தேடிய அனுமனே நான் உறங்கும் போழ் திருந்த எரி மணி விளக்கங்கள் எழில் பின்னிட்டுக் கெடும்படிக்கான என்முகப் பொலிவு கண்டு 'இவளே சீதைபோலும்!' எனச் சற்று மயங்கி நின்ருன் எனத் தாங்கள் பாடியுள்ளீர். (796/199).

கற்பின் உச்ச நிலைக் காட்சியாக, என் கணவர் மாண்டு கிடப்ப அவர்மேல் விழ்ந்து புலம்பிப் பெருமூச்சு விட்டு அக்கணத்திலேயே உயிர் நீத்தேன் எனப் பாடியுள்ளீர். அந்த வகையில் கற்பின் கனலி சீதையோடு ஒப்பிட்டுப் பேசுகின்றனர், இலக்கியப் பிரியர்கள் என்பது வும் உண்மைதான்!

ஆனால், யான் இறந்து பட்டு என்னுருயிர் நாயகனின் ஆவியைத் தொடர்ந்தேன். என் இதயப் பிரியரான அவரோ இந்தக் கடைசி கட்டத்தை வைத்துத் தான் என்னைக்கோபித்து விரட்டுகின்றார்! காரணம் புரியாமல் திகைத் தேன்! ''என் உடல்மேல் விழ்ந்து நீ பன்னிப் பன்னிப் பகன்றது என்னே? என் வீரத்தை இழித்து, மானுடனுக்குப் பெருமை சேர்த்து, அவனின் இல்லாள் பெயர் கொண்டு என்னை ஏளனப்படுத்தி அல்லவா அழுதுள்ளாய், கம் பன் காவியத்தின்படி! கொண்ட கணவனை இழிவுபடுத்தியவட்குக் கற்பின் பெருமை வேறு உளதோ?'' என்று சினந்து விரட்டுகின்றார்!

அவர் சினத்தின் அடிப்படைக் காரணத்தை ஒருவாறு தெரிந்து கொண்ட பின்னர்தான், நான் அழுது அரற்றியதாய்த் தாங்கள் என்ன பாடியிருக்கின்றீர்கள் எனத் துருவிப் பார்த் தேன். அவர் ஆத்திரத்திலும் நியாயம் இல் லாமலில்லையெனத் தெளிந்தேன்!

வெள் எருக்கஞ் சடை முடியான் வெற்பு எடுத்த
திருமேனி, மேலும் கீழும்,
எள் இருக்கும் இடம் இன்றி, உயிர் இருக்கும்
இடன் நாடி, இழைத்த வாறோ?
''கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும்'' எனக் கருதி, உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி? (1539/237)

என்ற பாடலிலும்

'ஆரம்போர் திரு மார்பை அகல் முழைகள்
எனத் திறந்து, இவ் வுலகுக்கு அப்பால்
தூரம் போயின, ஒருவன் சிலை துரந்த
சரங்களே; போரில் தோற்று,
வீரம்போய், உரம் குறைந்து, வரம் குறைந்து,
வீழ்ந்தானே! வேறே கெட்டேன்!
ஓர் அம்போ, உயிர் பருகிற்று இராவணனை ?
மானுடவன் ஊற்றம் ஈதோ!
(1539/238)

என்ற பாடலிலும் உள்ள செய்திகள் என் வாயால் வருவன அல்லவே அல்ல.

'வெள் ளெருக்கஞ் சடை முடியனை சிவ பிரானின் மலையாகிய கயிலையைப் பெயர்த்த வலிமை கொண்ட திருமேனியனே!' என்ற சுட்டு என் மனத்திற்கு ஒத்ததே, என் கணவரின் தோள் வலிமையில் எனக்கிருந்த பற்றுதலாலும் பெருமிதத்தாலும். ஆனால், 'அவ்வுடலுள் இராமனின் அம்பு, தேன் பொருந்திய பூ வணிந்த கூந்தலை யுடைய சீதையை அவர்தம் மனச்சிறையில் கொண்ட காதல் உள்ளே பதுங்கியிருக்குமோ என எண்ணி, தடவிப் பார்த்தது என்பதை ஒப்ப மாட்டேன். அவ் வாளி என் நாயகனின் உயிர் இருக்கும் இடத் தைத் தேடி மேலும் கீழும் பாய்ந்தது என்ப தனையும் ஒப்பவே முடியாது!

நான் முன்னமேயே குறிப்பிட்டுள்ளேன், 'இந்திர சித்தன் இறந்து கிடந்த போழ்தே அவர் சீதையால் வந்த வினை ஈதெல்லாம் என்று அவளை மாய்க்க ஓடின போழ்தே அவருக்கு அவள்மேலிருந்த ஆசை மாறி, பிடிவாதம் கலந்த அகம்பாவத்தால்தான் அவளைத் தொடர்ந்து சிறையிலேயே வைத்திருந்தார் என்று. அந்த வெறுப்பும் படிப்படியாய்த் தோன்றியதே! அக்க குமரன்—அவன் பின் அதிகாயன் ஆய தன்மக்கள் இறந்து பட்டதுமே பெண்மையின்மேல் வெறுப்புக் கொண்டு, 'பெண் எனும் பெயர் உள்ள எல்லாவற்றையும் அடித்து வீழ்த்துவேன்' என்று (1247/264) அவர் கூறிய வஞ்சினத்தில் 'சீதையால் வந்த வினையல்லவோ ஈதென்ற சினம் தோன்றியது ஒலித்ததே யன்றி, தனித்து அவளைக் குறிப் பிட்டுக் குறைப்படவில்லை. ஆனால், இந்திர சித்தன் இறந்த போழ்தோ, பொதுமை மறைந்து, சீதைப் பெண்ணானையே கொல்வ தாகப் புறப்பட்டார் என்னில் அவள்மேலிருந்த ஆசை மாறி வெறுப்புத் தோன்றி விட்டது என்பது தெளிவாகவில்லையா? அப்படிப் படிப் படியாக வளர்ந்த வெறுப்புணர்ச்சி மாறிப் பழைய ஆசை யுணர்வு அவர்பால் தோன்றியது —அதிலும், தொடர்ந்து யுத்த களத்திலேயே, போர்ச் சூழலிலேயே இருந்தவரிடத்துத் தோன்றியது—என்பது என்மனத்திற்கு ஒப்ப வில்லை. அதனால், அவர் இறந்த ஞான்று அவ ருள்ளத்தில் சீதையின் ஆசை உணர்வு இருக்க ஏதுவில்லை; எனவே, அவ்வாசை உள்ளே இருக் கின்றதோ என்று இராமனின் அம்பு தேடிய தாகக் கற்பனை செய்வது பொருந்தாது.

இராமன் இறுதியில் எய்த அயன்படை அவரின் மார்பில் புக்கு, ஓடி, உயிர் பருகி, புறம் போயிற்று (1531/196). அங்ஙன்போய வாளி, வாழ்த்துரைத்து வானவரும், அந்தணரும், முனிவர்களும் இட்ட மலர் மாரி தொடரப்போய், பாற் கடலில் தூய நீராடி அவருடைய குருதிக் கடலின் மேலே உயரச் சென்று அந்த இராமனின் அம்பருத் தூணியில் நுழைந்தது. இந்தக் காட்சியை மறந்து, அந்த வாளி என்னவரின் உடலுள் மேலும் கீழுமாகத் தாவித் தாவி அவர் உயிரைத் தேடியது என்று சொல்வது எப்படி உண்மையாகும்?

இனி, 'போரில் தோற்று, வீரம் போய் உரம் குறைந்து, வரம் குறைந்து வீழ்ந்தார்' என்பதையும் என்னல் ஒப்புக் கொள்ள இயலாது.

இராமனேடு பொருத போழ்தில் புறமுதுகு காட்டி அவர் ஓடியிருந்திருப்பாரேயானல் போரில் தோற்றதாய்க் கொள்ளலாம்! கடைசி வரை விரோதியை எதிர்த்து நின்றவரை எவ்வாறு 'போரில் தோற்ருர்' என்னலாம்? வென்றி இரு பக்கலிலும் இருந்திட ஏலா தன்ருே! அவரைப் பொறுத்த வரையில் இராமனின் அம்பையேந்தி வீர மரணம் எய்தினர், அல்லவா! அவர் வீழவும், இராமன் தேரினின்றும் அவர் பக்கல் வந்து,

போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப் போர் வீரரை (அவர் பொருது வீழ்ந்த சீரினை— அன்ருே நெஞ்சம் உவப்பப் பார்த்து நின்ருர்! (1532/201). இறந்து பட்ட அவரின் முகம் முன்னை வீரப் பொலிவினும் மும்மடங்கு பொலிந்தன, அல்லவா! (1532/199). ஆக, 'வீரம் போய்' என்னலும் ஏற்புடைத் தன்று, வீரம் அவர் ஆவியுடன் அடங்கி நின்ற தன்மையால்.

அவரின் முதுகில் புண் கண்ட இராமன், 'இவன் எதிர் குறித்த போரில் பின்றியான் முதுகில்பட்ட பிழம்பு உள தழும்பால் உரம் குன்றியவன் ஆயினனே' என்ருன். (1533/205). அப்போழ்து விடணர் 'அத்தழும்புகள் புறமுதுகு காட்டியதால் ஆயவை அன்று; அஷ்ட திக்கு யானைகளுடன் என் தமையன் மோத, அந்த யானைகளின் கொம்புகள் அவரின் மார்பில் பாய்ந்து ஒடிந்து நின்றன. (1534/210) அன்று அனுமன் அவர் மார்பில் (அவர்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி) ஒரு குத்துவிட அக்கொம்புகள் அவர் முதுகுப்புறம் வெளி வந்தன. அதனல் ஏற்பட்ட தழும்புகளே அவை. (1534/211) மேலும் தங்கள் பத்தினி மேல் அவர் கொண்ட ஆசை யென்னும் நோயும், தங்கள் சீற்றமும் அன்றி அவரை வெல்ல வல்லார் யாரே?'' (1534/209) எனக் கூறி அவர் உரத்தின் வன்மையை இராமனின் நெஞ்சகத்தே நிலை நிறுத்தி யுள்ளார்! எனவே, 'உரம் குறைந்து' என்ற சொல்லிற்கும் ஆங்கே உரமில்லை!

அவருக்கும் இராமனுக்கும் நடை பெற்றுக் கொண்டிருந்த பெரும் போரினுக்கிடையே ஒரு நாள் அவர் இராமனை வியந்தார்!

''சிவனே? அல்லன்; நான்முகன் அல்லன்;
திருமாலாம்
அவனே அல்லன்; மெய் வரம் எல்லாம்
அடுகின்ருன்;
தவனே என்னின், செய்து முடிக்கும் தரன்
அல்லன்:
இவனேதான் அவ்வேத முதல் காரணன்?'
(1522/134)

எனப் புரிந்து கொண்டார். அதன் பின்னும் இராமனின் மனையாள் மேல்—சீதையின் மேல்-ஆசையென்பது தொடர்ந்து நீடித்திருக்க முடியுமா? வேத முதல் காரணன் என்று உணர்ந்த பின்னும், தன்னுசை மாறிய பின்னும் சீதையை இராமன்பால் விட்டிடாது அவரோடு பொருதார் என்னில் அவரின் வீரப் பெருமிதம் மட்டும் தோன்றவில்லை; பெற்ற வரங்கள் எல்லாம் பயனற்றுப் போய் வீழ நேரினும் அவ்வேத முதல் காரணன் 'கையால் அவ்வீழ்ச்சி நிகழட்டுமே என்ற எண்ணமும் தோன்றியது போலும்! அஃதேபோல், இராமன் அம்பே பட்டு அவர் வீர சுவர்க்கம் எய்தினர்! (1522/135). ஆக, இருந்த வரங்கள் எல்லாம் போயினும் அந்த இராமனின் வரம்— அவர் கேளாமலேயே கிடைத்த வரம்—சிறந்த தன்ருே? எனவே, 'வரம் குறைத்து' என்ற சொல்லும் பொருளற்ற தாகின்றது!

''தேவர்க்கும், திசைக் கரிக்கும், சிவனர்க்கும்,
அயனுர்க்கும், செங்கண் மாற்கும்,
ஏவர்க்கும், வலியானுக்கு என்று உண்டாம்
இறுதி?'' என ஏமாப்புற்றேன்;

ஆவற்கண் நீஉழந்த அருந்தவத்தின்
பெருங்கடற்கும், வரம்என்று ஆன்ற
காவற்கும், வலியான்ஓர் மானுடவன்
உளன்என்னக் கருதி னேனே? (1540/240)

என்ற பாடலின் முடிவில் ''மானுடவன் உளன்'' என்றும்,

''ஆர்அனேர், உலகுஇயற்கை அறிதக்கார்?
அவைஏழும் ஏழும் அஞ்சும்
வீரனர் உடல்துறந்து, விண்புக்கார்;
கண்புக்க வேழ வில்லால்,
நாரநாள் மலர்க்கணையால், நாள்எல்லாம்
தோள்எல்லாம், நைய எய்யும்
மாரனர் தனிஇலக்கை மனித்தனர்
அழித்தனரே, வரத்தி னலே!'' (1540/242)

என்ற பாடலின் முடிவில் ''மனித்தனர்'' என்றும் சொல் அமைந்துள்ளதுகூட அவரின் சினத்தின் வெளிப்பாடுதான்.

''சிற்சில சமயங்களில் இந்தக் கவிஞர்கள் தங்கள் கருத்துக்களையெல்லாம் பிறர் வாயிலாகக் கூறி உறுதிப்படுத்த முயல்வர். அதிலும் நம் காவியத்தைப் பாடியிருப்பவரோ கவிச் சக்கரவர்த்தி ஆயிற்றே! எந்த அளவிற்குத் தாம் எண்ணியவற்றை உறுதிப்படுத்த வேண்டுமோ அந்த அளவிற்கு ஏற்ற உயர்ந்த பாத்திரமாக—தங்களின் அன்பு மனைவி என்ற நோக்கில்—என்னைத் தேர்ந்தெடுத்துப் பாடிவிட்டார்! நான் பிழையற்றவள் என்று மன்றுடினேன்.

''பலே! உன் கற்பனை கவிச்சக்கரவர்த்தியின் கற்பனைகளையும் மிஞ்சுகின்றதே! நீ சொல்வதை நான் நம்ப வேண்டுமோ!'' என அவர் ஏளனம் செய்தார்.

''இல்லை சுவாமி! அவலச் சூழ்நிலைகள் எல்லாவற்றிலும் கவிச்சக்கரவர்த்தி பாடியிருக்கும் பாங்கினைப் பாருங்கள், புரியும்! தன் கணவன் தயரதன் மாண்டு கிடந்த போழ்து கோசலை அழுததையும் (312/67 & 68), தயரதன் மாண்ட செய்தியை அவரின் பிள்ளைகள் வாயிலாகத் தெரிந்துகொண்டவுடன் சடாயு அழுததையும் (437/21-23), வாலி வதையுண்டு கிடந்த போழ்து தாரை அழுததையும் (647/164-176), நம் செல்வன் இந்திரசித்தன் இறந்து கிடக்க நான் அழுததையும் (1434/47-51), தங்கள் ஆவி பிரிந்த பின்றை, தங்கள் தம்பி வீடணர் வந்து அழுததையும் (1535/218-224), இறந்தவர்களை முன்னிலைப்படுத்தியே பாடிய கவிச் சக்கரவர்த்தி, தங்கள் மேல் வீழ்ந்து நான் அரற்றியதை மட்டும் (1539/236-242) முற்பகுதியைப் படர்க்கையில் வைத்துப் பாடியுள்ளார் என்பதைக் கவனித்தீர்களா? அப்பகுதியெல்லாம் முழுக்க முழுக்கத் தம் கருத்துக்களும் சொற்களுமாகப் பெய்து, நான் என் வாயால் பாடிய பிற்பகுதியை முன்னிலையில் எழுதிவிட்டார்! நான் தங்களை ஒரு கணமேனும் மறந்திருந்தால் அல்லவா படர்க்கையில் பாடியிருக்க முடியும்! நானே, தங்களை 'நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினள்' எனக் கவிச்சக்கரவர்த்தியே சாட்சியம் கூறியுள்ளாரே! (1537/226) எனவே, தாங்கள் என்னைத் தவருக நினைக்க வேண்டாம்'' என்று மறுபடியும் மன்றுடிக்கொண்டே யிருக்கின்றேன்.

கல்விக் கடலே! கவிச் சக்கரவர்த்தியே! கம்ப நாட்டாழ்வாரே! ஏனே என்னை இந்நிலைக்காளாக்கி விட்டீர்! 'மாபெரும் புகழ் மண்டோதரி—கற்புக்கரசி—மணாளன் மாய்ந்தது கண்டு மனம் பொருது உயிர் நீத்த உத்தமி' என்றெல்லாம் உலகோர் ஏத்தும் வகையில் காவியம் அமைத்து, என் ஆருயிர் நாயகன் என் கற்பினில் களங்கம் காட்டிச் சினக்கும் வகையில் சொற்களைப் பெய்து என்னைத் துயர்க்காளாக்கி விட்டீரேயென மறுகுகின்றேன்! மகிழ்வேற்கும் வகை ஏதோ எனத் திகைக்கின்றேன்.

பெருங்காப்பியத்தின் இலக்கணப்படி தன்னேரில்லாத் தலைவனும், தலைவியும் அமைதல் வேண்டும். காவிய நாயகனை இராமனுக்கு இணையாக—ஆழப் பார்த்தால், 'இலங்கேசுவரன், இராவணேசுவரன்' என்றெல்லாம் புகழ் பெறும் மேல் நிலையராக—என் கணவர், காப்பியத்தே மற்றொரு பெருந்தலைவராய்ச் சிறந்திருந்தாலும், இராமனுகிய காப்பியத் தலைவனின் மனைவி சீதையைக் கவர்ந்து வந்த காரணம் கொண்டு, களங்கம் காட்டி, நிலையைக் குறைத்து, இராமனைத் தன்னேர் இல்லாத் தலைவனாக்கிவிட்டீர்! ஆனல், நான் சீதைக்கு நிகரான ஒரு பெருந்தலைவியாகவே காட்சியளித்துள்ளேன் காவியம் முழுதும்!

காப்பியத் தலைவி சீதையின் கற்பினையே சந்தேகிப்பவன் போலே இராமன் அவளைத்

தீக்குளிக்கச் செய்துவிட்டான்! அதனால், என்னுடைய சீர்மை அவளினும் மேம்பட்டு விட்டது! என்றாலும், அவளைக் காப்பிய மரபுப் படி தன்னேரில்லாத் தலைவியாக நிறுத்த வேண்டுமே என்பதற்காக, என் கணவரும் என் கற்பின் தன்மையில் களங்கம் காணும்படி பாடி விட்டார் போலும்! இதனால், நானும் சீதையும் ஒரு நிலையினராகத் தோன்றுகின்றோம்! ஆனா லும், அவள் தீக்குளித்துத் தெளிவித்துவிட் டாள் தன் கற்பை. எனக்கோ அந்த வாய்ப் பும் இன்றி மாளச் செய்துவிட்டார்! அதனால், அவள் என்னிலும் மேம்பட்டவளாய்க் காட்சி தர, அவளைத் தன்னேரில்லாத் தலைவியாக நிறுத்திவிட்டார்!

தங்கள் காவியம் திக்கெட்டும் பரவட்டும். அதனை ஆழப்படித்து, என் கணவர் கொண்ட ஐயம் போன்றே என்மேல் ஐயம் கொண்டிருப் போர் என் விளக்கங்களைப் புரிந்துகொண்டு என்னைக் குற்றமற்றவளாய் ஏற்றுக்கொள்ளட் டும். அதுவாகிலும் எனக்கு—என் மனத்திற்குச் சாந்தி அளிக்கட்டும்!

அவன் தம்பி

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை

தமிழ்நாட்டில் 'அவன்தம்பி அங்கதன்' என்னும் வாசகம், நெடுங்காலமாக வழங்கி வருகின்றது. அங்கதன் என்பவன் வாலியின் மைந்தன். அவனுக்கு அண்ணன் ஒருவன் இருந்ததாக வாலியின் சரித்திரம் கூறவில்லை. அவ்வாறாயின் அவன்தம்பி அங்கதன் என்ற பழமொழியின் கருத்து யாது? எவன் தம்பி அங்கதன் என்னும் கேள்வி இயல்பாகவே எழுகின்றது? வானரநாட்டு அரசனாக வீற்றிருந்த வாலி இராமபாணத்தால் அடியுண்டு இறக்கும்போது அங்கதன் பாலப்பருவம் உடையவனாய் இருந்தான், என்று கம்பர் வாக்கால் அறிகின்றோம். இறக்கும் தறுவாயில் வாலி தன் மைந்தனை அருகே அழைக்கின்றான். இராமனை முழுமுதற் பொருளென்று அவனுக்கு அறிவுறுத்துகின்றான்.

'பாலமை தவிர்நீ என்சொல் பற்றுதியாயின்
மைந்தா''

என்று உபதேசித்தான். ''அங்கதா! இன்னும் சிறு பிள்ளையாயிராதே! நான் சொல்வதை நன்றாய்க் கேள்! தலைக்குவமையில்லாத தலைவனே, நாம் செய்த தவத்தின் பயனாகக் கையில் வில்லைத் தாங்கித் தாள் தரை தோய நின்று, நம் கண்ணுக்கு எளியனாய்க் காட்சி தந்தான். அவனே மெய்ப்பொருள், பிறவியென்னும் பெருநோயை மாற்றும் மருந்து அவனேயாவன் ஆதலால் அவன் இணையடி தொழுதலே ஏற்றதாகும்'' என்று உருக்கமாக உரைத்தான். அப்பால் அண்மையில் நின்ற இராமனை நோக்கி,

''பொய்யடை உள்ளத்தார்க்குப் புலப்படாப்
புலவ மற்றுன்
கையடையாகும்'' என்று காட்டினான்

''என் மைந்தனாகிய அங்கதன் உன் அடைக்கலம் என்று ஒப்புவித்தான். கருணையின் நிலயமாகிய இராமன் அங்கதனை அடைக்கலமாகப் பெற்றுக்கொண்டான். அதற்கு அடையாளமாக உடைவாளை நீட்டி அதைத் தாங்கும்படி அங்கதனைப் பணித்தான். அவ்வுடைவாளை அங்கதன் பிடித்தான். அந்நிலையில் மனக்கவலை தீர்ந்த வாலி உயிர் துறந்து', தனக்குவமையில்லாத இறைவன்தாள் சேர்ந்தான். அன்று முதல், அங்கதன் அடைக்கலப் பொருளாக அமைந்தான். ''தந்தைசொல் மிக்க மந்திரமில்லை'' என்று உணர்ந்த அங்கதன் இராமன் அடிபணிந்து வாழ்ந்து வந்தான். அங்கதனிடம் இராமன் வைத்திருந்த அன்பும் ஆர்வமும் வெளிப்படுவதற்கு ஒரு சமயம் வாய்த்தது. இலங்கையைச் சூழ்ந்திருந்த கருங்கடலில் அணைகட்டி வானரசேனையும், வீரர்களும் அரக்கர் நாட்டை அடைந்தார்கள். காடும் கரையும் கடந்து பகைவர் நாட்டை அடைந்த பின்னரும், செம்மனம் படைத்த இராம வீரன், இராவணனிடம் ஒரு தூதனுப்பிச் சீதையைப் பெறும் வழியை நாடினான். அக்கருத்தைச் சுக்ரீவனும், விபீஷணனும் ஆதரித்தனர். ஆயினும் இலக்குவனுக்கு அது பிடிக்கவில்லை. அரக்கர் கோன் கொடுமையினும் அஞ்சனவண்ணன் கருணை அவனுக்கு ஆறாத் துயர் விளைத்தது. பொறுமையே உருவாய் அமைந்த தமையன் முன்னே பொங்கியெழுந்தான். இராவணன் செய்த கொடுமைகளையெல்லாம் அடுக்கிக் கூறினான்.

''தேவியைச் சிறையில் வைத்தான்......
செல்வான்''

இவ்வளவு தீமை செய்த பாவியைக் கொல்லாது இன்னும் அவன்பால் தூது அனுப்ப விரும்பலாமா? சீதையை விட்டுவிட்டால் அவனை உயிரோடிருக்க விடலாமா? என்று வேகமாகப் பேசினான். இலக்குவன் பேசிய வாசகத்தை இராமன் பொறுமையோடு கேட்டு அமைதியாக மறுமொழி கூறினான்:

''அயர்த்திலன் முடிவும் அதுவே...
கருணையும் நிலயம்மன்னன்'

அருளின் நிலயமாய் விளங்கிய இராமன் அறப்போர் முறையினை இவ்வாறு எடுத்துரைத்தான். புயவலி படைத்தோரேனும் பொறையொடும் பொருந்தி வாழ்தலே அறத்துறை என்று இராமன் அருளிய வாசகம், உலகம் உள்ளளவும் உண்மையான திருவாசகமாகும். ''பொறுத்தார் பூமியாள்வார், பொங்கினர்

காடாள்வார்'' என்னும் வாசகம் இதைத் தழுவியே எழுந்ததாகும்.

பகை வேந்தனிடம் தூதனுப்புவதே முறை என்று துணிந்த பின்னர் யாரைத் தூதனுப்ப லாம் என்னும் கேள்வி எழுந்தது. எல்லோரும் அனுமனையே எண்ணினுர்கள். முன்னொருமுறை தூது சென்று, மாற்ருர் நகரத்தைச் சிதைத்து மீண்ட மாருதியின் பெருமை யாவர் கருத்தி னும் நிறைந்து நின்றது; ஆயினும் ஒருமுறை பகைவர் நாட்டுக்குத் தூது சென்ற மாருதியை மறுமுறையும் அனுப்ப இராமன் மனம் இசைய வில்லை.

''மாருதி இன்னும் செல்லின் மற்றிவனன்றி
வாந்து சாலுதல் வலியாரில்லை.. என்பது சாலு
மன்றே!''

என்று இராமன் கருதினுன். மாறி மாறி மாருதி ஒருவனே தூது சென்ருல் அவனையன்றி வேறு சொல்லவல்லார் இல்லையென்று அரக்கர் என் ணக்கூடுமாதலால் மாருதி செல்ல வேண்டாம்; மற்ருெரு வீரனே செல்ல வேண்டுமென்று இராமன் எண்ணினுன். அந்நிலையில் யார் இனி ஏகத்தக்கார் என்னும் கேள்வி எழுந்தது. அரக்கனைக் காண்பதற்கு அனுமனுக்கு அடுத்த படியில் அமைந்தவன் அங்கதனே என்று, தன் கருத்தைப் பலமாக எடுத்துரைத்தான்.

''யார்இனி யேகத் தக்கார் அங்கதன் அமையும்
ஒன்னுர் வீரமே விளைப்ப ரேனும் தீதின்றி
மீள வல்லான்.''

என்று தன் கருத்திற்குக் காரணம் காட்டினுன். மாருதி தூது சென்றபொழுது, மாற்ருர் அவனை ஒடுக்க முயன்ருர்கள். அவன் வாலிலே தீயை வைத்தார்கள். அத்தகைய கொடுமைவாய்ந்த அரக்கர்கள். இன்னும் தூது செல்பவனைத் துன்புறுத்தக்கூடும். அவ்விதம் ஒறுத்தாலும், மீண்டு வரும் ஆற்றல் அங்கதனிடம் உண்டு; ஆதலால் அவனே செல்லுவதற்கு உரியவன் என்று துணிந்தான்.

அங்கதனை அழைத்தான். அப்பா, நீ அரக்கனி டம் சென்று 'தேவியை விடுகின்ருனு! அன்று ஆவியை விடுகின்ருனு' என்று இரண்டி லொன்றை அறிந்து வா'' என்ருர். அம்மொழி கேட்ட அங்கதன் உள்ளம் மகிழ்ந்தான், துள்ளி எழுந்தான்.

''மாருதி அல்ல ஞகில் நீஎனும் மாற்றம்
பெற்றேன்
யார்இனி என்னே டொப்பார் என்பதோர்
இன்ப முற்ருன்.''

என்று அங்கதன் பெற்ற இன்பத்தைக் கம்பர் அழகுற எழுதிக் காட்டினுர். மாருதிக்கு அடுத்த படியில் அமையும் பேறு பெற்றவன் நானே என்ருன், என் ஐயன். என்னை ஒப்பார் இனி யாருளர், என்றெண்ணி அங்கதன் அளவிறந்த மகிழ்ச்சி அடைந்தான். இலங்கை வேந்தனிடம் சென்ருன். அவன் புயவலியும், படைவலியும் கண்டு சிறிதும் அஞ்சாது அவன் கண்ணெதிரே போந்து நின்ருன். இலங்கை அரக்கர்கள் அஞ்சி நடுங்கினுர்கள். அனுமனே மீண்டும் வந்தான் என்று அலறி ஓடினுர்கள். அரக்கன் தன் முன்னே நின்ற வீரனை நோக்கி, நீ யார்? என்று சீற்றமுற்று வினவினுன். அப்பொழுது தன்னை ஆளும் தலைவனுகிய இராமன் பெரு மையை அங்கதன் பேசலுற்ருன்.

''பூதநாயகன் நீர்சூழ்ந்த புவிக்கு நாயகன்
அப்பூமேல்
சீதநாயகன்
தூதன் வந்தேன் என்ருன்''

இம்மொழிகளைக் கேட்டபோது இராவணன் குலுங்க நகைத்தான். இராமனை ஏளனம் பேசி னுன். அந்நிலையில் அரக்கனது இறுமாப்பை அடக்குவதற்கு வாலியின் பெயரே வலிய மந்திரம் என்று அங்கதன் தேர்ந்தான்.

''இந்திரன் செம்மல் பண்டோர் இராவணன்
கலக்கினுன் மைந்தன் என்ருன்.''

இராவணன் என்னும் பெயருடைய ஒருவனை வாலினுல் கட்டி தொங்கவிட்ட வாலியின் மைந்தனென்று, அங்கதன் தன்னை அறிவித்த போது இலங்கைவேந்தன் செருக்கை விட்டு நயந்து பேசத் தொடங்கினுன். முன் தூது சென்ற மாருதி பேசிய முறைக்கும், பின்னே தூது சென்ற அங்கதன் பேசிய முறைக்கும் நெருங்கிய ஒற்றுமை இருக்கக் காணலாம். இராவணன் அனுமனை நோக்கி, ''யார் நீ? உன்னை விடுத்தவன் யாவன்?'' என்று வெடித்த குரலால் வினவியபோது,

''முலமும் நடுவும் ஈறும் உடைத்ததே காலே.
அயோத்தி வந்தான்.''

என்று அழகிய மொழிகளால் தன் தலைவன் திறத்தினை அறிவித்தான். ஆனால் இராவணன் அம்மொழிகளைச் சிறிதும் பொருட்படுத்த வில்லை. அதை அறிந்த அனுமன் வாலியின் பெயரை எடுத்து வழங்கினான். வாலியின் மைந்தன் விடுத்த தூதனென்று தன்னை அறி வித்தான்.

''நன்னுதல் தன்னைத் தேடி
நாற்பெரும் திசையும் தோன்ற
மன்னரில் தென்பால் வந்த
தானைக்கும் மன்னன் வாலி
தன் மகன் அவன் தன் தூதன்
வந்தனன் தனியேயென்றான்.''

வாலியின் பெயரைக்கேட்ட அளவில் இராவணன் மனம் நடுங்கியது. அச்சம் அகத்திலும் முகத்தி லும் தோன்றிற்று. அதை அறிந்த அனுமன் அசதியாடத் தொடங்கினன்.

''அஞ்சலை அடக்க பார்விட்டு அந்தரம்
அடைந்தா னென்?
வெஞ்சின வாலி மீளான் வாலும்போய்
விழிந்த தன்றே.''
என்று பரிகசித்தான்.

இப்பொழுது அங்கதன் இராவணனிடம் எவ் வாறு பேசினான் என்று பார்ப்போம். வாலியின் மைந்தனே தூதனாக வந்தானென்று அறிந்த போது, திகைப்புற்ற இராவணன் ஆசை மொழிபேசி அங்கதனை வசப்படுத்தக் கருதினான்.

''அப்பா! வாலியின் மைந்தனு நீ! உன்தந்தை யும், நானும் சிறந்த நண்பரன்றோ! தந்தையைக் கொன்ற நரனுக்கோ தூதனாயமைந்தாய்! இச்சிறுமையை இன்றோடு விட்டுவிடு! என் மைந்தனாகவே உன்னைக் கருதுகின்றேன்; வாலி ஆண்ட வளநாடு உனக்கன்றோ உரியது. மன்ன வரும் விண்ணவரும் காண உனக்கு யானே மகுடம் சூட்டுவேன்.''

''அன்னரர் இன்று நானே அழிவதற்கு ஐய
மில்லை
உன்னரசு உனக்குத் தந்தேன் ஆளுதி ஊழி
காலம்!''

என்று தாராளமாக இராவணன் வாய்ச் சொல்லை வழங்கினான்.

அதுகேட்ட அங்கதன் மனத்தில் மானமும் கோபமும் எழுந்தன. தன் தலைவனாய இராம னைப் பழித்துரைத்த அரக்கனுக்குப் புத்தி புகட்டக் கருதினான். தூதனாக வந்து அரசனா வது சாலச் சிறந்ததே! அதிலும் நீ கொடுத்து. நான் பெறுவது. மிக நன்றாயிருக்கிறது. நாய் கொடுக்கும் நல்லரசைச் சிங்கம் பெறுவதே இதற்கு நிகராகும்.

''நீதரக் கொள்வன் யானே இதற்கு இனி
நிகர்வேர்
நாய்தரக் கொள்ளும் நல்லரசு என்று
நக்கான்''

இவ்வாறு அங்கதன் இழித்தும் பழித்தும் பேசிய போது இராவணன் மிகுந்த சீற்றம் கொண்டு ''நீ வந்த காரியம் யாது?'' என வெகுண்டு வின வினான். ''தேவியைவிடுகின்றாயோ அன்றி அமர்க் களத்தில் ஆவியை விடுகின்றாயோ என்று அறிந்து வரும்படியாக அருள் இன்னும் விடாத என் தலைவன் அறிந்துவரப் பணித்தான்'' என்று நேர்மையாக, வந்த காரியத்தைச் சொன்னான். அதற்கு இசைந்த மாற்றம் ஒன்றும் இராவணன் உரைத்தான் அல்லன். மூர்க்கனாய அரக்கன் முடித்தலை அற்றபோதன்றி ஆசை அறான் அன்று இராமனிடம் சென்று அறிவித்தான். ஆகவே அவன்தம்பி அங்கதன் என்னும் வாச கம் எவ்வாறெழுந்ததென்று இவ்வரலாற்றால் ஒருவாறு அறியலாகும். பிறப்பு வகையில் அங்கதன் அனுமனுக்குத் தம்பி அல்லன். ஆனால் சிறப்பு வகையில் அவனுக்குத் தம்பி அங்கதனே. அரக்கர் நாட்டிற்கு அண்ணனாய அனுமன் முன்னே தூது சென்றான். தம்பியாகிய அங்க தன் பின்னே தூது சென்றான். அனுமன் அரக் கனை வெல்லும் வகை அறிந்து சொல்லாடினான். அங்கதனும் அவ்வாறே அரக்கனிடம் உரை யாடினான். இருவரும் மாற்றார் கையில் அகப் பட்டு நலியாமல் மீண்டு வந்தார்கள். இன்னும் ஒரு வகையில் அனுமனுக்கு அங்கதன் தம்பியா வான். அமர்க்களத்தில் அனுமன் இராமனைத் தாங்கிச் செல்லும் வாகனமாய் அமைந்தான். அங்கதன் இலக்குவனைத் தன்தோளிலே தாங்கிப் பணி செய்தான்.

இவ்வாறு பலப் பல வகைகளில் அனுமனையே ஒத்த அங்கதன் இறுதிகாறும் இராமனது உய ரிய அன்பிற்கு உரியனாயிருந்தான். அனுமன் தன் பணித்திறத்தால் சிறிய திருவடியென்னும் சிறப்புப் பெற்றான். அங்கதன் தன் பணித்

திறத்தால் அடைக்கலப் பொருள் என்னும் பெருமை பெற்ருன். போர்க்களத்தில் இந்திர சித்தன் விடுத்த பிர்மாஸ்திரத்தால் அடி பட்டுக் கிடந்த அங்கதனை நோக்கி,

''படைக்கலங்களை சுமக்கின்ற பதகனேன்
பழிபார்த்து
அடைக்கலப் பொருள் காத்தவாறு அழகிது
என்று இராமன் அழுதான்''

இத்தகைய அருமை வாய்ந்த அங்கதனும் அனுமனைப் போலவே இராமர் பட்டாபிஷேகத்தில் சிறப்புப் பெற்ருன். அரியாசனத்தை அனுமன் தாங்கி நிற்கின்ருன்; அவன் தம்பி அங்கதன் உடைவாளைக்கையிலேந்தி ஒருபால் நிற்கின்ருன். அங்கதன் கையிலமைந்த உடைவாள் அவன் அடைக்கலப் பொருள் என்பதை அறிவுறுத்து கிறது. அனுமன் அரியாசனத்தைத் தாங்கி நிற்கும் செய்கை அவன் திருவடி என்பதை அறிவிக்கிறது. அன்பர் இருவரும் இங்ஙனம் பணி செய்த பட்டாபிஷேக விழாவில் திரு வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலின் முன்னேர் மகுடத்தை எடுத்து, மாதவனுகிய வசிட்டன் கையில் கொடுத்தனர். அம்முனிவர் மகுடத்தை இராமன் சென்னியில் சூட்டினர்.

''அரியணை அனுமன் தாங்க.......
வசிஷ்டனே புனைந்தான் மௌலி....''

கம்பன் காவிய மாளிகை

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

இந்தியாவின் பெருமையை உலகறியச் செய்கின்றவை, இமயமலையும், தாஜ்மகாலுந்தான் என்றால் அது மிகையாகாது. தாஜ்மகால் என்ற மாளிகையை கண்ணாரக் காண மேல் நாட்டிலிருந்து வரும் கலைஞர்களோ அனந்தம்.

''வல்லவ னாக்கிய சித்திரம் போலும்
வன்மைக் கவிஞர் கனவினைப் போலும்
நல்ல தொழில்உணர்ந் தார்செய லன்றே
நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறக்
கல்லையும் மண்ணையும் பொன்னையுங் கொண்டு
காமர் மணிகள் சிலசிலசேர்த்து''

கட்டிய மாளிகையல்லவா அது? இந்த மாளிகையைப் பார்த்தஓவியநிபுணர்கள் எல்லாம், ''இது என்ன, சலவைக்கல் சித்திரமா? கவிஞன் கண்ட கனவா?'' என்று அப்படியே அதிசயித்து நிற்கிறார்கள். இதே உணர்ச்சிதான் கம்பனது காவியமாகிய இராமாயணத்தைப் பார்த்த போது ரஸிகர்களுக்கு உண்டாகின்றது. கம்பன் தனது காவிய மாளிகையை எவ்வளவு ரசனைச் சுவையுடனும், அழகுணர்ச்சியுடனும் கட்டி முடித்திருக்கிறான் என்று நாம் அப்படியே அதிசயிக்கின்றோம்.

ஆங்கில ஆசிரியர் ஒருவரிடம், ''காவியம் (Epic) என்றால் என்ன?'' என்று ஒருவர் கேட்டார். அவர் சிறிதும் சிரமப்படாமல், ''Epic is a poem written in imitation of Homer's Iliad'' என்று சொல்லிவிட்டார். இதே போலத்தான் தமிழர்களுக்கு நாம் காவியத்தை விளக்க வேண்டியிருக்கின்றது. கம்பனது இராமாயணம் போல் எழுதப்பட்ட ஒரு கவிதையே 'காவியம்' என்று சொல்வதைத் தவிர வேறு காவ்யத்திற்கு இலக்கணம் கூற என்றால் இயலவில்லை.

காவியத்தில் ஒரு வீர புருஷனுடைய கதை சொல்லப்படும். இராம கதையை உலகுக்குத் தந்தருளிய பெரியார் வான்மீக முனிவர். இராம கதை மக்கள் வாழ்வைப் பண்படுத்த ஒரு நல்ல சாதனம் என்று கண்டவர் அவர். கதையையும் நன்றாக அமைத்துக் கொடுத்து விட்டார். அத்தகைய நல்ல அஸ்திவாரத்தின் மேல்தான், தன் காவிய மாளிகையைக் கட்ட ஆரம்பிக்கிறார் கம்பர். வான்மீகரது கதைக்கும், கம்பரது காவியத்திற்கும் ஒரே யொரு வித்தியாசந்தான். அவர் நடக்கிற இடத்திலே இவர் பறக்கிறார். அவர் குளறுகிற இடத்திலே இவர் தெய்வமாக்கவிதை செய்கிறார். அவர் கதை சொல்கிறார், இவர் காவியம் இயற்றுகிறார் (Where Valmiki's Narrative walks, Kamban's Epic flies, Narrative stammers, while Epic talks with the tongues of men and angels.)

இப்படி நல்லதொரு அஸ்திவாரத்திலே எழுப்பப்பட்ட காவிய மாளிகையைக் கொஞ்ச தூரத்திலிருந்தே பார்ப்போம். இந்த மாளிகையைப் பார்த்தவர்களுக்கு எழுகின்ற முதல் உணர்ச்சி அதன் காம்பீர்யம்தான். இமயமலை எவ்வளவு கம்பீரமாக வான் நோக்கி வளர்ந்திருக்கிறதோ, அவ்வளவு கம்பீரத்துடன் கம்பனது காவிய மாளிகையும் காட்சியளிக்கின்றது. மேல்நாட்டு இலக்கியங்களை நன்கு கரைத்துக் குடித்த வ. வே. சு. அய்யர் அவர்கள், ''ஒரு பெருங்காப்பியம் அநேக அவயவங்கள் சேர்ந்ததாயிருப்பினும் ஒரு ஜீவப்பிராணியைப்போல ஓர் தனிப்பிண்டமாயிருத்தல் வேண்டும். தலை, இடை, கடை என்ற பாகுபாடு அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது, 'ஏகம்' என்ற உணர்ச்சியும் அக்காவியத்தில் தோன்ற வேண்டும். ஒவ்வொரு அவயவமும் தன் தனக்கு முன்னேயுள்ள அவயவத்தோடும், பின்னேயுள்ள அவயவத்தோடும் பிணைக்கப்பெற்று ஒன்று என்கிற உணர்ச்சியை வளர்க்க வேண்டும்'' என்று கூறியிருக்கிறார்கள். கம்பரது காவியத்திலே பிரதான சம்பவம் இராவணவதம். பால காண்டம், காவிய சம்பந்தத்தோடு அவயவ சம்பந்தமில்லாது சற்று விலகியே நிற்கின்றது. காவிய மாளிகையின் முன் வாசற்பூஞ்சோலையாக அது மிளிர்கின்றது. இராமன் சீதா சமேதனாய்க் காட்டுக்குப் புறப்படுவதிலேதான் இராவண வதத்திற்கு விதை விதைக்கப்படுகின்றது. அயோத்தியா காண்டத்தைத் தொடங்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பர், காப்புப்பாட்டிலேயே, இதைக் காட்டிவிடுகிறார்.

''வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறத்தும் உளன்என்ப
கோனும் சிறிய கோத்தாயும்
கொடுமையிழைப்பக் கோல்துறந்து
கானும் கடலும் கடந்துஇமையோர்
இடுக்கண் காத்த கழல்வேந்தை''

என்று கூறுவதுதான் அயோத்தியா காண்டத்தின் காப்புச் செய்யுள். இராமன் முடிசூடுவதைத் தடுக்க முனைந்த கூனி, காவிய அரங்கத்திலே தோன்றுவதைக்கூட கம்பர், ''இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல், துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினள்'' என்றுதான் கூறுகின்றார். பின்னர் இலக்குவன் சூர்ப்பணகையின் மூக்கை அறுத்து, மான பங்கம் செய்தான் என்பதையும்,

''உயர் மூக்கினை நீக்கிய முறைமை
மலைதுமித்தென இராவணன் மணியுடை மகுடத்
தலை துமித்தற்கு நாட்கொண்டது ஒத்தது''

என்று தான் கூறுகின்றார். ஏன்? கடைசியிலே இராவணன், இராமன் அம்பால் அடியுண்டு, உயிரற்று விழ்ந்து கிடக்கிறபோதும் அவனது மனைவியாகிய மண்டோதரி,

''காந்தையருக் கணியனைய ஜானகியார்
பேரழகும் அவர்தம் கற்பும்,
ஏந்துபுயத்து இராவணனர் காதலும்
அச்சூர்ப்பணகை இழந்த மூக்கும்,
வேந்தர்பிரான் தயரதனர் பணியினல்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததும் கடைமுறையே புரந்தரனர்
பெருந்தவமாய் போயிற் றம்மா''

என்று அழுது புலம்புவதாகத்தான் கம்பர் கவி அமைக்கிறார். காவிய இலக்கணத்திற்கு எழுந்த இலக்கியமே இந்நூல் என்னும்படி, காவியத்தின் பல அவயவங்களையும், பிரதான அவயவமாகிய இராவண வதத்தோடு இணைத்து, இணைத்து, மொத்தத்தில் பார்க்கும்போது, ''ஏகம்'' என்ற உணர்ச்சியை உண்டாக்கிவிடுகின்றார். இப்படியே காவிய நிர்மாணத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருக்க எனக்கு விருப்பமில்லை, நேரமுமில்லை.

இனி, இக்காவிய மாளிகைக்குள் கொஞ்சம் நுழைந்துதான் பார்ப்போமே. கம்பிரமாக எழுந்து நிற்கும் இந்தக் காவிய மாளிகையிலே தான் என்னென்ன அதிசயங்கள்! எவ்வளவு எவ்வளவு விஸ்தாரமான மண்டபங்கள், அறைகள்! விதானத்திலும், சுவர்களிலும் செய்திருக்கும் நகாஸ்வேலைகள்தாம், எவ்வளவு அழகையும், சோபையையும் அளிக்கின்றன! பெரும்பெரும் கற்பாறைகளை அப்படி அப்படியே பேர்த்தெடுத்து, அவற்றை அப்படியே வைத்துக் கட்டியவான்மீகரது கதா மாளிகையெங்கே? அந்த மாளிகையின் பக்கத்தில், சிற்றுளியின் நயமெல்லாம் தெரியும், வல்லவனுக்கிய சித்திரம்போல், அழகுணர்ச்சியெல்லாம் சம்பூர்ணமாய் நிறைந்து இருக்கும் கம்பன் காவிய மாளிகையெங்கே? (By the side of Valmiki's massive rambling, if at time, gorgeous pile, Kamban's construction stands as a stately pleasure dome of chisseled beauty and finished perfection.) கம்பர் போட்ட அஸ்திவாரம் பலந்தான். கட்டிய மாளிகையும் பெரிதுதான். ஆனல் இந்த கம்பீரமான காவிய நிர்மாணத்திலே, சில்லறை அலங்காரங்களையும் கம்பன் மறந்துவிடவில்லை. (He conceived like a Titan and finished like a jeweller).

காவிய மாளிகையின் கவிதா மண்டபத்தில் அழகை அனுபவிப்பதா? சித்திரசாலை (Picture Gallery)யில் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் சித்திரங்களைக் கண்கொள்ளாது பார்த்துக்கொண்டே நிற்பதா? அல்லது நாடக அரங்கத்திலே வரும் நடிகர்களது நடிப்பிலே மயங்குவதா? என்றுதான் தெரியவில்லை. எப்பக்கம் திரும்பினுலும் மாளிகையின் அழகுகள் நம்மை அப்படியே வசீகரித்துவிடுகின்றன. மாளிகை எப்படி இருக்கிறது என்று விளக்கமாகச் சொல்ல வேண்டுமானுல் அதற்குக் கம்பரது உதவியைத் தான் நாம் நாட வேண்டியிருக்கிறது. இலங்கா நகரத்திலுள்ள மாளிகைகளை வருணிக்கும் கம்பன்,

''பொன் கொண்டிழைத்த, மணியைக்
கொடுபோதிந்த
மின் கொண்டமைத்த, வெயிலைக் கொடு
சமைத்த
என் கொண்டியற்றிய எனத் தெரிகிலாத
வன் கொண்டல் விட்டு மதிமுட்டுவன
மாடம்''

என்று பாடுகிறார். பொன், மணி, மின், வெயில் இவைகளால் ஆக்கப்பட்ட மாளிகைதான் லங்கா நகரத்திலுள்ள மாளிகைகள். ஆனல் இவைகளையெல்லாம்விட இன்னும் பிரகாசமான பொருளாலும், அம் மாளிகைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அப்படி அதிபிரகாசமான பொருள்

என்னவென்று Science இன்னும் கண்டுபிடித்ததாக இல்லை என்று சிந்தித்துக் கொண்டே, ‘‘என் கொண்டியற்றிய எனத் தெரிகிலாத’’ என்று கம்பர் தன் வர்ணனைக்கு முத்தாய்ப்பு வைக்கிறார். இதுபோலத்தான் கம்பர் தனது காவிய மாளிகையை, கவிதா மேதையினாலும், சிற்பியின் திறமையினாலும், நாடகப் பண்பினாலும் கட்டிமுடித்திருக்கிறார் என்று மட்டும் கூறிவிட்டால், அது அவரது காவியமாளிகை கட்டுவதில் கையாண்ட முறைகளை முற்றிலும் விளக்கியதாகாது. இவற்றிற்கெல்லாம் மேலாக ஒரு சக்தி கம்பரிடம் இருந்திருக்கிறது. அந்த சக்தியின் துணை கொண்டே இக்காவிய நிர்மாணம் செய்திருக்கிறார். கைபுனைந்தியற்றாக்கவின் பெறுவலப்புடன் அம்மாளிகை பிரகாசிக்கின்றது. ஆனால் அந்தசக்திதான் என்னவென்று என்னால் சொல்ல முடியவில்லை. ‘‘என் கொண்டியற்றிய எனத் தெரிகிலா’’ என்று கம்பர் சொன்னபடியே நானும் கையைத் தான் விரிக்க வேண்டியிருக்கின்றது. ஒருவேளை அது அவருடைய கலையுணர்ச்சியாக இருக்கலாம். அழகுணர்ச்சியாக இருக்கலாம். அல்லது எல்லாவற்றிற்கும் மேலாக மேதாவிலாசமாகவேயிருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. இத்தகைய மேதா விலாசமுடைய கவிஞன் ஆயிரம் இரண்டாயிரம் வருஷத்திற்கு ஒருமுறையே பிறக்கின்றான். கம்பனுக்குப் பின்னால் தமிழ் இலக்கியவுலகத்தில் ஒரு கவிகுல ஞாயிறு இன்றும் உதயம் செய்யவில்லையென்பது நமக்குத் தெரியாதா?